# பரிசுத்த ஆவியானவர்

Dr. P. V. தியாகராஜ்

“எவர்கள் தேவனுடைய ஆவியினாலே
நடத்தப்படுகிறார்களோ,
அவர்கள் தேவனுடைய
புத்திரராயிருக்கிறார்கள்.”
(ரோமர் 8:14)

Posted :
Deepak
வழங்கியது

# பரிசுத்த ஆவியானவர்

## THE HOLY SPIRIT

**Dr. P. V. தியாகராஜ்**

**Ephrath Publications**

54/A, Lakshmi Apartments,
Sangam Colony, Kottivakkam, Chennai - 600 041.
Phone: 044 - 2492 5464, Mobile: 0-98415 85547
Email: pv_thiagaraj@yahoo.com, info@pvthiagaraj.com
www.pvthiagaraj.com

**First edition : 1997**
**Second edition : March 2013**

**Printed at :**
Captain Print Services,
Kottivakkam, Chennai - 600 041.

# Price : Rs.100/-

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | விலை ரூ. |
|---|---|
| கிருபையின் மேல் கிருபை | *90.00* |
| உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக | *25.00* |
| 1யோவான் - வேதபாடம் | *40.00* |
| மலைப்பிரசங்கம் - விளக்கவுரை | *80.00* |
| ரோமர் - விளக்கவுரை | *350.00* |
| வெளிப்படுத்தின விசேஷம் - விளக்கவுரை | *350.00* |
| எபேசியர் - விளக்கவுரை | *180.00* |
| எபிரெயர் - விளக்கவுரை | *400.00* |

The Book of Revelation -
Commentary in English (Under print)

# பொருளடக்கம்


1. சத்திய ஆவியான தேற்றரவாளர் ............ 9

2. பரிசுத்த வேதாகமத்தில் தேவ ஆவியானவர் ........................ 21

3. ஆதி அப்போஸ்தல சபையில் பரிசுத்த ஆவியானவர் .................... 33

4. ஆவியானவரின் தன்மைகளும் பொதுவான கிரியைகளும் ................ 41

5. இயேசுவின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் .................... 51

6. மனித இரட்சிப்பில் பரிசுத்த ஆவியானவர் .................... 61

7. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் .......... 75

8. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் ........................ 83

9. ஆவிக்குரிய வரங்களின் பொதுவான தன்மைகள் ................ 95

10. ஆவியின் பிரதான வரங்கள் .............. 109

11. ஆவியின் கனி ......................... 139

# ஆசிரியர் உரை

பிதாவாகிய தேவன் மனித இரட்சிப்பைக் குறித்துத் திட்டமிட்டு, தன்னுடைய ஒரே குமாரனை உலகத்துக்கு அனுப்பி வைத்தார் (யோவான் 3:16, கலா 4:5), பிதாவின் சித்தத்துக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தவராய் இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் பாவ நிவாரண பலியாக தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி மரித்தார் (யோவான் 6:38, எபி 10:5-7). மூன்றாம் நாளில் உயிர்த்து பரலோகம் சென்றபின், தான் சம்பாதித்துக்கொண்ட இரட்சிப்பின் நீதியை மனிதர்களுக்கு வழங்கும்படியாக, உலகத்தில் தங்கியிருந்து, அதற்குத் தேவையான கிரியைகளை நடத்தும்படியாக பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார் (யோவான் 14:26, 16:7).

இவ்வாறு பெந்தெகொஸ்தே நாளில் இறங்கிவந்த பரிசுத்த ஆவியானவர் சபையிலும், ஒவ்வொரு விசுவாசிகளுக்குள்ளும் வாசமாயிருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். பரலோகத்தில் பிதாவினால் திட்டமிடப்பட்டு, குமாரனாகிய இயேசுவினால் உலகில் துவக்கப்பட்ட இரட்சிப்பின் கிரியையை ஒவ்வொரு மனிதனுக்குள் நிறைவேற்றுவது பரிசுத்த ஆவியானவரின் பொறுப்பாகும்.

பாவத்தில் மரித்துக்கிடக்கும் மனிதனுக்கு மறுஜென்மத்தின் மூலம் புதிய ஜீவனைக் கொடுப்பது, அவன் பாவத்தின் வல்லமையை மேற்கொள்ள தெய்வீக பெலனைத் தருவது, தேவ சாயலை அவனுக்குள் உண்டாக்குவது, அவன் பெற்றுக்கொண்ட நித்திய ஜீவனை இழந்துவிடாமல் பாதுகாத்துக்கொள்வது, வரங்களினாலும், கனிகளாலும் அலங்கரிப்பது ஆகியவையெல்லாம் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளே ஆகும். தேவனுக்கடுத்த காரியங்களை மனிதன் உலகில் நடப்பிக்கத் தேவையான ஞானத்தையும், வல்லமையையும் அருளுவது பரிசுத்த ஆவியானவரே; அவனை பூமிக்கு சாரமான உப்பாகவும், உலகுக்கு ஒளிதரும் வெளிச்சமாகவும் வீட்டுக்கு தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்காகவும் மாற்றுவது அவரே.

எல்லாவற்றுக்கும் மேலாக தேவனுடைய தெய்வீகப் பிரசன்னத்தை சபையில் கொண்டுவருவது பரிசுத்த ஆவியானவரே. கடந்த பல நூற்றாண்டுகளாக சபைகளில் பரிசுத்த ஆவியானவர் முறைப்படி கனப்படுத்தப்படாததின் விளைவாகவே உலகம் சபையை ஆட்கொண்டதையும், எழுப்புதல் தடைசெய்யப் பட்டதையும் காண்கிறோம்.

நாம் பரிசுத்த ஆவியானவரின் நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். பழைய ஏற்பாட்டு நாட்களில் பிதாவாகிய தேவன் நேரடியாக இஸ்ரவேலர்களுடன் செயல்பட்டார். சுவிசேஷத்தின் நாட்களில் இயேசு மாமிசத்தில் வெளிப்பட்டு இஸ்ரவேலரின் கண்கள் காண அதிசயங்களையும், அற்புதங்களையும் நடப்பித்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள், நிருபங்கள் காலம் துவங்கி இயேசுவின் இரண்டாவது வருகைவரை பரிசுத்த ஆவியானவரே பூமியில் செயலாற்றவேண்டும் என்பது தேவனால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

பிதாவாகிய தேவன் மனிதனை எவ்வளவு நேசித்தார் என்றால், அவனை மீட்டுக்கொள்ளும்படியாகத் தன் ஒரே குமாரனை அனுப்பியதோடு நிறுத்திக்கொள்ளாமல், தன்னுடைய ஆவியையும் கடந்த சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக உலகத்தில் இருக்கும்படியாக அனுப்பியிருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரே 'மறுபடியும் பிறத்தல்' என்ற அனுபவத்தின் மூலமாக ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையைத் துவங்குகிறார். அவர் ஒருவனைச் சந்திக்கும்வரை, தான் ஆவியில் மரித்த நிலையில் இருளில் இருப்பதையும், அதன் விளைவு நித்திய ஆக்கினைத் தீர்ப்பு என்பதையும் அவன் அறிந்துகொள்ளாமலேயே இருக்கிறான். லாசருவைப்போல் கல்லறைக்குள் நாற்றமடிக்கும் நிலையில் இருந்தவர்களில் ஆவியானவர் படிப்படியாகச் செயல்படும்போது, அவர்களிலிருந்து ஜீவ ஊற்றுப் புறப்பட்டு பலருடைய தாகத்தைத் தீர்க்குமாறு அவர்களை உபயோகிக்கிறார், அவர்களை பலருக்கும் ஆசீர்வாதமாக்குகிறார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான் பூமியின் இருந்த நாட்களில் திருத்துவத்தின் இரண்டாவது நபர் என்ற முறையில் எந்தக் கிரியையையும் நடப்பிக்கவில்லை. திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரே அவருக்குள் இருந்து செயல்பட்டார்.

ஆதி அப்போஸ்தல சபையின் நாட்களில் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்துக்கு வந்தபோது ஆவியானவரைக் குறித்துச் சபை விசுவாசிகளிடம் "நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்" (அப் 19:2). பவுல் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார் என்பதை யோசித்துப் பாருங்கள்.

இன்றும் பெரும்பாலான பாரம்பரிய சபைகளில் விசுவாசிகள் திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளை அறிவதிலும், அவருடைய அபிஷேகத்தை அனுபவிப்பதிலும் போதுமான அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைப் பார்க்கிறோம். இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பெந்தெகொஸ்தே மற்றும் கரிஸ்மாட்டிக் ஆவிக்குரிய அனுபவங்கள் பிரபலமடைந்தபின்பும் விசுவாசிகளும் ஊழியக்காரர்களும் ஆவிக்குரிய வரங்களின்மேலும், ஆவியின் கனிகளின் மேலும் கவனம் செலுத்தினார்களே தவிர இவற்றை சபைக்கு அருளிச்செய்யும் பரிசுத்த ஆவியானவரை அறிந்து அவரை மகிமைப்படுத்தத் தவறிவிட்டார்கள்.

பரிசுத்த ஆவியானவர் யார்? அவருடைய ஆள்தத்துவம் எப்படிப்பட்டது? சிருஷ்டிப்பின் நாள்துவங்கி அவர் நடப்பித்துவரும் பலவிதமான கிரியைகள் என்ன? பரிசுத்த வேதாகமத்தின் முதலாம் வசனம்துவங்கி கடைசிவசனம் வரை அவருடைய செயல்பாடுகள் என்ன? இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் அவருடைய பிறப்புதுவங்கி உயிர்த்தெழுதல்வரை அவருடைய பங்கு என்ன? பெந்தெகொஸ்தே நாள்துவங்கி ஆதிஅப்போஸ்தல சபையை அவர் நடத்திய விதம் என்ன? பாவமனிதனுடைய இரட்சிப்பில் ஆவியானவரின் பங்கு என்ன? மறுபடியும் பிறத்தல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், ஆவியினால் நிரப்பப்படுதல் ஆகிய ஆவிக்குரிய அனுபவங்களின் தன்மைகள் என்ன? பரிசுத்த ஆவியின் வரங்கள், ஆவியின் கனிகள் ஆகியவற்றை ஆவியானவர் செயல்படுத்தும் பின்னணி என்ன?

இந்தச் சத்தியங்களைக் குறித்த சரியான வெளிப்பாடு நமக்கு இருந்தால்தான் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை தேவன் விரும்பும்வண்ணம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும். பரிசுத்த ஆவியானவரைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்ன சொல்லியிருக்கிறார்? (சுவிசேஷங்கள்). சபையின் துவக்க நாட்களில் ஆவியானவர் எவ்வாறு செயல்பட்டார்? (அப்போஸ்தலருடைய நடபடிகள்). அவரைக் குறித்து பவுல், பேதுரு, யோவான் போன்ற அப்போஸ்தலர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள்? (நிருபங்கள்) என்பதை அறிந்துகொள்ளும் முயற்சியே இந்தப் புத்தகம்.

சென்னை புதுவாழ்வு A.G. சபைக் கல்வித் திட்டத்தில் “பரிசுத்த ஆவியானவர்” என்ற வேதபாடத்தை எடுக்கும்படியான வாய்ப்பை அந்நாட்களில் எனக்குக் கொடுத்த தேவனுக்கு நான் நன்றி சொல்கிறேன். அந்தப் பாடக்குறிப்புகளை புத்தகவடிவில் கொண்டுவரும் வாஞ்சையையும் அவரே எனக்குத் தந்தார். ஆவியானவர் தந்த தெய்வீக ஞானத்துக்கும் பரிசுத்த

ஆவியானவரைக் குறித்த வெளிப்பாடுகளுக்கும் அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

கத்தோலிக்கக் கிறிஸ்தவ பாரம்பரியங்களில் மூழ்கிக்கிடந்த என்னையும் எனது முழுக்குடும்பத்தையும் தன்னுடைய கிருபையினால் இரட்சித்த தேவன் பல வேத விளக்கவுரைகளையும், ஆவிக்குரிய புத்தகங்களையும் எழுதி வெளியிட உதவிசெய்தார். பல்வேறு இடங்களில் வேதபாடம் எடுக்கும் கிருபையையும் கொடுத்தார். தேவன் என்னைத் தெரிந்துகொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அவர் ஒருவரே மகிமைப்படுவாராக.

எங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளைத் தந்து, ஜெபித்து உற்சாகமூட்டும் புதுவாழ்வு A.G. சபைத் தலைமைப் போதகர் பாஸ்டர் D.மோகன் அவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். இந்தப் புத்தகத்தை எழுதியபோது பல ஆலோசனைகளைக் கொடுத்த கன்மலை கிறிஸ்து சபைப் போதகர் பாஸ்டர் ராஜ்குமார் இக்னேஷியஸ் அவர்களையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.

2009ல், என்னுடைய 66-வது வயதில் மாரடைப்பு ஏற்பட்டு உயிருக்கே ஆபத்தான நிலையில் அப்பொல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். இருதய இரத்தக் குழாய்களில் பதினொரு அடைப்புகள் இருந்ததையும், இருதய வால்வு முற்றிலுமாக சேதமடைந்திருந்ததையும் மருத்துவர்கள் கண்டுபிடித்தார்கள். உயிர்பிழைக்க நூற்றுக்குப் பத்து சதவீதம் தான் வாய்ப்பு இருக்கிறது என்பதினால் அறுவைசிகிச்சை செய்யத் தயங்கினார்கள். 15-10-2009ல் திறந்த நிலை இதய அறுவைச் சிகிச்சை (Coronery by-pass graft surgery with aortic valve replacement) நடந்தது. மருத்துவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் உபாகமம் 30:22ன் படி தேவனே எனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமாயிருந்தார். இன்டென்சிவ் கேர் யூனிட் வார்டில் இருந்த எனக்கு சுயநினைவு வந்த வேளைகளில் எல்லாம், "தேவனே, நீர் எனக்கு நியமித்த வேலைகளை எல்லாம் செய்துமுடிக்க பெலன்தாரும்" என்பதுதான் என்னுடைய உள்மனதின் ஜெபமாக இருந்தது. பொருத்தனையோடு கூடிய எனது ஜெபத்தை தேவன் அங்கீகரித்தார்.

நம்மைக் குறித்த ஒரு நோக்கத்தை தேவன் வைத்திருப்பாரானால், அதை நிறைவேற்றிமுடிக்கும்வரை நமக்கு மரணம் இல்லை என்பதை அறிந்துகொண்டேன். மரணத்தின் வாயிலிலிருந்து தேவன் என்னை மீட்டுவந்த மூன்றாம்

மாதத்திலிருந்து அவர் எனக்குத் தந்த கிறிஸ்தவ எழுத்துப்பணியைத் திரும்பவும் ஆரம்பித்தேன்.

2010ல் எபேசியர் விளக்கவுரை புத்தகத்தை எழுதி வெளியிட்டேன். தொடர்ந்து எபிரெயர் விளக்கவுரையை எழுத ஆரம்பித்தேன். 2011ல் ரோமர் விளக்கவுரை 2-வது பதிப்பும், 2012ல் வெளிப்படுத்தின விசேஷம் விளக்கவுரை 3-வது பதிப்பும், கிருபையின் மேல் கிருபை (Revised edition) வெளிவந்தன. 2012ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1100 பக்கங்களுடன் எபிரெயர் விளக்கவுரை புத்தகத்தை வெளியிட தேவன் உதவி செய்தார். தற்போது 2013ல் பரிசுத்த ஆவியானவர் 2-வது பதிப்பு இன்று உங்கள் கைகளில் இருக்கிறது.

தேவ ஆலோசனையின்படி "உனக்காக நான் மரித்தேன்" என்ற தலைப்பில் கிறிஸ்துவின் சிலுவை உபதேசத்தைக் குறித்த புத்தகம் ஒன்றை எழுதிக்கொண்டிருக்கிறேன்.

எங்கள் குடும்பத்துக்காகவும், நாங்கள் செய்துவரும் ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கும் சகோதர சகோதரிகள் பியூலா ஜாண், செல்வகுமாரி, மேரி அமிர்தராஜ், அனிட்டா சாமுவேல் ஆகியோருக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

எனக்குத் துணைநின்று, சோர்வடையும் நேரங்களில் உற்சாகப்படுத்தி, ஜெபித்து, ஆலோசனைகள் கொடுத்து, பிழைதிருத்தங்கள் செய்துகொடுத்த என் அன்பு மனைவி பிரிசில்லாவுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

இந்தப் புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியானவரின் மகிமையை உணர்ந்துகொண்டவர்களாய் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே என்னுடைய நம்பிக்கையும் வாஞ்சையும் ஜெபமும்.

"பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக" (ரோமர் 15:13). ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

Phone : 98415 85547, 2492 5464
Email: pv_thiagaraj@yahoo.com
Web: www.pvthiagaraj.com

**P.V. தியாகராஜ்**

# 1

## சத்திய ஆவியான தேற்றரவாளர்

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்ற வசனத்துடன் யோவான் 14வது அதிகாரம் தொடங்குகிறது. இந்த அதிகாரத்தில் மிகச் சிறந்த, மிகவும் ஆறுதல் அளிக்கும் இயேசுவின் அருளுரை அடங்கியுள்ளது. அவருடைய மரணத்துக்கு முந்தின நாள் துக்கத்தோடும், தங்கள் எதிர்காலத்தைக் குறித்த அச்சத்தோடும், கலக்கத்தோடும் தன்னைச் சூழ்ந்திருந்த சீஷர்களிடம் அவர்கள் பயப்படவேண்டியதில்லை என்பதற்கான பத்து காரணங்களை இயேசு கூறுகிறார்.

அவைகளில் மிகவும் முக்கியமானது பரிசுத்த ஆவியானவரின் வருகையைக் குறித்தது. "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்போழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும், அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம் பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (யோவான் 14:16-18).

புதிய ஏற்பாட்டுக் கிருபையின் நாட்களில் விலைமதிப்பற்ற ஈவாகிய பரிசுத்த ஆவியானவரை உலகத்துக்குத் தருவதே பிதாவினுடைய சித்தம் என்றாலும், அந்தப் பெரிதான வரத்தை தன் சீஷர்களுக்காக, தன் குமாரனாகிய இயேசு கேட்கவேண்டும் என்று பிதாவாகிய தேவன் விரும்புகிறார். "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்" என்றுதான் சொல்லுகிறார். ஏற்கெனவே வேண்டிக்கொண்டதாக அவர் சொல்லவில்லை. உலகின் பாவ நிவாரணபலியாக தன்னை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்த பின்புதான் அவர் ஜெபிக்கவேண்டியதிருக்கிறது. அடுத்ததாக இந்த மேலான ஆசீர்வாதத்தைப் பெற தன் சீஷர்களைத் தகுதிப்படுத்திய பிறகுதான் இந்த வரத்தைக் கொடுக்கவேண்டியதிருக்கிறது.

விசுவாசிகளாகிய நாம் எதினிமித்தம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்கிறோம் என்பதை தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். அவரைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று நாம் ஜெபித்தோம், உபவாசித்தோம் என்பதினால் அல்ல. நம்முடைய நற்கிரியைகளினால் அல்ல. காத்திருப்புக் கூட்டங்களில் கலந்துகொண்டோம் என்பதினால் அல்ல, பெந்தெகொஸ்தே சபை ஆராதனைகளில் கலந்துகொண்டோம் என்பதினால் அல்ல, ஊழியக்காரர்கள் தலையில் கை வைத்து ஜெபித்தார்கள் என்பதினால் அல்ல, இவைகள் எல்லாம் நல்லதுதான். எல்லாவற்றையும் விட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயேசு சத்திய ஆவியாகிய தேற்றவாளரை விசுவாசிகளாகிய நாம் இந்த நாளில், இந்த நேரத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜெபித்தார். அதன் விளைவாகவே ஆவியானவர் நம்மோடு வாசம்பண்ணி, நமக்குள் இருக்கிறார்.

சில மணி நேரம், சில நாட்கள், சில மாதங்கள், சில ஆண்டுகள் நம்மோடிருக்கும் படியாக ஆவியானவர் வழங்கப்படவில்லை என்பதையும் இந்த வசனத்திலிருந்து அறிகிறோம். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு இவ்வண்ணமாகவே, சில குறிப்பிட்ட ஊழியங்களைச் செய்து முடிக்கும் படியாக பரிசுத்த ஆவியானவர் வழங்கப்பட்டார் என்பது உண்மைதான். நம்முடனோ அவர் என்றென்றைக்கும் இருப்பார். ஒருவேளை நம்முடைய நற்கிரியைகள், பரிசுத்த ஜீவியம், கீழ்ப்படிதல் ஆகியவற்றினிமித்தம் நாம் அவரைப் பெற்றுக்கொண்டிருப்போம் என்றால் அவைகளில் குறைவு ஏற்படும்போது அவரை இழந்துவிடும் ஆபத்து உண்டு. ஆனால் நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசுவின் திட்டவட்டமான, .நேரடியான வேண்டுதலுக்கு பிதா பதில் அளித்ததின் விளைவாக அல்லவா நாம் ஆவியானவரைப் பெற்றிருக்கிறோம்.

திரித்துவ தேவனின் மூன்றாவது நபராகிய ஆவியானவரை சத்திய ஆவியானவர் என்று இயேசு அழைக்கிறார். சத்தியம் அவரிடம் உண்டு என்பதினால் சத்தியத்தை மட்டுமே அவர் போதிப்பார். எனவே ஆவியானவர் வெளிப்படுத்தும் எந்த காரியத்தையும், எந்த கேள்வியும் கேட்காமல் நாம் ஏற்றுக்கொள்ளலாம். அவரின்றி சத்தியமில்லை.

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6) என்று அறிவித்த இயேசு ஆவியானவரைக் குறித்து இவ்விதமாகச் சொல்லுகிறார். ''சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற

காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோவான் 16 : 13, 14).

புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்தும் பொறுப்பு யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். யாருடைய சத்தியங்களை அவர் அறிவிக்கப் போகிறார்? எந்தவிதமான புதிய சத்தியங்களும் அல்லது உபதேசங்களும் ஆவியானவரிடமிருந்து வெளிப்படுவதில்லை. சுயமாக அவர் எதையுமே பேசப்போவதில்லை. ஏனென்றால் இயேசுவை மகிமைப்படுத்துவது அவருடைய ஊழியங்களில் பிரதானமானது. இயேசுவிடமிருந்து வெளியான சத்தியங்களையே அவர் அறிவிப்பார்.

எனவே இயேசுவை மகிமைப்படுத்தாத எந்த சபையிலும், அல்லது வேத சத்தியங்களுக்கு எதிர்மறையான போதனைகளைப் போதிக்கும் எந்தக் கூட்டங்களிலும் சத்திய ஆவியானவரின் அசைவாடுதலைக் காணமுடிவதில்லை.

"வேறொரு தேற்றரவாளர்" என்று இயேசு சொல்லுவதினால் ஏற்கனவே ஒரு தேற்றரவாளர் உலகில் செயல்பட்டார் என்பது தெளிவாகிறது. அது வேறு யாரும் அல்ல. இயேசு கிறிஸ்துவே. தேற்றரவாளர் என்ற வார்த்தையின் கிரேக்க பதமான **Parcelate** என்றால் ஆறுதல் அளிப்பவர் **(comforter)**, பரிந்து பேசுபவர் **(advocate)**, துணையாளர் **(helper)** என்று பொருள் கொள்ளலாம். எந்த ஆபத்தான சூழ்நிலையிலும் அவர் நமக்கு உதவி செய்கிறார். இஸ்ரவேரின் ஆறுதல் (லூக்கா 2:25) என்று அழைக்கப்பட்ட இயேசு தான் பூமியில் வாழ்ந்த நாட்களில் எல்லோருக்கும் ஆறுதலை வழங்கினார். அதே நேரத்தில் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவான் 2:1) என்ற வசனத்தின்படி நம்முடைய வழக்கறிஞராகவும் செயல்படுகிறார்.

இப்பொழுதோ தான் பரலோகத்துக்குத் திரும்பிச் செல்வதினால், தன்னுடையவர்களைத் திக்கற்றவர்களாக விடவிரும்பாத இயேசு அடுத்த தேற்றரவாளரை தன்னுடைய இடத்தில் ஆயத்தம் பண்ணுகிறார். அவர் சொல்லுகிறார் "அதிபதிகளுக்கு முன்பாகவும் இராஜாக்களுக்கு முன்பாகவும், அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும், கவலைப்படாதிருங்கள். நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" (மத் 10:19, 20).

ஆவியானவர் ஒரு வழக்கறிஞராக, நம்முடைய சார்பில் அதிபதிகள் முன்பாக நின்று பேசுகிறார் என்பது மட்டுமல்ல, நம்முடைய சார்பில் பிதாவிடமும் வேண்டுதல் செய்கிறார். "ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின் படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" (ரோமர் 8:26, 27).

பிதாவானவர் தேற்றரவாளரை யாருக்குத் தரப்போகிறார் என்பதை இயேசு அடுத்ததாகக் குறிப்பிடுகிறார். 'உங்களுக்கு' என்று தன்னுடைய சீஷர்களைப் பார்த்து இயேசு சொல்லுகிறார். உலகத்துக்கு அல்ல, இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் மட்டுமே ஆவியானவரைப் பெறமுடியும். உடனடியாக உலகத்தைப் பற்றிப் பேசும் இயேசு மூன்று காரியங்களைச் சொல்லுகிறார்.

1) உலகம் பரிசுத்த ஆவியானவரைக் காணாது.

2) உலகம் பரிசுத்த ஆவியானவரை அறியாது.

3) உலகம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது.

'உலகம்' என்று இயேசு இங்கே குறிப்பிடுவது தேவனால் ஆறு நாட்களில் படைக்கப்பட்ட வானத்தையும், பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளில் உள்ளவைகளையும் அல்ல. இந்த உலகத்தில் தேவனையும் அவருடைய சித்தத்தையும் எதிர்த்து ஒரு வல்லமையான சக்தி செயல்பட்டுக்கொண்டே இருக்கிறது. உலகத்தின் அதிபதி என்று அழைக்கப்படும் பிசாசானவனே அதன் தலைவன். மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் (1 யோவான் 2:16) அழிந்துபோகும். உலகத்து மனிதர்களுக்கும் ஆவியானவருக்கும் சம்பந்தம் இல்லை. வேதம் சொல்லுவதுபோல் "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரி 2:14).

ஆனால் இயேசு சொல்லுவதென்ன? என் சீஷர்களாகிய "நீங்கள் அவரை அறிவீர்கள்." எதனால் அறிவீர்கள் என்பதையும் அவரே

சொல்லுகிறார். ஆவியானவரைக் குறித்து கேள்விப்படுவதினால் அவரை அறிவீர்கள் என்று இயேசு சொல்லவில்லை. அவரை அறிந்து கொள்ளவேண்டும் என்று ஜெபிப்பதினால், உபவாசிப்பதினால் அறிவீர்கள் என்று சொல்லவில்லை, அவருடைய வெளிப்படையான கிரியைகளை, வரங்களின் செயலாற்றலை உற்றுநோக்குவதினால் அறிவீர்கள் என்றும் சொல்லவில்லை. "அவர் உங்களுடனே வாசம் பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்" என்கிறார். அதாவது பரிசுத்த ஆவியானவரை தங்களுக்குள் வாசம் பண்ணும்படியாக பெற்றுக்கொண்டவர்கள்தான் அவரை முழுமையாக அறிய முடியும்.

1) உங்களுடனே வாசம் பண்ணி **(with you)**

2) உங்களுக்குள் இருப்பதினால் **(in you)**

ஆகிய இரண்டு வித்தியாசமான அனுபவங்களை இயேசு குறிப்பிடுகிறார். தேவ ஆவியானவர் நம்மோடு, நமக்கு நெருக்கமாக, நம் அருகில் இருப்பது அல்லது, அதைவிட மேலான ஒரு அனுபவம் என்னவென்றால் நம்முடைய உள்ளான ஆள்தத்துவத்தில், நம்முடைய சரீரத்தை தன்னுடைய ஆலயமாக மாற்றி, அவர் நமக்குள் இருப்பது. இயேசு சரீரத்தில் வெளிப்பட்டிருந்த நாட்களில் தன்னுடைய சீஷர்களோடுதான் இருந்தார். அவர்களுக்குள் இருக்கமுடியவில்லை. ஆவியானவரோ இந்த இரண்டு காரியங்களையும் செய்கிறார்.

பரிசுத்த ஆவியாகிய துணையாளர் என்றென்றைக்கும், நாம் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிமிடம் வரை நம்மோடும், நமக்குள்ளும் இருக்கவேண்டியதிருக்கிறது. ஒரு விசுவாசி அல்லது தேவ ஊழியர் தன்னுடைய வாழ்க்கையில் எவ்வளவு முதிர்ந்த ஆவிக்குரிய மேலான வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும், அவர்களில் ஆவியானவர் சகல கிரியைகளையும் நடத்தி முடித்துவிட்டார், இனி ஆவியானவர் அவருக்கு அவசியமில்லை என்ற நிலை ஒருநாளும் உண்டாகப் போவதில்லை.

இதுவரை சத்திய ஆவி என்று இயேசுவால் அழைக்கப்பட்டவர் யோவான் 14:26ல் பரிசுத்த ஆவி என்று குறிப்பிடப்படுகிறார். "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்". நிக்கொதேமுவினால், தேவனிடத்திலிருந்து வந்த போதகர் (யோவான் 3:2) என்று அழைக்கப்பட்ட இயேசு இங்கே

ஒரு போதிக்கிற தேற்றரவாளரை அறிமுகப்படுத்துவதைக் கவனியுங்கள். இயேசு படிப்படியாக தனக்கும் சீஷர்களுக்குமிடையே இருந்த உறவை பரிசுத்த ஆவியானவருக்கும் சீஷர்களுக்குமிடையே மாற்றிக் கொண்டிருக்கிறார்.

ஆவியானவர் தன்னில்தானே பரிசுத்தர் மட்டுமல்ல, அவர் யாரோடு, யாருக்குள் வாசம் செய்கிறாரோ அவரைப் பரிசுத்தப்படுத்துகிறவராகவும் இருக்கிறார் (sanctifier). பவுல் அவரை 'பரிசுத்தமுள்ள ஆவி' (ரோமர் 1:5) என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

தன்னுடைய ஜெபத்தினால் பிதாவினால் தந்தருளப்படும் ஆவியானவர் என்று குறிப்பிட்ட இயேசு, இங்கு தன்னுடைய நாமத்தினாலே பிதாவினால் அனுப்பப்படவிருப்பவர் என்று சொல்லுகிறார். இயேசுவினுடைய அதிகாரத்தினால், அவருக்குப் பதிலாக, அவருடைய பிரதிநிதியாக, அவர் நிமித்தமாக ஆவியானவர் செயல்படுகிறார் என்பதை இது குறிப்பிடுகிறது.

**1) போதிப்பது**

**2) நினைப்பூட்டுவது**

ஆகிய இரண்டு பொறுப்புகள் பரிசுத்த ஆவியானவருக்குத் தரப்படுகிறது. முதலாவதாக தன்னுடைய அபிஷேகத்தின் மூலமாக தேவனுக்கடுத்த சத்தியங்களைப் போதிப்பார். யோவான் சொல்லுவதுபோல "நீங்கள் அவராலே (கிறிஸ்து) பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டியதில்லை, அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக" (1 யோவான் 2:27). அபிஷேகத்தின் போதனைகளே ஒருவனை கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கச் செய்யும்.

எல்லாவற்றையும் அவர் போதிப்பார் என்பதினால், இரட்சிக்கப்பட, இரட்சிப்பில் நிலைத்திருக்க, இறுதியில் நித்திய ஜீவனைப் பெற தேவையான எல்லா ஆலோசனைகளையும் ஆவியானவரிடமிருந்தே பெற்றுக்கொள்ளுகிறோம்.

தேவனுக்கடுத்த காரியங்களை மற்றவர்களுக்கு உபதேசிக்கவேண்டும் என்று விரும்புகிறவர்கள் முதலாவது ஆவியானவரால் போதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் பரிசுத்த ஆவியானவர் இயேசுவால் அறிவிக்கப்பட்ட சத்தியங்களை நமக்கு நினைப்பூட்டுவார். தேவனுக்கடுத்த உண்மைகளை பொதுவாக நாம் எளிதில் மறந்துவிடும் தன்மையுள்ளவர்களாக இருக்கிறோம். ஆவியானவரோ அவைகள் மனதில் பதியவும் உதவி செய்கிறார். நம்முடைய ஆவிக்குரிய கண்களைத் திறந்து வேதசத்தியங்களின் மகத்துவத்தை நாம் காணச் செய்கிறார்.

### 3) *சாட்சி கொடுப்பது*

என்ற மூன்றாவது பணியையும் ஆவியானவர் செய்யவிருக்கிறார் என்பதை யோவான் 15:26ல் இயேசு அறிவிக்கிறார். "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்."

பிதா உங்களுக்கு தந்தருளும் ஆவியானவர், பிதா அனுப்பப்போகிற ஆவியானவர் என்று முந்தின வசனங்களில் குறிப்பிட்ட இயேசு இங்கு நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடமிருந்து புறப்படுகிறவரும் என்று இங்கு சொல்லுகிறார். தான் கண்ட, அனுபவித்த ஒரு காரியத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதே சாட்சி கொடுப்பதாகும். இயேசுவை நித்தியகாலமாக அறிந்த பரிசுத்த ஆவியானவர் அவரைக் குறித்த சாட்சி கொடுப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. நமக்கு வெளியே இருந்து மட்டுமல்ல, நமக்கு உள்ளே இருந்தும் சாட்சி கொடுக்கப்படுகிறது. எந்த ஒரு மனிதன் கொடுக்கும் சாட்சியையும் விட மிகச் சிறந்த முறையில், எல்லோரும் புரிந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் இந்த சாட்சி அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் இது தெய்வீக சாட்சி.

இயேசு மேலும் சொல்லுகிறார் "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜன-மாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" (யோவான் 16:7).

கர்த்தராகிய இயேசு இரத்தம் சிந்தி, மரித்து, கல்வாரி வழியாக பரலோகத்துக்குச் செல்லவிருக்கிறார். சிலுவை மரணம் மட்டுமே மனிதர்களை இரட்சிப்புக்கும், பரிசுத்த ஆவியின் நிறைவைப்

பெற்றுக்கொள்வதற்கும் தகுதிப்படுத்துகிறது. உலகத்தின் பாவங்களை நீக்கும்படியாக பாவநிவாரண பலியாக மரித்த அவர் மூன்றாம் நாள் உயிர்த்து, எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தைப் பெற்றவராய் பரலோகம் சென்று, பிதாவின் வலதுபாரிசத்தில் மாட்சிமை நிறைந்த சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். அப்போது திறக்கப்பட்ட பரலோக ராஜ்யத்தின் வாசல்கள் வழியேதான் ஆவியானவர் பூலோகத்துக்கு இறங்கவேண்டும். இயேசுவின் மரணத்தினால் மனித இனம் பிதாவிடமிருந்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளாத நிலையில் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும் தகுதி யாருக்கும் கிடையாது. அதனால்தான் "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்று யோவான் 7:39 சொல்லுகிறது.

### 4) உலகத்தைக் கண்டித்து உணர்த்துதல்

ஒரு முக்கியமான கடமையை பரிசுத்த ஆவியானவர் செய்யவிருக்கிறார். இயேசு சொல்லுகிறார். "அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." (யோவான் 16:8)

கண்டித்து உணர்த்துவது - அதுவும் பாவத்தில் மூழ்கிக்கிடக்கும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவது என்பது எளிதான ஒரு காரியம் அல்ல. மனிதன் செய்யக்கூடிய காரியமும் அல்ல. பரிசுத்த ஆவியானவர் ஒருவனுக்கு பாவ உணர்வைக் கொடுக்கும்போது மட்டுமே அவன் மனந்திரும்ப முடியும். தான் தவறான பாதையில் நடந்துகொண்டிருக்கிறேன் என்ற உணர்வை ஆவியானவர் மட்டுமே மனிதனுக்குத் தரமுடியும். மனந்திரும்பிய ஒரு மனிதனே கிறிஸ்தவனாக முடியும். (அப் 2:38) எனவே இந்த கிரியைகளை இரட்சிக்கப்படாதவர்கள் மத்தியில் ஆவியானவர் நடப்பிக்கிறார் என்பதைப் பார்க்கிறோம். அவர்களுக்கு பாவத்தைக் குறித்து உணர்த்துபவர் தொடர்ந்து, நீதி, நியாயத் தீர்ப்பைக் குறித்தும் நிச்சயமாக உணர்த்துவார். பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகள் மத்தியில்தான் கிரியை நடத்துவார் என்பதல்ல, அவிசுவாசிகளை விசுவாசிகளாக்கவும் அவர் செயல்படுகிறார்.

பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகிய மூன்று காரியங்களை அவர் உணர்த்துவார் என்று முதலாவது பொதுவாக இந்த வசனத்தில் இயேசு சொல்லுகிறார். நாம் பாவம் செய்யும்போது அதைச் சுட்டிக்காட்டுவது பரிசுத்த ஆவியானவரே. நீதியைச் செய்யும்போது தொடர்ந்து

நீதியைச் செய்யும்படியாக நம்மை உற்சாகப்படுத்துவதும் அவரே. இவ்விதமாக நம்முடைய பெலவீனங்களையும் நம்முடைய பெலனையும் அவர் அறிந்தவர். அவற்றின் அடிப்படையில் நியாயத்தீர்ப்பு செய்பவரும் அவரே. அவர் ஒருவரே நம்முடைய உள்ளான சிந்தனைகளையும் வெளிப்படையான செயல்பாடுகளையும் அறிந்தவர். இந்த வசனம் கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகுந்த ஆறுதலைத் தருவதாக இருக்கிறது.

யோவான் 16:9,10,11, வசனங்களில் கிறிஸ்து ஒரு புதிய தத்துவத்தைத் தருவதைப் பார்க்கிறோம். ''அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயத் தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.'' பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவற்றைக் குறித்த விளக்கத்தை இயேசு அறிவிக்கிறார்.

பாவமும் நீதியும் எதிர்மறையான வார்த்தைகள். எங்கே பாவம் இல்லையோ அங்கே நீதி இருக்கும். எங்கே நீதி இல்லையோ அங்கே பாவம் இருக்கும். ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளப்போகிற நியாயத்தீர்ப்பு அவனில் காணப்படும் பாவம், நீதி இவைகளின் அடிப்படையில்தான் அமைந்திருக்கும். ஒருவனுடைய வாழ்க்கையில் பாவம் நீதியை மேற்கொண்டிருந்தால் ஆக்கினையான நியாயத்தீர்ப்பு நிச்சயம். நீதி பாவத்தை மேற்கொண்டிருக்குமானால் நியாயத்தீர்ப்பில் அவனுக்கு விடுதலை நிச்சயம்.

பாவத்தைக் குறித்த குற்ற உணர்வை உண்டாக்குவது பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான கிரியைகளில் ஒன்று. வேதத்தில் ஐந்து இடங்களில் பாவப்பட்டியல் சொல்லப்பட்டிருக்கிறது. (ரோமர் 1:29-31, மாற்கு 7:22,23, கலா 5:19-21, 1 தீமோ 1:9-10, 2 தீமோ 3:2-5). ''என்னை விசுவாசியாதபடியால் பாவத்தைக் குறித்து என்று ஒருமையில் இயேசு சொல்லுகிறார். பாவங்களைக் குறித்து'' அல்ல, அப்படியானால் பொருள் என்ன? உலகத்திலேயே மிகப்பெரிதான பாவம் அவரை விசுவாசியாமல் இருப்பதுதான். ஏனென்றால் மேற்கண்ட பட்டியலின் படி அத்தனை பாவங்களையும் ஒருவன் ஒருமித்துச் செய்திருந்தாலும் இயேசுவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளும் போது அவைகள் மன்னிக்கப்படுகிறது. கிறிஸ்துவையும் அவர் தரும் இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ளாமலும் இருப்பது மட்டுமே பாவம் என்ற வெளிச்சத்தை ஆவியானவர் ஒருவரே உலகத்துக்குக் கொடுக்க முடியும்.

அதனால்தான் இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்ட சிறைச்சாலைக்காரனுக்கு பவுலினால் சொல்லப்பட்ட பதில் 'நீ பாவம் செய்யாதே' என்பதல்ல ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' (அப் 16:30,31). கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசம் - கிறிஸ்து தனக்காக, தன்சார்பில் மரித்தார் என்ற நம்பிக்கையே இரட்சிப்பை வழங்குகிறது. (ஆசிரியரின் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்' என்ற புத்தகத்தில் இந்த சத்தியம் விளக்கப்பட்டிருக்கிறது).

பரிசுத்த ஆவியானவர் உணர்த்துகிற சத்தியம் இதுதான். ஆதாமின் பாவம் முதல்கொண்டு உலகத்தில் செய்யப்பட்ட எல்லா பாவங்களுமே கிறிஸ்துவின் பாடு மரணத்தினால் பாவநிவாரணம் செய்யப்பட்டாயிற்று. மன்னிக்கப்பட்டாயிற்று. எனவே அவரை ஏற்றுக்கொள்ளாத ஒரு பாவமே நிவாரணமற்ற பாவமாகிறது. அதனால்தான் யோவான் 3:18 சொல்லுகிறது, ''அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான், விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேரான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.''

இரண்டாவதாக, இயேசு பிதாவிடம் போகிறபடியால் நீதியைக் குறித்த உணர்வை பரிசுத்த ஆவியானவர் கொடுக்கிறார் என்பதைப் பார்க்கிறோம். அவர் பரலோகம் போகிறார் என்பதினால் இங்கே இரட்சிப்பின் கிரியையை நடத்தி முடித்துவிட்டார் என்று பொருள். இயேசு தன் சீஷர்களுடன் இருந்த நாட்களில் யாரும் அவர்களுக்கு நீதியைக் குறித்து உணர்த்த வேண்டியதில்லை. அவர் ஒருவரே நீதிபரர். ஆனால் இனி யாரும் காணக்கூடாதபடிக்கு - அதாவது தன்னுடைய, மரணத்தினால் அவர் பரலோகம் செல்கிறார். உலகத்தின் எல்லா பாவங்களையும் தன்மேல் ஏற்று கல்வாரியில் மரித்த அவர் தன்னை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களுக்குத் தேவையான எல்லா நீதியையும் சம்பாதித்து வைத்துவிடுகிறார். இந்த நீதி இலவசமாக, கிருபையாக வழங்கப்படுகிறது என்பதை உணர்த்துவது பரிசுத்த ஆவியானவர்.

நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதே நீதி (உபா 6:25). சீனாய் மலையில் மட்டும் 613 பிரமாணங்கள் கொடுக்கப்பட்டன. தன்னுடைய கீழ்ப்படிதல் மூலமாக ஒருவன் நீதியைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் ''ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும்

கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும், குற்றவாளியாயிருப்பான்.'' (யாக் 2:10). எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்த ஒரே மனிதன் இயேசு. அவரிடத்தில் பாவமில்லை என்பதினால் அவர் சம்பாதித்த நீதி அவருக்குத் தேவையில்லை. அவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்களுக்கு அந்த நீதி பரிசுத்த ஆவியானவரால் உணர்த்தப்பட்டு, வழங்கப்படுகிறது. எனவே கிரியைகளினால் வரும் நீதியை அல்ல, கிறிஸ்துவிடமிருந்து பெறும் ''நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையே'' (ரோமர் 5:17) ஆவியானவர் உணர்த்தி விசுவாசிகளுக்குப் பகிர்ந்தளிக்கிறார்.

மூன்றாவதாக, உலகத்தின் அதிபதி கல்வாரியில் நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் உணர்த்துவார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்வாரியில் சாத்தான் வெற்றியடைந்ததைப் போல காணப்பட்டாலும் ''மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தனது மரணத்தினால்'' (எபி 2:14) இயேசு அழித்தார். அவன் நியாயந்தீர்க்கப்பட்டான். பாவத்துக்கான பரிகாரம் செலுத்தப்பட்டாயிற்று. நமக்குப் பதிலாக கிறிஸ்து மரித்துவிட்டார் (2 கொரி 5:14) எனவே பிசாசுக்கு நம்மேல் எந்த அதிகாரமும், உரிமையும் கிடையாது. அவன் தோற்கடிக்கப்பட்டவன். கிறிஸ்துவின் நீதியை ஏற்றுக் கொண்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை. (ரோமர் 8:1) அவர்களை நியாயந்தீர்க்க முயன்ற சாத்தானுக்கே ஆக்கினைத் தீர்ப்பின் அத்தனை அகோரமும் உரித்தானது.

**5) சத்தியங்களுக்குள் நடத்துவது**

**6) வரப்போகிற காரியங்களை அறிவிப்பது**

ஆகியவைகளும் பரிசுத்த ஆவியானவரின் கடமைகளாகும். இயேசு சொல்லுகிறார் ''சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்'' (யோவான் 16:13-15). ஆவியான்வர் எல்லாவற்றையும் போதிப்பார் என்று பார்த்தோம். (யோவான் 14:26). சத்தியத்தை அறிந்திருந்தால் மட்டும் போதாது. சத்தியத்துக்குள் வழிநடத்தப்படவேண்டும். எந்த வித நிபந்தனையும் இல்லாதபடி இதை ஆவியானவர் செய்வார். நாம் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நம் கரம் பிடித்து வழிநடத்துபவர் பரிசுத்த ஆவியானவரே. அதே நேரத்தில் அவர் சுயமாக, அதாவது தன்னுடையதிலிருந்து எடுத்து பேசுவதில்லை.

வரப்போகிற, நடக்கவிருக்கும் காரியங்களை முன்னறிவிப்பது பரிசுத்த ஆவியானவரின் பிரதான கிரியைகளில் ஒன்று. பரிசுத்த வேதாகமத்தில் நான்கில் ஒரு பகுதி வருங்காரியங்களைக் குறித்த வெளிப்பாடாகும். தீர்க்கதரிசனம், ஞானத்தைப் போதிப்பது, அறிவை உணர்த்துவது ஆகியவை ஆவியானவர் வழங்கும் வரங்களாகும். தன்னிடத்தில் கேள்விப்பட்டவைகளையே பரிசுத்த ஆவியானவர் சொல்லுவார் என்று இயேசு குறிப்பிடுகிறார். தான் சொன்ன எல்லாவற்றையும் அவர் நினைப்பூட்டுவார் (யோவான் 14:26) என்பதை ஏற்கெனவே பார்த்தோம்.

## 7. இயேசுவை மகிமைப்படுத்துவது

பரிசுத்த ஆவியானவரின் மிகப் பெரிய ஊழியம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துவது என்று சொல்லமுடியும். இயேசு, தான் உலகத்தில் வாழ்ந்த நாட்களில் எவ்விதமாக தன்னைப் பற்றி அதிகம் பேசாமல் பிதாவையும், அவருடைய அன்பையும் பற்றியே பேசி அவரை மகிமைப்படுத்தினாரோ (யோவான் 17:4,6) அவ்விதமாக பரிசுத்த ஆவியானவர் எப்போதுமே தன்னை வெளிப்படுத்தாமல் இயேசுவையும் அவருடைய போதனைகளையும், அவருடைய இரட்சிப்பின் கிரியையும் மட்டுமே அறிவித்தார். எனவேதான் இயேசு சொல்லுகிறார், "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்." (யோவான்: 16:14,15)

இந்த அத்தியாயத்தில் பரிசுத்த ஆவியானவர் யார்? அவர் பரலோகத்திலிருந்து அனுப்பப்படுவதின் நோக்கம் என்ன? அவர் செய்யவிருக்கும் கிரியைகள் என்ன என்பது போன்ற காரியங்களை இயேசுவின் வார்த்தையிலிருந்து கண்டுகொண்டோம். தொடர்ச்சியாக பரிசுத்த வேதாகமத்தின் புத்தகங்களில் எவ்வாறு தேவ ஆவியானவர் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார் என்பதைக் காண்போம்.

# 2

## பரிசுத்த வேதாகமத்தில் தேவ ஆவியானவர்

திரித்துவம் (Trinity) என்ற வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. தேவனுடைய அந்தரங்கங்களை ஆராய்ந்து அறிந்துகொள்ள யாராலும் முடியாது (யோபு 11:7,8) இருந்தாலும் தன்னை பரிசுத்த வேதாகமம் மூலமாக வெளிப்படுத்த தேவன் சித்தங்கொண்டார்.

வேதத்தை வாசிக்கும்போது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று மூன்று தனிப்பட்ட நபர்களாக தேவன் செயல்படுவதை நாம் பார்க்கிறோம். தேவன் சர்வ ஞானி (அனைத்தையும் அறிந்தவர்), சர்வ வியாபி (எங்கும் இருப்பவர்), சர்வ வல்லவர் (அனைத்து வல்லமையையும் உடையவர்), நித்தியமானவர் (என்றென்றைக்கும் உள்ளவர்) என்று வேதத்தில் நாம் காணும்போது தேவன் என்ற வார்த்தை பிதாவாகிய யெகோவாவைக் குறிப்பிடுவதாக நாம் நினைக்கலாம். ஆனால் இந்த தேவத்துவத்தின் தன்மைகள் மூன்று நபர்களுக்கும் இணைந்தும், தனித்தும் சொந்தமானது.

தேவன் மூன்று நபர்களாக செயல்படுகிறார் (**திரித்துவம்**). ஒவ்வொரு நபரும் பூரணமாக தேவத்துவத்தைக் கொண்டவர்கள் (**தெய்வீகம்**). தேவன் ஒருவரே (**திரியேகத்துவம்**). இந்த மூன்று தத்துவங்களுமே திரித்துவம் எனப்படுகிறது.

மனித அறிவினாலும், ஞானத்தினாலும் இந்த சத்தியத்தை விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனால் வேதம் இதைப் போதிப்பதினால் விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறோம். தெய்வத்துவத்தின் இரகசியம் எவ்வளவு மேன்மையுள்ளது என்பதை நாம் உணர்ந்துகொள்ளும் போதுதான் அவருடைய சமூகத்தில், அவருடைய மகிமைக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி அவரை ஆராதிக்கமுடியும்.

திரித்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரைக் குறித்து பரிசுத்த வேதாகமம் பயன்படுத்தும் பெயர்களில் சில:-

- பரிசுத்த ஆவி ... சங் 51:11, ஏசா 63:10,11, லூக் 11:13, தெச 4:8
- தேவ ஆவியானவர் ... ஆதி 1:2, ரோமர் 8:14, 1 கொரி 3:16
- குமாரனுடைய ஆவி ... கலா 4:6
- இயேசு கிறிஸ்துவினுடைய ஆவி ... பிலி 1:19
- கிறிஸ்துவின் ஆவியானவர் ... 1 பேது 1:11
- கர்த்தருடைய ஆவி ... 2 கொரி 3:17, ஏசா 63:14
- கிருபையின் ஆவி ... எபி 10:29
- சத்திய ஆவியானவர் ... யோவான் 14:17, 15:26, 1 யோ 5:6
- ஆவியானவர் ... மாற்கு 1:10
- ஜீவனுடைய ஆவி ... ரோமர் 8:2
- மகிமையுள்ள ஆவியானவர் ... 1 பேது 4:14
- புத்திரசுவிகாரத்தின் ஆவி ... ரோமர் 8:15
- ஞானத்தையும் தெளிவையும் அருளும் ஆவி ... எபே 1:17
- ஆவி ... கலா 5:5, வெளி 22:17, யோவேல் 2:28
- தேற்றரவாளன் ... யோவான் 14:16, 16:7
- ஞானம், உணர்வு, ஆலோசனை, பெலன், அறிவு, கர்த்தருக்குப் பயப்படும் பயம் இவற்றை அருளும் ஆவி ... ஏசா 11:2

பதினாறு நூற்றாண்டுகளின் காலக்கட்டத்தில் ஆசிரியர்கள், இராஜாக்கள், மேய்ப்பர்கள், வரிவசூலிப்பவர்கள், மீன்பிடிப்பவர்கள், வேதபாரகர், கூடாரம் செய்பவர்கள் மற்றும் பலர் வேதத்தின் புத்தகங்களை எழுதினாலும் பரிசுத்த வேதாகமத்தின் உண்மையான ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரே.

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது." (2 தீமோ 3:16) "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினால் உண்டாகவில்லை, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேது 1:20-21). இந்த தீர்க்கதரிசன வேத

வசனங்களை எழுதும்போது தாங்கள் என்ன எழுதுகிறோம் என்பதை முழுமையாக அறியாமலே அவர்கள் எழுதினார்கள். அவர்களை கரம்பிடித்து எழுதியவர் பரிசுத்த ஆவியானவர்.

பொதுவாகவே ஒரு புத்தகத்தை வாசிக்கும் போது அதை எழுதிய ஆசிரியரைக் குறித்து நாம் அறிந்துகொள்ள முடியும். முந்தின அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய போதனையளிக்கும் முக்கிய வேதபகுதியாகிய யோவான் 14, 15, 16 அதிகாரங்களின் சில வசனங்களைத் தியானித்த நாம், முழு வேதபுத்தகத்திலும் பரிசுத்த ஆவியானவர் எப்படியெல்லாம் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

வேதத்தில் முதல் புத்தகமான **ஆதியாகமத்தில்** முதல் இரண்டு வசனங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் தன்னை அறிமுகப்படுத்துவதைப் பார்க்கிறோம். 1. ''ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். 2. பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.'' தேவன் உருவாக்கிய பூமியில் ஒழுங்கின்மை, வெறுமை, இருள் எங்கிருந்து வந்தது என்று யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா? இந்த இரண்டு வசனங்களுக்கும் இடைப்பட்ட காலம் ஒன்று இருந்தது என்றும் (இலட்சக்கணக்கான வருடங்கள்) அப்போதுதான் லூசிபர் வானத்திலிருந்து மின்னலைப்போல் தள்ளப்பட்டிருக்கவேண்டும் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். லூசிபர் தன்னுடைய அகங்காரத்தில் பூமியின் மகிமையை அழித்துப் போட்டான்.

ஒழுங்கின்மை, வெறுமை, இருள் என்ற பின்னணியில் பரிசுத்த ஆவியானவரின் முதல் கிரியை ஜலத்தின் மேல் அசைவாடுதல் ஆகும். அவர் ஜலத்தில், ஜலத்துக்குள் அசைவாடவில்லை. தேவன் எப்போதுமே தன்னை, தன்னுடைய கிரியைகளில் இருந்து பிரித்துக்கொள்கிறார். கோழி ஒரு முட்டையின் மேல் அமர்ந்து அடைகாக்கும் கிரியை அசைவாடுதல் எனப்படுகிறது. ஏற்கெனவே உருவாக்கப்பட்டு, ஆனால் மகிமையை இழந்து, மரித்த நிலையிலிருக்கும் உலகத்தின் உருக்குலைவை நீக்கி, புதுப்பித்து, உயிர்ப்பிப்பதே பரிசுத்த ஆவியானவரின் வேலை. அதனால்தான் யோபு சொல்லுகிறார்• ''தேவன் தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்'' (26:13). இன்றும் ஒழுங்கின்மை, வெறுமை, இருள் நிறைந்த பாவ மனிதனுக்குள் அசைவாடி அவனை மறுபடியும் பிறக்கச் செய்வது பரிசுத்த ஆவியானவரே.

மனித படைப்பில் பரிசுத்த ஆவியானவரின் பங்கை ஆதியாகமத்தில் பார்க்கிறோம். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்" (2:7). சரீரம் (மண், soma). ஆவி (ஜீவசுவாசம், pneuma), ஆத்துமா (சரீரமும் ஆவியும் இணைந்த ஜீவாத்துமா psyche) என்ற முப்பரிமாண நிலையில் உருவாக்கப்பட்டவன் மனிதன். ஜீவசுவாசம் (எபிரேய மொழியில் ne-sha-mah), என்ற வார்த்தை பரிசுத்த ஆவியானவரையே குறிக்கிறது. அதனால்தான் எலிகூ சொல்லுகிறார், "தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார், சர்வ வல்லருடைய சுவாசம் எனக்கு உயிர் கொடுத்தது" (யோபு 33:4). இவ்விதமாக ஆதாம் தான் படைக்கப்பட்ட முதல் நாளிலேயே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டவனாகிறான்.

ஆதியாகமம் 41:38ல் "தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல (யோசேப்பு) வேறொருவன் உண்டோ" என்ற பார்வோனின் கேள்வி, புற ஜாதியாரும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து கொஞ்சம் அறிந்திருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

இரண்டாவது வேத புத்தகமான **யாத்திராகமத்தில்** ஆசரிப்பு கூடாரத்தை சிறந்த முறையில் செய்யும்படியாக பெசலியேல் என்பவருக்கு தேவன் "ஞானத்தையும், புத்தியைய்ம், அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார்" (யாத் 35:33) என்ற வசனம் வரங்களை அருளும் ஆவியானவரின் செயல்பாட்டைத் தெரிவிக்கிறது.

**லேவியராகமத்தில்** பரிசுத்த ஆவி என்று நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும் பரிசுத்த வாழ்க்கை, பரிசுத்த ஆராதனை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. "நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (லேவி 19:2) என்ற வசனம் பலதடவை சொல்லப்பட்டிருக்கிறது. "கர்த்தருடைய அபிஷேகம் உங்கள்மேல் இருக்கிறதே" (லேவி 10:7) என்ற மோசேயின் வார்த்தை தேவ ஆவி மனிதர்களில் செயல்படுவதைக் குறிப்பிடுகிறது.

**எண்ணாகமத்தில்** "உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள் மேல் வைப்பேன்" (11:17) என்ற தேவனுடைய வார்த்தை, "கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லத்தக்கதாக கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள் மேல் இறங்கப்பண்ணினால்

நலமாயிருக்குமே'' (11:29) என்ற மோசேயின் வாஞ்சை இந்த வேதபுத்தகத்தில் ஆவியானவரின் செயல்பாட்டை விவரிக்கிறது.

**உபாகமம்** 34:9ல் "மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்'' என்ற வசனம் ஞானத்தைப் போதிக்கும் ஆவிக்குரிய வரத்தை நினைவுபடுத்துகிறது.

**யோசுவா** புத்தகத்தில் தனிப்பட்ட ஆள்தத்துவமுடையவராய் பிரத்தியேகமான முறையில் ஆவியானவர் குறிப்பிடப்படவில்லை என்றாலும் எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தது (6:20), சூரியனும் சந்திரனும் தரித்து நின்றது (10:12,13) போன்ற அற்புதங்களைச் செய்யும் ஆவிக்குரிய வரம் யோசுவா மூலமாய் செயல்பட்டது.

ஒத்னியேல் (3:10), கிதியோன் (6:34) யெப்தா (11:29), சிம்சோன் (14:19) ஆகியோர்மேல் கர்த்தருடைய ஆவியானவர் இறங்கி செயல்பட்ட நிகழ்ச்சிகள் பலவற்றை **நியாதிபதிகள்** புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம்.

**ரூத்** புத்தகத்தில் ஆவியானவர் குறிப்பிடப்படவில்லை என்றாலும் நகோமி எப்படி ரூத்தை போவாஸுடன் இணைத்து கொள்ளச் செய்தாரோ அப்படியே ஆவியானவர் நம்மை கிறிஸ்துவுடன் இணையும்படியாக செயலாற்றுகிறார்.

1 **சாமுவேல்** புத்தகத்தில் ''கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார்; நீ அவர்களோடே கூட தீர்க்கதரிசனம் சொல்லி, வேறு மனுஷனாவாய்'' (10:6), மற்றும் 16:13, 19:20 ஆகிய வசனங்களில் ஆவியானவரின் முக்கியமான கிரியை சொல்லப்படுகிறது.

2 **சாமுவேலில்** தாவீது அறிவிக்கிறார் ''கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார், அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது'' (23:2). ஆவியின் வரங்களைப் பெற்ற நாத்தான் போன்ற தீர்க்கதரிசிகளை இந்த புத்தகத்தில் சந்திக்கிறோம். பாவத்தைக் கண்டித்து உணர்த்தும் ஆவியானவரின் செயல்பாட்டை இந்த புத்தகத்தில் அறிகிறோம்.

1 **இராஜாக்கள்** புத்தகத்தில் ''கர்த்தருடைய ஆவியானவர்'' என்றும் (18:12) ''கர்த்தருடைய கை'' என்றும் (18:12) ஆவியானவர் அழைக்கப்படுகிறார்.

2 **இராஜாக்களிலும்** "கர்த்தருடைய ஆவியானவர்" என்றும் (2:16) "கர்த்தருடைய கரம்" என்றும் (3:15) ஆவியானவர் குறிப்பிடப்படுகிறார். மேலும் 2:9ல் "உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்," என்ற எலிசாவின் வேண்டுதல், பரிசுத்த ஆவியின் வரங்களைக் குறித்த வாஞ்சை உள்ளவர்களுக்கு அவை அருளப்படுகின்றன என்பதை உணர்த்துகிறது.

1 **நாளாகமம்** 28:12ல் "ஆவியினால் தனக்குக் கட்டளையிடப்பட்டபடியெல்லாம்" என்று தொடங்கும் வசனத்திலிருந்து பரிசுத்த தேவாலயத்தைக் குறித்த வரைபடங்களை தாவீதுக்கு பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே வழங்கப்பட்டது என்பதை நிரூபிக்கிறது.

2 **நாளாகமத்தில்** சகரியா, அசரியா மூலமாக ஆவியின் வரங்கள் செயல்பட்டது. மேலும் "தேவனுடைய ஆவி" என்றும் (15:1, 24:20) "கர்த்தருடைய ஆவி" என்றும் (24:20) அவர் அழைக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

**எஸ்றா** புத்தகத்தில் ஆகாய் மற்றும் சகரியா தேவனின் நாமத்திலே தீர்க்கதரிசனம் சொன்னார்கள் (5:1) என்று வாசிக்கிறோம். இது பரிசுத்த ஆவியானவரின் கிரியையே, ஆவியானவர் இன்றி தீர்க்கதரிசனம் இல்லை.

"என் தேவனுடைய கரம் நன்மையாக இருக்கிறது" (2:18) என்று **நெகேமியா** குறிப்பிடும்போது ஆவியானவரின் செயல்பாட்டையே விவரிக்கிறார்.

**எஸ்தர்** புத்தகத்தில் ஆவியானவர் நேரடியாகக் குறிப்பிடப்படவில்லையென்றாலும் மொர்தெகாய் மூலமாக ஆவியானவரின் தூண்டுதலினால்தான் சூசானில் இருக்கிற எல்லா யூதர்களும் உபவாசித்து எதிரியை மேற்கொள்ளுகிறார்கள்.

நியாயப்பிரமாணம் வழங்கப்படும் முன்பே எழுதப்பட்டிருந்தாலும், மனித வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கிறார் என்பதைக் குறித்த பல வசனங்களை **யோபு** புத்தகத்தில் பார்க்கலாம். "தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்," (33:4) "மனுஷரில் ஒரு ஆவியுண்டு, சர்வ வல்லவருடைய சுவாசமே அவர்களை உணர்வுள்ளவர்களாக்கும்" (32:8)

**சங்கீதம்** 104:30ல் பரிசுத்த ஆவியானவர் சிருஷ்டி கர்த்தராக அறிமுகப்படுத்தப்படுகிறார். ''நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும். உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்'' (139:7) என்ற வசனம் ஆவியானவர் சர்வ வியாபி என்பதை நிரூபிக்கிறது. தாவீது ஜெபிக்கிறார், ''உம்முடைய நல்ல ஆவி என்னை செம்மையான வழியிலே நடத்துவாராக'' (143:10). ''உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்'' (51:11). முதல்முறையாக திரித்துவத்தின் மூன்றாவது நபரான தேவன் பரிசுத்த ஆவி என்று அழைக்கப்படுகிறார்.

**நீதிமொழிகள்** 1:23ல் "என் ஆவியை உங்களுக்கு அருளுவேன், என் வார்த்தைகளை உங்களுக்குத் தெரிவிப்பேன்'' என்று ஞானமாகிய கர்த்தர் பேசுகிறார்.

**பிரசங்கி** புத்தகத்தில் ஆவியானவர் குறிப்பிடப்படவில்லை. உலகத்தின் ஞானத்தை நம்புகிறவன் அவரைக் கண்டுகொள்ள முடியாது.

**உன்னதப்பாட்டில்** "வாடையே எழும்பு, தென்றலே வா'' (5:16) என்ற வசனம் பரிசுத்த ஆவியின் உருவகமான காற்றை நினைவுபடுத்துகிறது.

மற்ற எல்லாத் தீர்க்கதரிசிகளையும் விட **ஏசாயா** பரிசுத்த ஆவியானவரைக் குறித்த கூடுதலான வெளிப்பாட்டைப் பெற்றவர். அவர் சொல்லுகிறார், "கர்த்தருடைய ஆவியை அளவிட்டு, அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்து அவருக்குப் போதித்தவன் யார்?'' (40:13). ''கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்'' (61:1). "என் ஆவியை அவர் மேல் அமரப்பண்ணினேன்.''

ஆவியானவர் மூலமாக நாம் பெறும் வெற்றி இவ்விதமாகச் சொல்லப்படுகிறது. ''வெள்ளம்போல் சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்'' (59:19). ஆவியானவரைப் பகைத்தால் வரும் ஆபத்து என்ன? ஏசாயா 63:10 சொல்லுகிறது. ''அவர்களோ கலகம்பண்ணி அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள். அதனாலே அவர் அவர்களுக்கு சத்துருவாய் மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினார்.'' ஆவியானவருக்கு விரோதமான பாவம் மன்னிக்கப்படுவதில்லை அல்லவா.

**எரேமியா** 5:14 மற்றும் 20:9 ஆகிய வசனங்களில் தேவனுடைய வார்த்தைகள் எரிகிற அக்கினியாக குறிப்பிடப்படுகின்றன. அக்கினி ஆவியானவருக்கு ஒரு அடையாளமாக அமைகிறது.

**புலம்பல்** புத்தகத்தில் ஆவியானவர் தேவனுடைய வலது கரம் (2:2) என்று குறிப்பிடப்படுகிறார்.

**எசேக்கியேல்** "கர்த்தருடைய ஆவி என்மேல் இறங்கினார்" (11:5) என்று திட்டவட்டமாக அறிவிக்கிறார். "ஆவியானவர் என்னை எடுத்து... கல்தேயாவுக்குச் சிறைப்பட்டுப் போனவர்கள் இடத்தில் கொண்டுபோய்விட்டார்" (11:24) என்கிறார். "எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கில் உங்களுக்குள் ஆவியை பிரவேசிக்கப் பண்ணுவேன். அப்பொழுது உயிரடைவீர்கள் (37:5) என்று கர்த்தர் சொல்லுகிறார். மேலும் சொல்லுகிறார், "நான் இஸ்ரவேல் வம்சத்தார்மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன்" (39:29)

**தானியேல்** புத்தகத்தில் "பரிசுத்த தேவர்களுடைய ஆவி" (4:18) உடையவனாக தானியேல் கருதப்பட்டு, சொப்பனத்தின் அர்த்தத்தை தெரிவிக்கும்படியாக நேபுகாத்நேச்சாரால் அழைக்கப்படுகிறார். பெல்ஷாத்சார் என்ற அவனுடைய பேரன் சொல்லுகிறான். "உனக்குள்ளே தேவர்களின் ஆவி உண்டென்றும், வெளிச்சமும், புத்தியும், விசேஷித்த ஞானமும் உன்னிடத்தில் காணப்பட்டதென்றும் உன்னைக்குறித்துக் கேள்விப்பட்டேன்" (5:14). பரிசுத்த ஆவியானவர் ஒருவனுக்குள் கிரியை செய்யும்போது அவன் எல்லோராலும் அறியப்படுவான்.

**ஓசியாவில்** ஆவியானவரைக் குறித்த நேரடி வெளிப்பாடு இல்லை, பரிசுத்த ஆவியானவர் இல்லாத மனிதருக்குள் செயல்படும் "வேசித்தன ஆவி" இரண்டு முறை (4:12, 5:4) சொல்லப்படுகிறது.

**யோவேல்** புத்தகத்தில்தான் பெந்தெகொஸ்தே அனுபவம் தெளிவான முறையில் முன்னறிவிக்கப்படுகிறது. தேவன் சொல்லுகிறார், "நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்" (2:28, 29). மாம்சமான யாவர் மேலும் என்பதினால்

யூதர்கள் மட்டுமல்ல, புறஜாதியினரும் ஆவியானவரைப் பெற்று அனுபவிக்கவிருப்பது முன்னறிவிக்கப்படுகிறது.

**ஆமோஸ்** புத்தகத்தில் ''கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடைக்காத பஞ்சத்தை அனுப்புவேன்'' (8:11) என்ற தேவனுடைய எச்சரிக்கை அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையில் பரிசுத்த ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படும் ஆபத்தை வெளிப்படுத்துகிறது.

**ஒபதியா** புத்தகம் ''ஒபதியாவின் தரிசனம்'' என்று தொடங்குகிறது. தரிசனத்தை வழங்குபவர் பரிசுத்த ஆவியானவரே.

**யோனாவில்** யோனா நினிவேக்கு எதிராக தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். இந்த வரம் ஆவியானவரின் செயல்பாடு.

**மீகா** தைரியமாக அறிவிக்கிறார். "நானோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்'' (3:8)

**நாகூமில்** முதல் வசனம் "எல்கோசானாகிய நாகூமின் தரிசனப் புஸ்தகம்'' என்று அறிக்கையிடுகிறது.

**ஆபகூக்கிலும்** ''நீ தரிசனத்தை எழுதி அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே வரை'' (2:2) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்'' என்ற **செப்பனியா** 3:9வது வசனம் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் பெறும் அந்நிய பாஷை வரம் என்பதில் சந்தேகமில்லை. வரங்களை வழங்குவது பரிசுத்த ஆவியின் செயல்பாடு.

**ஆகாய்** 2:5 சொல்லுகிறது, ''நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நான் உங்களோடே உடன்படிக்கை பண்ணின வார்த்தையின்படியே என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார், பயப்படாதேயுங்கள்."

நம்மெல்லாருக்கும் தெரிந்த ''பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்'' என்ற வசனம் **சகரியாவின்** புத்தகத்தில் காணப்படுகிறது (4:6). மேலும் "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும், எருசலேம் குடிகளின் மேலும்

கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியை ஊற்றுவேன்" (12:10) என்ற வாக்குத்தத்தம் தேவனால் அருளப்படுகிறது.

பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமான **மல்கியாவில்** இயேசுவின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனத்தைத் தவிர (3:1,2) வேறு நேரடியான வெளிப்பாடு ஆவியானவரைக் குறித்து இல்லை.

புதிய ஏற்பாட்டில் 261 வசனங்கள் பரிசுத்த ஆவியானவரைக் குறித்த சத்தியங்களை நேரடியாக அறிவிப்பதினால் ஒவ்வொன்றையும் தனித்தனியே இந்த அத்தியாயத்தில் குறிப்பிட முடியாது. நான்கு சுவிசேஷங்களில் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்) 56 வசனங்கள், அப்போஸ்தலருடைய நடபடிகளில் 57 வசனங்கள், பவுல் அப்போஸ்தலருடைய நிருபங்களில் 112 வசனங்கள், மீதியான புத்தகங்களில் 36 வசனங்கள் ஆவியானவரைப் பற்றி நேரடியாக, திட்டவட்டமாகப் பேசுகின்றன.

இயேசு பரிசுத்த ஆவியினால் மரியாளிடம் உற்பத்தியாகும் இரகசியம், யோர்தானில் ஞானஸ்நானம் எடுக்கும்போது ஆவியானவர் அவர்மேல் இறங்குவது, இயேசுவே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கொடுப்பவர் என்ற சத்தியம், அளவற்ற விதத்தில் ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொண்டு அவர் நடப்பித்த அதிசயங்கள், அற்புதங்கள், அவரிடமிருந்து வெளிப்பட்ட போதனைகள் **மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்** ஆகிய நான்கு சுவிசேஷங்களிலும் பரவலாகச் சொல்லப்படுகின்றன. மற்ற சுவிசேஷங்களைவிட லூக்கா ஆவியானவரின் செயல்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தாலும், யோவான் மட்டுமே ஆவியானவர் நடத்தும் மறுபடியும் பிறத்தல் என்ற இரட்சிப்பின் முதல் கிரியையை விவரிக்கிறார்.

**அப்போஸ்தலருடைய நடபடிகள்** புத்தகத்தின் பெயரை 'பரிசுத்த ஆவியானவருடைய நடபடிகள்' என்று மாற்றலாம் என்று சொல்லுமளவுக்கு ஆவியானவருடைய கிரியைகள் இங்கே கூடுதலாகக் காணப்படுகிறது. "ஆதி அப்போஸ்தல சபையில் பரிசுத்த ஆவியானவர்" என்ற இந்த புத்தகத்தின் மூன்றாவது அத்தியாயத்தில் அவற்றை அறிந்துகொள்ளுவோம்.

**ரோமர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், 1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர், 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து**

ஆகிய பவுலுடைய நிருபங்கள் பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும், அவருடைய செயல்பாடுகள், வரங்கள், கனியின் தன்மைகளைக் குறித்தும் பல உபதேசங்களைக் கொண்டவை. ''பரிசுத்த ஆவியினாலேயன்றி ஒருவனும் இயேசுவைக் கர்த்தரென்று சொல்லக்கூடாது'' (1 கொரி 12:3), ''கர்த்தரே ஆவியானவர், கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு'' (2 கொரி 3:17) என்பது போன்ற தீர்க்கமான வசனங்கள் பவுல் பெற்றுக்கொண்ட மேலான ஆவிக்குரிய வெளிப்பாடுகளை அறிவிக்கின்றன.

**பிலேமோனில்** ஆவியானவர் குறிப்பிடப்படவில்லை. **எபிரெயரில்** வரங்களைக் குறித்து ''அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்கள்'' (எபி 1:4) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**யாக்கோபு** தன்னுடைய நிருபத்தில் ஒருமுறை மட்டும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து, "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர்" (4:5) என்று குறிப்பிட்டாலும் நிருபம் முழுவதிலும் ஆவியானவரின் வைராக்கிய வாஞ்சையின் செயல்பாட்டை எழுதியிருக்கிறார்.

**1 பேதுரு** நிருபத்தில் "தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்'' (4:14) என்று அறிவித்துவிட்டு, இயேசுவின் உயிர்த்தெழுதலில் ஆவியானவரின் பங்கை இவ்விதமாகச் சொல்லுகிறார் இயேசு, ''மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்'' (3:18).

**2 பேதுரு** நிருபத்தில் "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." (1:21).

**1 யோவான்** 3:24 சொல்லுகிறது, "அவர் (இயேசு) நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்." மேலும் யோவான் சொல்லுகிறார் "ஆவியானவர் சத்தியமாகையால் ஆவியானவரே சாட்சி கொடுக்கிறார்'' (5:6) **2 யோவான், 3 யோவான்** ஆகிய சிறிய கடிதங்களில் ஆவியானவர் நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை.

இயேசுவின் சகோதரனாகிய **யூதா** "பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி" (வ. 20) கிறிஸ்துவின் இரக்கத்தைப் பெற ஆலோசனை தருகிறார். கடைசிக் காலத்தில் தோன்றும் பரியாசக்காரர் "ஜென்மசுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே" (வ. 19) என்றும் குறிப்பிடுகிறார்.

**வெளிப்படுத்தின விசேஷத்தில்** பரிசுத்த ஆவியானவர் "தேவனுடைய ஏழு ஆவிகள்" (3:1, 4:5, 5:6) என்றும், அடிக்கப்பட்டவண்ணமாயிருந்த ஆட்டுக்குட்டியானவரின் ஏழு கண்களாகவும் உருவகப்படுத்தப்பட்டிருக்கிறார். "அந்த கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளாகும்" (5:6) "தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற பரலோக சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவரும் பளிங்கைப் போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி" (22:1) பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்" (2:29) என்ற வசனம் கர்த்தர் எப்போதுமே பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே சபையோடு உறவு கொள்ளுகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது.

# 3

## ஆதி அப்போஸ்தல சபையில் பரிசுத்த ஆவியானவர்

பரிசுத்த ஆவியானவரைக் குறித்து நாம் அறிந்துகொண்டிருக்கும் சத்தியங்களில் 80 சதவிகிதத்துக்கும் மேலானவை புதிய ஏற்பாட்டு வேதபுத்தகங்களில் காணப்படுகின்றன. அதே நேரத்தில் "இஸ்ரவேலருக்கு அறிவை உணர்த்த உம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டீர்'' என்ற நெகேமியாவின் ஜெபமும் (9:20) "உம்முடைய ஆவியினால் பேசின உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களைத் திட்சாட்சியாய்க் கடிந்து கொண்டாலும், அவர்கள் செவிகொடாதபடியினாலே, அவர்களை அந்நிய தேசஜனங்களின் கையில் ஒப்புக் கொடுத்தீர்'' (9:30) என்ற அவருடைய அறிக்கையும் இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசிக்கு முன்னும், பின்னும் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டை பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் ஒரளவு அறிந்திருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

கிறிஸ்து உயிரோடிருந்தபோது, (சுவிசேஷ நாட்களில்) பரிசுத்த ஆவியானவரை ஒருவன் கேட்டுத்தான் பெற்றுக் கொள்ளவேண்டும் என்கிற நிலைமை இருந்தது: ''பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா'' (லூக்கா 11:13). இயேசு பிதாவை வேண்டிக்கொள்வதினிமித்தமாகவும் (யோவான் 14:16) ஆவியானவர் சீஷர்களுக்கு வழங்கப்படவிருப்பதை முதலாவது அதிகாரத்தில் தியானித்தோம். அவர் மரித்து உயிர்த்தெழுந்த பிறகு ஆவியைப் பெறும் முறையில் ஒரு மாறுதலைப் பார்க்கிறோம், அவர் தன் சீஷர்கள் மேல் ஊதி: "பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்," (யோவான் 20:22) என்கிறார். அடுத்ததாக பரிசுத்த ஆவியைப் பெற எருசலேமில் காத்திருங்கள் என்றும் பணிக்கிறார்.

''ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்'' (அப் 1:5) என்று இயேசு கட்டளையிடுகிறார், "நீங்களோ

உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக்கா 24:29).

பிதாவாகிய தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உன்னத பெலனாகிய பரிசுத்த ஆவியானவரைக்குறித்து யோவேல் முன்னறிவித்தார் என்று பேதுரு ஏற்றுக்கொள்கிறார்" (அப் 2:16). அந்த வாக்குத்தத்தம் இதுதான், "நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல் 2:28,29). இந்த மேலான அனுபவம் பழைய ஏற்பாட்டில் வழங்கப்படவில்லை.

யூதர்கள். புறஜாதியினர். பெரியவர்கள், சிறியவர்கள். ஆண்கள். பெண்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் மாம்சமான யாவரும் பரிசுத்த ஆவியானவரை முழுமையாகப் பெற்றுக்கொள்வதை அப்போஸ்தலர் 2:1-4ல் பார்க்கிறோம். "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்,"

இந்த பெந்தெகொஸ்தே நாள் துவங்கி, அப்போஸ்தலனாகிய பவுலினுடைய ரோமாபுரி ஊழியம் வரையிலான சுமார் 38 ஆண்டுகாலம் பரிசுத்த ஆவியானவர் ஆதி அப்போஸ்தல சபையில் பலத்த கிரியைகளை நடப்பித்ததை லூக்கா, 'அப்போஸ்தலருடைய நடபடிகள்' என்ற புதிய ஏற்பாட்டின் ஐந்தாவது புத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார்,

மேல்வீட்டறையில் காத்திருந்த 120 சீஷர்களுமே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதைப் பார்க்கிறோம், ஒருவராவது நிரப்பப்படாமல் விடப்படவில்லை, ஏனென்றால் மாம்சமான யாவரும் ஆவியானவரைப் பெறுவார்கள் என்பதுதான்

தேவனுடைய வாக்குத்தத்தம், அவர்கள் அரைகுறையாக அல்ல, முழுமையாக நிரப்பப்பட்டார்கள், எந்த அளவுக்கு நிரப்பப்பட்டார்கள் என்றால் அவர்களிலிருந்த பயம். சந்தேகம், சொந்த விருப்பு வெறுப்புகள் சகலமும் அந்த நிமிடத்திலேயே மறைந்தன, அவர்கள் வேறு மனிதர்களானார்கள்,

''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அப் 1:8) என்ற வசனத்தின்படி அவர்கள் அத்தனை பேரும் பெலனடைந்தார்கள். இந்த பெலன் என்ற வார்த்தைக்கு கிரேக்க பதமாகிய "டூனாமிஸ்"-ன் பொருள் வல்லமை (அப் 10:38, லூக்கா 9:1), திறமை (மத் 25:15) என்பதாகும். இந்த வல்லமையின் விளைவாகவே ஒருவன் இயேசுவின் சாட்சியாக முடியும். ஏனென்றால் ஏதோ ஒரு காரியம் நடப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பவன் சாட்சியாவதில்லை. தான் கண்டதை தைரியமாக அறிவிப்பவனே சாட்சி.

அக்கினி மயமான நாவுகளை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். சபையாக அல்ல, தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியானவரைப் பெறவேண்டும். இவ்வாறு அக்கினி நாவுகளைப் பெற்றுக்கொண்டவர்களால் பேசாமல் இருக்க முடியவில்லை. வெவ்வேறு பாஷைகளிலே அவர்கள் பேசத் தொடங்கினார்கள். தாங்கள் அறியாத பாஷையில் சீஷர்கள் பேசினாலும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தூரதேசங்களிலிருந்து வந்த ஆயிரக்கணக்கான இஸ்ரவேலர் கேட்டு (2:8) புரிந்துகொண்டு, ''கலக்கமடைந்தார்கள் (2:6), இருதயத்தில் குத்துண்டவர்களானார்கள்'' (2:37). ''இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே'' (2:7,8) "கிரேத்தரும், அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்கிறோமே'' என்றார்கள்'' (2:11).

ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொண்ட பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் பாவ உணர்வடைந்து, "சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்'' என்றார்கள். பேதுரு தைரியமாக பதில் சொல்லுகிறார். ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (2:38) வரம் என்று ஒருமையில் குறிப்பிடப்படுவதினால், இயேசுவுக்கு அடுத்து, பிதா ஈவாக மனித இனத்துக்கு வழங்கும் பரிசுத்த ஆவியானவரைத்தான் பேதுரு குறிப்பிடுகிறாரேத் தவிர ஆவியின் வரங்களை அல்ல. நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளே வரங்கள். (அத்தியாயம் 9,10ல் வரங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது)

பெந்தெகொஸ்தே நாளில் மட்டுமல்ல, தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளிலும் பேதுருவின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டார். ஜனங்களுடைய அதிகாரிகளும், மூப்பரும், வேதபாரகரும், பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும் அவனுடைய ஊழியத்தைக்குறித்து விசாரிக்கும் போது ''பரிசுத்த ஆவியினாலே நிறைந்து'' (அப் 4:8) பேதுரு பேசினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ''அதிபதிகளுக்கு முன்பாகவும், இராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள். அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல. உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்'' (மத் 10:18,19) என்ற இயேசுவின் வாக்குத்தத்தத்தின்படி ஆதி அப்போஸ்தல சபையில் ஆவியானவர் செயல்பட்டார்.

அனனியாவும் சப்பீராளும் வஞ்சிக்கும் நோக்கத்துடன் தன்னிடம் வந்தபோது ''பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?'' (அப் 5:3) என்று கேட்குமளவுக்கு ஆவிக்குரிய வரங்கள் அவரில் செயல்பட்டது. தன்னிடம் அல்ல, தனக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரை அவர்கள் ஏமாற்றுவதாக அறிவிக்கிறார்.

பேதுருவின் மூலமாக அதிசயங்களையும் அற்புதங்களையும் ஆவியானவர் நடப்பித்தார். தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த மனிதனைப் பார்த்து ''நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட'' (அப் 3:6) என்று ஆணையிட்ட பேதுரு ''சுய சக்தியினாலாவது, சுய பக்தியினாலாவது இதை நடக்கப் பண்ணவில்லை'' என்பதையும் அறிக்கையிடுகிறார் (3:12). எந்த அளவுக்கு குணமாக்கும் வரம் அவரில் செயல்பட்டதென்றால் பேதுரு நடந்து போகையில் அவருடைய நிழல் வியாதியஸ்தர்கள் மேல் படும்படிக்கு அவர்களை வீதிகளில்

படுக்கைகளின் மேலும், கட்டில்களின் மேலும் கிடத்திவைத்தார்களாம். அவர்கள் குணமடைந்தார்கள்.

பேதுரு ஜெபம்பண்ணி சமாரிய விசுவாசிகளின்மேல் கைகளை வைத்தபோது, ''அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்'' (அப் 8:17). இவ்விதமாக பேதுரு மூலமாக பரிசுத்த ஆவியானவர் பலருக்கு அருளப்பட்டார். வரங்களும் அருளப்பட்டன. பவுலுக்கு முன்பாகவே புறஜாதியினரிடம் பேதுருவை ஊழியம் செய்யும் படியாக ஆவியானவர் அனுப்புகிறார். அப்போஸ்தலர் 10:19,20 சொல்லுகிறது, "ஆவியானவர்: இதோ மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ, நானே அவர்களை அனுப்பினேன் என்று சொல்லுகிறார்." கொர்நேலியுவின் வீட்டில் ''பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்'' (10:44)

இவ்விதமாக ஆதி அப்போஸ்தல சபையில் சபைக்குத் தேவையான, நலமான ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கி, தேவ ஊழியர்களை தன்னுடைய சித்தத்தின்படியெல்லாம் ஆவியானவர் உபயோகப்படுத்தினார். அந்தியோகியா சபையார் கர்த்தருக்கு ஆராதனை செய்து கொண்டிருந்த போது "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்'' (அப் 13:2) என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியா பட்டணத்துக்கு வந்து (13:4) இருவரும் ஊழியத்தைத் துவக்கியதைப் பார்க்கிறோம். மேற்கண்ட நிகழ்ச்சியில் சபையில் தன்னுடைய தீர்க்கதரிசிகளின் மூலமாகப் பேசினாரா. சபையார் அத்தனைபேரும் கேட்கும்படியாக (முன்பு சீனாய் மலையில் பேசினதுபோல்) நேரடியாகப் பேசினாரா என்பது தெரியவில்லை.

இவ்விதமாக ஆதி சபையில் ஊழியர்களை ஆவியானவர் தன்னுடைய முழு ஆளுகைக்குள் வைத்திருந்தார். தன்னிச்சையாக ஊழியங்களை யாரும் செய்யத் துணியும்போது அதைத் தடைசெய்தார். பவுலும் தீமோத்தேயும் ஊழியத்துக்குப் புறப்படுகிறார்கள். ''அவர்கள் பிரிகியா, கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியாதேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்,

ஆவியானவரோ அவர்களைப் போக வொட்டாதிருந்தார்" (அப் 16:6,7) தேவ சித்தத்தை அறியாமல் ஊழியத்தைத் தொடங்கும் தவறான பழக்கம் ஆதிசபையிலும் இருந்திருக்கிறது.

சபைக்குத் தேவையான ஆலோசனை, எச்சரிக்கை, ஆறுதல், வழி நடத்துதலை அனுதினமும் ஆவியானவர் வழங்கினார் என்பது மட்டுமல்ல, ஆதி சபையின் அதிகாரிகளையும் அவரே நியமித்தார். அப்போஸ்தலர் 20:28 சொல்லுகிறது, "தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்."

பேதுரு, பவுல் போன்ற பெரிய ஊழியர்களை மட்டுமல்ல, பந்திவிசாரணை செய்து வந்தவர்களையும் ஆவியானவர் வழிநடத்தினார். புதிய ஏற்பாட்டு சபையின் முதல் இரத்த சாட்சியான ஸ்தேவான் "பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்தவர்" (அப் 6:3). தன்னுடைய விசாரணையின் நாளில் அவர் சொல்லுகிறார் "வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும், செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" (7:51).

இஸ்ரவேலர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூன்று திரித்துவ தேவனையும் புறக்கணிப்பதை இந்த நிகழ்ச்சியில் பார்க்கிறோம். பழைய ஏற்பாட்டு கடைசி தீர்க்கதரிசியாகிய யோவான் ஸ்நானகனைக் கொலை செய்ததின் மூலமாக பிதாவாகிய தேவனைப் புறக்கணித்தார்கள், குமாரனாகிய இயேசுவையே கொன்றார்கள். பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய் (7:55) பேசிய ஸ்தேவானை கல்லெறிந்து கொன்றபோது பரிசுத்த ஆவியானவரையும் புறக்கணித்தவர்களாய் காணியாட்சியின் சகல ஆசீர்வாதங்களையும் இழந்துபோகிறார்கள்.

பந்திவிசாரணை செய்துவந்த பிலிப்புவையும் ஆவியானவர் தன்னுடைய வல்லமையினால் நிரப்பி சமாரியப் பட்டணத்தில் பெரிய எழுப்புதலைக் கொண்டு வருகிறார். எத்தியோப்பிய மந்திரி வேத புத்தகத்தைப் படித்தவாறு இரதத்தில் போய்க்கொண்டிருந்தபோது ஆவியானவர், "நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள்" (அப் 8:29) என்று சொல்லுவதைப் பார்க்கிறோம். இந்த ஊழியத்தைத் தொடங்குபவர் ஆவியானவர். ஞானஸ்நானம் பெற்று அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது கர்த்தருடைய ஆவியானவர்

பிலிப்புவைக் கொண்டு போய்விட்டார் (21 :39). இவ்விதமாக எலியா, எசேக்கியேல் போன்ற தன்னுடைய ஊழியர்களை ஆவியானவர் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்துக்குக் கொண்டுபோன நிகழ்ச்சிகளை பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தில் காணலாம்.

பர்னபாவைப் பற்றி ''அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும், விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்'' (அப் 11:24) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அகபுவைப் பற்றி அவர் "உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான், அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே நடந்தது'' (அப் 11:28) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியானவரைக் குறித்த மேலான வெளிப்பாடுகளை மற்றவர்களை விட அதிகமாகப் பெற்றவர். தன்னுடைய நிருபங்களில் நூறு இடங்களுக்கு மேல் ஆவியானவரைக் குறித்த சத்தியங்களை அவர் அறிவிக்கிறார் என்றால் அதன் இரகசியம் ஆவியானவர் நிரப்பும்படியாக எப்போதுமே தன்னை வெறுமையான பாத்திரமாக வைத்திருந்தார். தன்னைக் குறித்து மேன்மை பாராட்டப் பல காரியங்கள், உலக ஆசீர்வாதங்கள், கல்வி, அறிவு, ஐசுவரியம், பக்திவைராக்கியம், மேல்குடிப்பிறப்பு எல்லாம் இருந்தும், தேவன் அவரை தமஸ்கு வீதியிலே சந்தித்த போது "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்'' (அப் 9:6) என்று தேவ சித்தத்துக்கு முழுமையான முறையில் தன்னை ஒப்புக் கொடுத்ததைப் பார்க்கிறோம். இன்று சில ஊழியர்கள் சில நிபந்தனைகளின் அடிப்படையில் ஊழியத்தில் செயல்படுவதினால் ஆவியின் நிறைவை தேவன் விரும்பும் அளவுக்குப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.

பவுல் எவ்விதமாக நிரப்பப்பட்டார் என்பதைப் பாருங்கள். அனனியா என்ற சீஷன் கர்த்தருடைய ஆணைக்கு கீழ்ப்படிந்தவராய் பவுலிடம் போய் அவர் மேல் கையை வைத்து, "சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான .இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும் படிக்கும், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார்'' (அப் 9:17) என்று சொல்லுகிறார், தன் தாசனாகிய பவுலை நிரப்பும்படியாக தேவனே ஒரு ஊழியரை அனுப்புகிறார்.

தலைகளின் மேல் கைகளை வைப்பதினால் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும் அனுபவம் முதல்முறையாய்

அப்போஸ்தலர் 8:14-17ல் சொல்லப்பட்டிருக்கிறது. பேதுரு, யோவான் போன்ற அப்போஸ்தலர்களிடம் மட்டுமே இந்த வரம் செயல்பட்டாலும், அனனியாவுக்கு தேவனால் இந்த கிருபை பவுல் நிமித்தமாய் வழங்கப்பட்டிருக்கவேண்டும். அதே நேரத்தில் எருசலேம் மேல்வீட்டறையில் இருந்தவர்கள் மேல் யாரும் கைகளை வைக்காமலே அவர்கள் ஆவியானவரைப் பெற்றார்கள். அன்றையத்தினம் இரட்சிக்கப்பட்டவர்கள் மேலும் யாரும் கைகளை வைத்து ஜெபிக்கவில்லை.

பேதுரு, பவுல் போன்ற முக்கியமான அப்போஸ்தலர்கள் மட்டுமல்ல, பந்திவிசாரிப்புக்காரர்களும், தீர்க்கதரிசிகளும் ஆவியானவரால் நிரப்பப்பட்டு செயல்பட்டதின் விளைவாகவே மிகக் குறுகிய காலத்துக்குள் சுவிசேஷம் பல நாடுகளில் அறிவிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன, ஊழியர்களுக்குள் இருந்து செயல்பட்டது பரிசுத்த ஆவியானவர்.

இயேசு சுவிசேஷ புத்தகங்களில் தொடங்கிய ஊழியத்தை பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலருடைய நடபடிகளில் தொடர்ந்து நடத்துகிறார். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட அப்போஸ்தலர்களும், சீஷர்களும் பலத்த கிரியைகளை நடப்பிக்கிறார்கள், கிறிஸ்தவர்களாகிய நாமும் இந்த கிரியைகளை பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு இயேசுவின் வருகை வரை நடப்பிக்கும்படியாகவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

# 4

# பரிசுத்த ஆவியானவரின் தன்மைகளும் பொதுவான கிரியைகளும்

தேவன் 'பரிசுத்தர்' (ஏசாயா 6:3). அதேநேரத்தில் அவர் 'ஆவியாயிருக்கிறார்' (யோவான் 4:24). எனவே பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய இன்னொரு பெயர் என்பதல்ல.

திரித்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவர், பிதா, குமாரன் இருவரிலிருந்தும் வித்தியாசமானவர். பிதாவும், குமாரனும் ஒன்றாக இணைந்து பரிசுத்த ஆவியானவருக்குள் இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனில் வாசம் செய்கிறார்கள் (யோவான் 14:23). இயேசு கிறிஸ்து உலகில் வெளிப்பட்ட நாட்களில் ஒரு சரீரம் அவருக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தது (எபி 10:5). மனிதன் பாவபரிகாரத்துக்காக அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார், இரண்டாயிரம் வருடங்களாக உலகில் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவருக்கு சரீரம் வழங்கப்படவில்லை. அதினிமித்தம் அவரை ஒரு தனிப்பட்ட ஆள்தத்துவத்தை உடைய நபராக ஏற்றுக் கொள்ளாமல் ஒரு தெய்வீக சக்தியாக, வல்லமையாக, அதிகாரமாக மட்டும் கருதும் தவறான உபதேசம் சபையின் சரித்திரத்தில் காணப்படுகிறது.

ஆவியானவர் தனிப்பட்ட ஆள்தத்துவத்தை உடையவர் என்பதை நூற்றுக்கணக்கான வேத வசனங்கள் நிரூபிக்கின்றன, அவர் தனித்தன்மை உடையவர். ஒரு மனிதனைப்போல பல விதங்களில் செயல்படுகிறார். (அப் 13:2), சுயமாக தீர்மானம் செய்பவர் (அப் 15:28), காரியங்களை நடப்பிப்பவர் (1 கொரி 12:11), ஆராய்ந்து அறிபவர் (1 கொரி 2:11), சத்தியங்களைக் கேட்டு அறிவிப்பவர் (யோவன் 16:13), சபையோடு பேசுபவர் (வெளி 2:17), போதித்து நினைப்பூட்டுபவர் (யோவான் 14:26), நமக்காக வேண்டுதல் செய்கிறவர் (ரோமர் 8:27), அன்பு நிறைந்தவர் (15:32), போராடுபவர் (ஆதி 6:3).

ஒரு தனிப்பட்ட நபரைப்போல் ஆவியானவர் ஆள்தத்துவத்தை உடையவராயிருப்பதினால் அவரை துக்கப்படுத்த முடியும் (எபே 4:30), விசனப்படுத்த முடியும் (ஏசா 63:10). அவருக்கு எதிராகப் பொய் சொல்ல முடியும் (அப் 5:3). ஒரு சக்திக்கு எதிராக இப்படி செயல்படமுடியாது.

பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட நபர் என்பது மட்டுமல்ல, பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய இயேசுவுக்கும் இணையானவர். சரிசமமானவர், பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானங் கொடுக்கவேண்டுமென்ற இயேசுவின் கட்டளையும் (மத் 28:19) "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக" (2 கொரி 13:14) என்ற பவுலினுடைய வாழ்த்துதலும், ஆவியானவர் பிதா குமாரனுடன் கொண்டுள்ள சம அந்தஸ்தை விளக்குகின்றன. அவருடைய திருநாமம் மூன்றாவதாகச் சொல்லப்படுவதினால், மற்ற இருவரைவிட மாட்சிமை, மகத்துவம், வல்லமை, அதிகாரம், மகிமை, பராக்கிரமம் இவைகளில் அவர் எந்தவிதத்திலும் குறைந்தவரல்ல.

அவர் நித்தியவாசி (எபி 9:14), சர்வ வியாபி (சங் 139:7), சகலத்தையும் அறிந்தவர் (1 கொரி 2:11), சர்வ வல்லவர் (1 கொரி 12:4-6), சிருஷ்டி கர்த்தர் (சங் 33:6), பூமியை புதிதாக்குபவர் (சங் 104:30), தூஷிக்கப்படக்கூடாதவர் (மத் 12:31,32), ஜீவனைக் கொடுப்பவர் (எசே 37:9).

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசமாயிருப்பதினால்தான் நாம் தேவனுடைய ஆலயமாகிறோம் (1 கொரி 3:16). ஆவியானவருக்கு விரோதமாகப் பொய் சொன்னவர்கள் உடனடியாக மரணத்தைச் சந்திக்கிறார்கள் (அப் 5:4,5).

பரிசுத்த ஆவியானவர் தேவனாய் இருக்கிறார். அதே நேரத்தில் அவர் பிதா அல்ல, குமாரனும் அல்ல, யோவான் 15:26ல் "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவி" என்று இயேசு குறிப்பிடுவது ஆவியானவர் இந்த இரண்டு நபர்களிலிருந்தும் வித்தியாசமானவர் என்பதை நிரூபிக்கிறது.

மத்தேயு 3:16,17 சொல்லுகிறது "இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது தேவ ஆவி புறாவைப் போல் இறங்கி, தன்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. திரித்துவத்தின் மூன்று நபர்களும் மூன்று வித்தியாசமான கிரியைகளை நடத்துவதை இங்கே பார்க்கிறோம். இயேசு யோர்தான் நதியருகே நிற்கிறார், பிதா

வானத்திலிருந்து பேசுகிறார். ஆவியானவரோ வானத்திலிருந்து பூமிக்கு இறங்கிவருகிறார்.

மூவரும் வேறுபட்ட ஆள்தத்துவத்தை உடையவர்கள் என்பதினால்தான் பேதுரு "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகள்" (1 பேதுரு 1:2) என்று விசுவாசிகளைக் குறிப்பிடுகிறார். மனித இரட்சிப்பைத் தீர்மானம் செய்தது பிதா. இரட்சிப்பின் கிரியையை இரத்தம் சிந்தி தொடங்கியது இயேசு. தனிப்பட்ட மனிதனில் நிறைவேற்றியது ஆவியானவர்.

பரிசுத்த ஆவியானவர் எந்த உருவத்திலும் வெளிப்படவில்லை-யென்றாலும் தண்ணீர், எண்ணெய், காற்று, அக்கினி. புறா, ஆபிரகாமின் ஊழியக்காரன் போன்ற உருவகங்கள் மூலமாக பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார், இவை மூலமாகவும், பரிசுத்த ஆவியானவரின் தன்மைகளையும் அவருடைய செயலாற்றலையும் அறிந்து கொள்ளமுடியும்,

## தண்ணீர்

ஒரு மனிதன் ஆகாரமின்றி பல நாட்கள் உயிர்வாழ முடியும், தண்ணீர் குடிக்காமல் ஜீவிக்கவே முடியாது. எனவேதான் அது ஜீவத்தண்ணீர் எனப்படுகிறது. தாகத்தைத் தீர்ப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல் தண்ணீர் ஒரு மனிதனுக்கு புத்துணர்ச்சியை வழங்குகிறது. அவனுடைய சுத்திகரிப்பிலும் உபயோகப்-படுத்தப்படுகிறது. ஆசாரியர்கள் ஜலத்தினால் ஸ்நானம் பண்ணிய பிறகே பலிகளைச் செலுத்த அனுமதிக்கப்பட்டார்கள் (லேவி 8:16).

பரிசுத்த ஆவியானவர் நித்திய ஜீவனைத் தரும் தண்ணீராக பழைய ஏற்பாட்டு நாட்களிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார், "தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன், அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச்செடிகளைப் போல வளருவார்கள்" (ஏசா 44:3,4). சங்கீதம் 1ல் குறிப்பிடப்படும் நீர்க்கால்கள் தேவ ஆவியானவரையே சுட்டிக்காட்டுகிறது.

சமாரிய ஸ்திரீயிடம் இயேசு சொல்லுகிறார் "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ, ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்" (யோவான் 4::14) என்று, தான் வழங்கவிருக்கும். ஆவியானவரைக் குறிப்பிடுகிறார். அவனுடைய தாகம் தீர்க்கப்படுகிறது. அதன்பின் அவன் தாகமடைவதில்லை. அவனுக்குள் நீரூற்று ஒன்று உண்டாகிறது. இதற்கு அடுத்த அனுபவம் இந்த நீரூற்று பெரிய நதியாக அவனுக்குள்ளிருந்து புறப்படும், பலருடைய தாகத்தைத் தீர்க்கிறது. இந்த அனுபவத்தை இயேசு சொல்லுகிறார் "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும், தம்மை விசுவசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்" (யோவான் 7:38, 39).

எசேக்கியேல் கண்ட தரிசனத்தில் ஆலயத்தின் வாசற்படியின் கீழிருந்து புறப்படும் தண்ணீரும் (47:1) பரிசுத்த ஆவியானவரையே குறிக்கிறது, முதலில் கணுக்கால் அளவாயிருந்த தண்ணீர் முழங்கால் அளவாகி. எசேக்கியேலின் முழுசரீரமும் மூழ்கத்தக்கதாய் அளவு அதிகரித்து ஆழமான நதியாக மாறுகிறது. (47:5). பரிசுத்த ஆவியானவராகிய நதி ஒன்றுதான், அதில் ஒருவன் தொடர்ந்து நடக்கும்போது படிப்படியாக பரிசுத்த ஆவியின் ஆழமான அனுபவங்கள் அவனுடையதாகின்றன.

யோவான் தரிசனத்தில் கண்ட பரம எருசலேமில் தேவனும், ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வரும் சுத்தமான நதித்தண்ணீர் (வெளி 22:1) பரிசுத்த ஆவியானவரையே குறிக்கிறது.

## எண்ணெய்

பழைய ஏற்பாட்டில் 175 இடங்களிலும், புதிய ஏற்பாட்டில் 12 இடங்களிலும் பரிசுத்த ஆவியானவர் எண்ணெயாக உருவகப்படுத்தப் பட்டிருக்கிறார். எண்ணெய் மனிதனால் பலமுறைகளில் அனுதினமும் உபயோகப்படுத்தப்படுகிறது. வெளிச்சத்தைக் கொடுக்கிறது (யாத் 25:6) உணவாகப் பயன்படுத்தப்படுகிறது (வெளி 6:6), மருந்தாகிறது (மாற்கு 6:13). அபிஷேகத்தில் உபயோகப்படுத்தப்படுகிறது (சங்23:5). காயங்களைக் கட்ட உதவுகிறது (லூக்கா 10:34).

இயேசுவை தேவன் ஆனந்த தைலத்தினால் அபிஷேகித்தார் என்பதை சங்கீதம் 45:7ல் பார்க்கிறோம். இராஜாக்களும் (1 சாமு 10:1),

ஆசாரியர்களும் (யாத் 29:7) எண்ணெய் பூசப்பட்டு அபிஷேகிக்கப்பட்டார்கள். குஷ்டரோகிகளின் பாவநிவர்த்திக்காகவும் ஆசாரியனால் எண்ணெய் உபயோகப்படுத்தப்பட்டது. (லேவி 14:10-32) யாக்கோபு பெத்தேலில் ஒரு கல்லைத் தூணாக நிறுத்தி எண்ணெய் வார்த்தபோது (ஆதி 28:18) அந்த ஸ்தலம் தேவன் வாசம் செய்யும் பரிசுத்த பூமியாக மாறியதாக எடுத்துக்கொள்ளலாம்.

ஒரு மனிதன் மேல் பரிசுத்த ஆவியானவர் வந்து தங்குவதற்கும், செயல்படுவதற்கும் வெளிப்படையான அடையாளமாக எண்ணெய் பூசப்பட்டது. "என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.'' (சங் 23:5) என்று தாவீது பெருமைப்பட்டுக் கொள்ளுகிறார்.

## காற்று

மறுபடியும் பிறத்தல் என்ற இரட்சிப்பின் முதல் கிரியையில் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டை இயேசு இவ்விதமாகச் சொல்லுகிறார். "காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்." (யோவான் 3:8)

எபிரேய மற்றும் கிரேக்க மொழிகளில் காற்று என்ற பதத்துக்கும், ஆவி என்ற பதத்துக்கும் ஒரே வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **(rûah, pneuma)** ஜீவ சுவாசம் ஊதப்பட்டபோது மனிதன் உயிருள்ளவனாகிறான் (ஆதி 2:7), இயேசு சீஷர்கள்மேல் ஊதி "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" (யோவான் 20:22) என்கிறார்.

''கர்த்தருடைய வழி சுழல்காற்றிலும், பெருங்காற்றிலும் இருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (நாகூம் 1:3). "பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம்" (அப் 2:1,2) உண்டானதும் எருசலேம் நகரில் பரிசுத்த ஆவியானவரின் வருகை சம்பவிக்கிறது.

எசேக்கியேல் உலர்ந்த எலும்புகளின் திரளைப் பார்த்து, "ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு, இவர்கள்மேல் ஊது'' என்ற தீர்க்கதரிசனத்தைச் சொல்லும்போது, ''ஆவி அவர்களுக்குள்

பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகாபெரிய சேனையாய் நின்றார்கள்." (37:9-11) சரீரத்திலும், ஆவியிலும் மரித்த நிலையில் இருப்பவர்களை உயிர்ப்பிப்பது பரிசுத்த ஆவியானவரே.

## அக்கினி

முட்செடியின் நடுவிலே அக்கினி ஜுவாலையிலே முதல் முறையாக தேவன் மோசேக்குத் தரிசனமானார். (யாத் 3:2). எனவே அக்கினி தேவனுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. தேவன் தனக்குப் படைக்கப்பட்ட பலிகளை அங்கீகரிக்க அக்கினியை அனுப்பினார் என்பதையும் பார்க்கிறோம். (1இராஜா 18:38). எனவே அக்கினி தேவ அங்கீகாரத்தின் சின்னம். அக்கினி தேவனுடைய பாதுகாப்பையும் உணர்த்துகிறது. இஸ்ரவேலர் அக்கினிஸ்தம்பத்தினால் வழிநடத்தப்பட்டார்கள் (யாத் 13:22). தேவன் அவர்களுக்கு அக்கினி மதிலாயிருப்பார் (சக 2:5). சில இடங்களில் அக்கினி தேவனுடைய சிட்சையையும், புடமிடுதலையும் வெளிப்படுத்துகிறது (மல் 3:2).

வேதம் சொல்லுகிறது, நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார் (எபி 12:29). எனவே பாவத்தோடு தேவசந்நிதியில் வருபவர்கள் அக்கினியால் பட்சிக்கப்பட்டார்கள் (லேவி 10:2). அக்கினி பரிசுத்த ஆவியினால் வரும் நியாயத்தீர்ப்பையும் குறிப்பிடுகிறது. அதே சமயத்தில் சுத்திகரிப்பையும் குறிப்பிடுகிறது. ஏசாயாவின் அசுத்த உதடுகளின் பாவத்தை நிவர்த்தியாக்க நெருப்புத் தழல் தேவைப்பட்டது. (ஏசா 6:6,7)

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் வருகையின்போது, அக்கினி மயமான நாவுகள் போல் பிரிந்திருக்கும் நாவுகள் சீஷர்கள் மேல் வந்திறங்கியதை நாம் அறிவோமல்லவா (அப் 2:3).

## புறா

உலகமெங்கும் புறா சமாதானத்துக்கு அடையாளமாகச் சொல்லப்படுகிறது. ஏனென்றால் புறா எந்தக்காரணத்திற்காகவும் தன்னுடைய இனத்தோடோ, மற்ற பறவைகளுடனோ சண்டை போடுவதில்லை. தான் துன்புறுத்தப்படும் போதும் அது எதிர்த்து நிற்பதில்லை. பரிசுத்த ஆவியானவரும் தேவனிடமிருந்து மனித இனத்துக்கு சமாதானத்தைக் கொண்டு வருபவராகக் காணப்படுகிறார்.

மேலும் புறா ஒரு சுத்தமான பறவை. அசுத்தமான இடங்களில் அது காணப்படுவதில்லை. பழைய ஏற்பாட்டில் இந்த பறவை ஒரு

பலியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது, தாழ்மைக்கும், நேர்மைக்கும் அடையாளமாகவும் புறா கருதப்படுகிறது. "புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத் 10:16) என்பது இயேசுவின் ஆலோசனை.

மழை நின்று நாற்பது நாள் சென்றபின் நோவா பேழையிலிருந்து முதலாவது ஒரு காகத்தை வெளியே அனுப்புகிறார். "அது புறப்பட்டுப் பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப் போகும் வரைக்கும் போகிறதும் வருகிறதுமாய் இருந்தது (ஆதி 8:7). புறாவோ "தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடம் காணாமல் திரும்பிப் பேழையிலே அவனிடத்தில் வந்தது. ஒலிவமரத்தின் இலையை அடையாளமாகக் கொண்டு வந்தது. (வ. 9) அசுத்த பிராணியான காகம் மரித்து, மிதந்துகொண்டிருக்கும் ஏதோ சரீரத்தில் தங்கியிருந்திருக்கும், அதனால்தான் பேழைக்குத் திரும்பவில்லை.

மத்தேயு 3:16 மாற்கு 1:10 யோவான் 1:32 ஆகிய வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் இயேசு ஞானஸ்நானம் பெறும்போது புறா வடிவில் வானத்திலிருந்து அவர்மேல் இறங்கிய நிகழ்ச்சி சொல்லப்பட்டிருக்கிறது.

மற்ற பறவைகளில் உள்ள பிச்சு என்னும் கசப்பு நிறைந்த பகுதி புறாக்களில் காணப்படுவதில்லை. பரிசுத்த ஆவியானவரும் புறாவைப்போல் மென்மையான குணாதிசயங்களைக் கொண்டவர்,

## ஆபிரகாமின் ஊழியக்காரர்

ஆதியாகமம் 24-வது அதிகாரம் மிகவும் நீளமானது. (மொத்தம் 67 வசனங்கள்). அதில் பிதா (ஆபிரகாம்). குமாரன் (ஈசாக்கு), பரிசுத்த ஆவியானவர் (ஊழியக்காரர்) ஆகிய மூன்றுபேர் செயல்படுகிறார்கள், பிதாவும் குமாரனும் பிதாவின் வீடாகிய கானானில் காத்திருக்கும்போது மணவாட்டியைத் தேடி ஊழியக்காரர் உலகத்துக்குள் பிரவேசிக்கிறார்,

இந்த அதிகாரத்தில் எந்த இடத்திலும் அவருடைய பெயர் ஒரு தடவை கூடச் சொல்லப்படவில்லை. பரிசுத்த ஆவியானவரும் சபையாகிய மணவாட்டியை உலகில் ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார், ஏனென்றால் ஊழியக்காரர் எஜமானனிடம் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிறார், (24:4) மணவாளனை மணவாட்டிக்கு அறிமுகப்படுத்துவது அவர்தான். மணவாட்டியான சபையை வரங்களினாலும் கனிகளாலும் அலங்கரிப்பதும், சபை

வழிவிலகி போய்விடாமல் பாதுகாத்து, பத்திரமாக அழைத்துச் சென்று மணவாளனுடன் சேர்ப்பிப்பதும் பரிசுத்த ஆவியானவர்தான்,

## பரிசுத்த ஆவியானவரின் பொதுவான கிரியைகள்

பரலோகத்தின் ஆசீர்வாதங்களை மனித இனத்துக்கு வழங்கும்படியாக பரிசுத்த ஆவியானவர் பலவிதமான கிரியைகளை உலகில் அனுதினமும் நடத்திக்கொண்டே இருக்கிறார், அவைகளில் மிகவும் முக்கியமானது தேவனை மனித இினத்துக்கு வெளிப்படுத்துவதாகும்,

மனித ஞானத்தால், மனித முயற்சியினால் யாரும் தேவனை அறிந்து கொள்ளவும் விளங்கிக் கொள்ளவும் முடியாது. "அந்த ஆவியானவர் எல்லாவற்யையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்" (1 கொரி 2:10-12) என்று பவுல் குறிப்பிடுகிறார்,

தேவனையும், தேவனுக்கடுத்த காரியங்களையும் வெளிப்படுத்தும்படியாகவே பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த வேதாகமத்தை மனித இனத்துக்கு வழங்கியிருக்கிறார், நாற்பதுக்கும் மேலான வித்தியாசமான நபர்களை இந்தப் பணியில் ஆவியானவர் உபயோகப்படுத்தினார், பேதுரு உறுதிப்படுத்துவது போல "தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினா ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேதுரு 1:21) "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது." (2 தீமோ 3:16), அது மட்டுமல்ல, வேத வசனங்ளைப் புரிந்து கொள்ளத் தேவையான வெளிச்சத்தையும் அவர் இன்றும் தந்துகொண்டிருக்கிறார்,

'கர்த்தர் சொல்லுகிறார்' என்று பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் உரைக்கும் காரியங்கள் எல்லாம் பரிசுத்த ஆவியானவர் மூலமாக அவர்கள் பெற்றுக் கொண்ட வெளிப்பாடுகளே. அதனால்தான் பவுல் அப்போஸ்தலன் ஏசாயா 6:10வது வசனத்தைக் குறித்து .... "பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு, நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார்" (அப் 28:27) என்கிறார். தாவீதும் தன்னுடைய ஞானத்தைக் கொண்டு எதையும் பேசவில்லை என்பதை

அறிக்கையிடுகிறார். "கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது" (2 சாமு 23:2).

பரிசுத்த ஆவியானவர் வேத வசனங்களின் மூலம் தேவனை வெளிப்படுத்துகிறார், இவை ஜீவனை உடையவை. நமக்கு ஜீவனைத் தருபவை. "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது," என்று இயேசு அறிவிக்கிறார் (யோவான் 6:63). "எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" (2 கொரி 3:6).

கனவுகள் மூலமாகவும், தரிசனங்கள் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் பரலோக இரகசியங்களையும், உலகில் நடக்கவிருக்கும் வருங்கால நிகழ்ச்சிகளையும் வெளிப்படுத்துவதை வேதத்தில் காண்கிறோம், "சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா" என்று ஆதியாகமம் 40:8 சொல்லுகிறது, தன் கனவை விளக்கிச் சொன்ன யோசேப்பைக் குறித்து பார்வோன் சொல்லுகிறான் "தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவர் உண்டோ" (ஆதி 41:38).

தேவனுடைய ஊழியங்களைச் செய்யும்படியான பெலனையும், ஞானத்தையும், வல்லமையையும் வழங்குவதும் பரிசுத்த ஆவியானவரே. (எண் 27:18, உபா 34:9), ஒத்னியேல் "மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால், அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, யுத்தம் பண்ணப் புறப்பட்டான்," (நியா 3:10) என்று பார்க்கிறோம், கிதியோன் (6:34), யெப்தா (11:29), சிம்சோன் (13:25, 14:6,19, 15:14), சவுல் (1 சாமு 11:6) போன்ற பல ஊழியர்களை வேதத்தில் பார்க்கிறோம். யோசுவா (எண் 27:18, உபா 34:9), எசேக்கியேல் (2:2, 3:24), தானியேல் (4:8,9, 5:11) மீகா (3:8) பரிசுத்த ஆவியின் நிறைவினால் செயல்பட்டார்கள், ஆதி அப்போஸ்தல சபையில் எல்லா ஊழியர்களுடன் நேரடியாக இடைபட்டு பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டதை 3-வது அத்தியாயத்தில் பார்த்தோம்.

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்," (ரோமர் 8:16) "அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 4:13). அவரில்

நிலைத்திருந்து, தேவனுடைய பிள்ளைகளாக மாறிவிட்டோம் என்ற நிச்சயத்தை உடையவர்களே உண்மையோடு அவருக்கு ஊழியம் செய்யமுடியும்.

ஒருவன் கிறிஸ்துவுக்குள் வளர தேவையான சத்தியங்களை அவரே போதிக்கிறார் என்பதை 1-வது அத்தியாயத்திலேயே தியானித்தோம் (யோவான் 14:26, 16:13). ஆவிக்குரிய வரங்களையும் கனிகளையும் அருளுவதும் அவரே. (அத்தியாயம் 9,10). வேதம் சொல்லுகிறது ''ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்'' (1 கொரி 2:15). ஆவிக்குரியவன் என்று சொல்லும்போது பரிசுத்த ஆவியானவரோடு சீரான உறவைக் கொண்டவன் என்று எடுத்துக்கொள்ளவேண்டும்.

கிருபையின் நாட்களில் வாழும் நாம் நம்முடைய எல்லா கிரியைகளையும் பரிசுத்த ஆவிக்குள் செய்யும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் "தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர்,'' (1பேதுரு 4:14) என்று பேதுரு அறிவிக்கிறார். உங்கள் மேல் தங்கியிருக்கிறார் ஆவியானவர் **உங்களுடன், உங்களுக்குள்** இருக்கும் அனுபவத்தை 1-வது அத்தியாயத்தில் பார்த்திருக்கிறோம். **உங்கள் மேல்** இருக்கும் மூன்றாவது அனுபவமும் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அதனால், யோவானைப்போல நாமும் ஆவிக்குள்ளாக முடியும் (வெளி 1:10, 4:2). பரிசுத்த ஆவியின் ஆறுதலைப் பெறமுடியும் (அப் 9:31). ஆவியிலே களிகூரமுடியும் (லூக்கா 10:21). ஆவியில் நிருணயம் பண்ணமுடியும் (அப் 19:21), ஆவிக்குள் நல்மனச்சாட்சியைப் பெறமுடியும் (ரோமர் 9:2) ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரமுடியும் (எபே 6:18, யூதா 20), ஆவிக்குள் அன்பு செலுத்தமுடியும் (கொலோ 1:8).

அனுதின வாழ்க்கையில் இந்த கிரியைகளை உலகில் நடப்பிக்கும்போதெல்லாம் பரிசுத்த ஆவியானவரின் சமூகத்தை நாம் உணருவதுதான் உண்மையான ஆவிக்குரிய அனுபவம். இப்படிப் பட்டவர்களே ஆவிக்குரியவர்கள்.

# 5

# இயேசுவின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து "தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்,'' (பிலிப் 2:6,7) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பாத்திரம் வெறுமையாக்கப் படவேண்டுமானால் அதில் உள்ளவைகள் கீழே ஊற்றப்படவேண்டும். கிறிஸ்து அவ்வண்ணமாக தன்னுடைய சகல தெய்வத்துவத்தையும் மகிமை, வல்லமைகளையும், அதிகாரம், பராக்கிரமங்களையும் முற்றிலுமாகத் துறந்தவராய், பூமியில் ஒரு சாதாரண மனிதனாக அவதரித்தார். அதனால்தான் தன்னை எப்போதுமே 'மனுஷகுமாரன்' என்று அழைத்துக்கொண்டார்.

ஒரு மனிதனில் காணப்படும் எல்லா தன்மைகளும் பெலவீனங்களும் அவரில் இருந்தது. படிப்படியான வளர்ச்சி (லூக்கா 2:40, 2:52); தாகம், (யோவான் 19:28); பசி (மத் 4:2, யோ 24:42); பெலவீனம் (யோ 13:21); இளைப்பு (யோ 4:6); கலக்கம் (யோ 11:35); சோர்வு (யோ 12:27); ஆச்சரியம் (மத் 8:10); துக்கம் (மத் 26:38); லூக்கா (23:35); தோல்வி உணர்வு, பாடுகள், கண்ணீர் (எபி 5:7-9); மரணம் (லூக்கா 23:46)]. இருந்தாலும் அவர் ''எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் அவரிடத்தில் பாவமில்லை" (எபி 4:15).

அவர் பரிசுத்தமாய் ஜீவித்தார் என்பது மட்டுமல்ல, அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்து தேவனுடைய ராஜ்யம் சமீபத்திலிருக்கிறது என்பதை நிரூபித்தார். பிசாசுக்களைத் துரத்தினார். மரித்தோரை எழுப்பினார். தான் அற்புதங்களைச் செய்ததோடு நிறுத்திக்கொள்ளாமல், அந்த அதிகாரத்தை தன் அப்போஸ்தலர்களுக்கும், சீஷர்களுக்கும் வழங்கினார் (லூக்கா 10:17-19) (மத் 10:8). இந்த அற்புத வல்லமைகளும் அதிகாரங்களும் எங்கிருந்து வந்தன?

இந்த அதிசயங்கள் அற்புதங்களை இயேசு திரித்துவத்தின் இரண்டாவது நபர் என்ற அதிகாரத்தின்படி செய்யாமல், மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரின் உதவியினால்தான் செய்தார் என்பதை பலவேத வசனங்கள் நிரூபிக்கின்றன. யோர்தான் நதியருகே ஞானஸ்நானம் பெற்று, பின் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கு முன்பு அவர் ஒரு அதிசயத்தையும் செய்யவில்லை. ஒரு ஆத்துமாவையாவது ஆதாயம் பண்ணினதில்லை. ஒரு போதனையும் தரவில்லை.

யோவான் 3:34 சொல்லுகிறது "தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்," கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பே இது தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப்பட்டது. "இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன்; நான் தெரிந்து கொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்" (ஏசாயா 42; 1). "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார்." (ஏசாயா 11:2). பரிசுத்த ஆவியானவரின் ஏழு வித்தியாசமான ஊழியங்களும் இங்கே குறிப்பிடப்படுகின்றன.

தன்னுடைய ஊழியத்தின் துவக்கநாட்களில் நாசரேத் ஜெப ஆலயத்தில் ஏசாயா 61:1-3 வசனங்களை வாசிக்கும் நிகழ்ச்சி லூக்கா 4:17-19ல் இவ்வாறு சொல்லப்படுகிறது: "அவர் புஸ்தகத்தை விரித்தபோது, கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" என்பதை வாசித்து "உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத் தினம் நிறைவேறிற்று" (வ. 21) என்ற தீர்க்கதரிசனம் தன்னைக் குறித்தது என்பதை உறுதிப்படுத்துகிறார்

ஏசாயா 61:2ல் சொல்லப்பட்ட "நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும்" என்ற ஒரு பகுதியை மட்டும் இயேசு வாசிக்கவில்லை என்பதைப் பார்க்கிறோம். ஏனென்றால் ஏசாயாவில் சொல்லப்பட்ட எல்லா ஊழியங்களையும் இயேசு உலகில் நடப்பித்தாலும் இந்த நீதியைச் சரிக்கட்டும் ஊழியம் நியாயத்தீர்ப்பின் ஊழியமாக

இயேசுவின் இரண்டாவது வருகைவரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

இயேசுவின் பிறப்பில், அவருடைய ஞானஸ்நானத்தில், அவருடைய ஊழியத்தில், அவருடைய பாடுமரணத்தில், அவருடைய உயிர்த்தெழுதலில், உயிர்த்தப்பின் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரை பரிசுத்த ஆவியானவர் எவ்விதமாகவெல்லாம் செயல்பட்டார் என்பதை வேத வசனங்களின் வெளிச்சத்தில் இந்த அத்தியாயத்தில் காண்போம்.

## இயேசுவின் பிறப்பில் ஆவியானவர்

''இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்'' (லூக்கா 1:31) என்று தேவதூதன் மரியாளிடம் அறிவிக்கிறான். ''அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்கு பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்,''

உன்னதமானவருடைய, திரித்துவ தேவனாகிய பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் கன்னி மரியாளின் வயிற்றில் இயேசு உற்பத்தியாகிறார். கர்த்தருடைய தூதன் இந்த உண்மையை யோசேப்பிடம் சொப்பனத்தில் இவ்விதமாகச் சொல்லுகிறான் ''அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது (மத் 1:20).

இவ்விதமாகவே பரிசுத்த ஆவியானவரால் உற்பத்தியான இயேசு "மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்'' (எபி 2:14). இந்த பிறப்பின் இரகசியத்தை மனித ஞானத்தால் விளங்கிக்கொள்ள முடியாது. பிரசங்கி சொல்லுவதுபோல் ''ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறது போலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்'' (11:5).

இயேசு ஒரு 'ஸ்திரியின் குமாரன்' என்று வேதத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. (ஆதி 3:15, ஏசா 7:14, மத் 1:18, மாற்கு 3:31, லூக்கா 1:35). ஏனென்றால் தன்னுடைய மனுஷீகத்தை மரியாள் மூலமாகவே இயேசு பெற்றார். தன் தெய்வீகத்தை பரிசுத்த

ஆவியினால் உற்பத்தியானதின் விளைவாக அவர் பெற்றிருந்தும் வேதத்தில் எந்த இடத்திலும் ஆவியானவர் இயேசுவின் தகப்பனாக குறிப்பிடப்படவில்லை. அதே சமயம் இயேசு யோசேப்பின் குமாரன் என்றும் வேதத்தில் ஆவியானவரால் சொல்லப்படவில்லை.

யோவான் ஸ்நானகனைக் குறித்து “தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்'' என்று கர்த்தருடைய தூதன் அறிவிக்கிறான் (லூக்கா 1:15). ஆனால் அவர் பரிசுத்த ஆவியினால் உற்பத்தியானவர் அல்ல. நிரப்பப்படுதலை விட உற்பத்தியாவது மிக மேலான அனுபவம். இயேசுவின் நாட்களில் வாழ்ந்த எலிசபெத், சகரியா, சிமியோன் (லூக்கா 1:41, 67, 2:25) போன்ற சிலர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள். என்று வேதம் சொன்னாலும் இவர்கள் ஆவியானவரால் உற்பத்தியானவர்கள் அல்ல.

இயேசுவின் உற்பத்தியில் மாத்திரமல்ல, அவருடைய வளர்ச்சியிலும் பரிசுத்த ஆவியானவருக்கு பங்கு உண்டு என்பதைப் பார்க்கிறோம். லூக்கா 2:40 சொல்லுகிறது ''பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு ஞானத்தினால் நிறைந்தது.'' ஏசாயா 11:2 நாம் பார்த்தபடி வித்தியாசமான ஏழு ஊழியங்களையும் இயேசு செய்யும்படியாக ஆவியானவர் தேவையான பெலனை அவர் வளர்ந்து வரும்போது அவருக்குக் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

## இயேசுவின் ஞானஸ்நானத்தில் ஆவியானவர்

இயேசு ஞானஸ்நானம் எடுக்கும் நிகழ்ச்சி நான்கு சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது அவருடைய வயது முப்பது (லூக்கா 3:23). முந்தின வசனம் 21 இவ்விதமாக எழுதப்பட்டிருக்கிறது, ''ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்ற போது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று ஜெபம் பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார்.'' சாதாரணமான ஒரு மனிதனைப் போல் திரளான ஜனங்களில் ஒருவராகத்தான் இயேசு ''எல்லா நீதியையும் நிறைவேற்றும் படியாக (மத் 3:15) ஞானஸ்நானம் எடுக்க வருகிறார். அதனால்தான் வானம் திறக்கப்படவும், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படவும் அவர் ஜெபம் பண்ணவேண்டியதிருந்தது.

''ஆவியானவர் புறாவைப் போல் தம்மேல் இறங்குவதை (இயேசு) கண்டார்'' என்று மாற்கு 1:10ல் பார்க்கிறோம். யோவான் ஸ்நானகனும் ஆவியானவரைக் கண்டு அறிக்கையிடுகிறார். ''ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்;

ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன்'' (யோவான் 1:33, 34).

பரிசுத்த ஆவியினாலும் அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுக்கும்படியாக நியமிக்கப்பட்ட இயேசு கிறிஸ்து முதலாவது ஒரு பாவ மனிதனைப்போல ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமாயிருந்தது. ஞானஸ்நானத்தை ஒதுக்கி வைப்பவர்கள் இதைக் கவனிக்கவும். யோவான் ஸ்நானகனுக்கு கொடுக்கப்பட்ட ஊழியம் வேறு, இயேசு நிறைவேற்றவிருந்த பரிசுத்த ஆவியின் ஞானஸ்நான ஊழியம் வேறு. இரண்டும் வித்தியாசமானவை. 7வது அத்தியாயத்தில் இதைக்குறித்து விவரமாக அறியலாம்.

## இயேசுவின் ஊழியத்தில் ஆவியானவர்

அப்போஸ்தலர் 10:38இல் இவ்விதமான அறிக்கையை வாசிக்கிறோம் ''நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.'' அபிஷேகிப்பது பிதாவாகிய தேவன். அபிஷேகிக்கப்படுவது இயேசு. அபிஷேக எண்ணெய் பரிசுத்த ஆவியானவர்,

அபிஷேகம் என்பது தன்னுடைய ஊழியத்தைச் செய்யும்படியாக தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலம் மனிதனுக்குக் கொடுக்கும் வல்லமை என்று சொல்லமுடியும், (இதைக் குறித்து விளக்கமாக 6-வது அத்தியாயத்தில் பார்க்கலாம்) எபிரெயர் 1:9 சொல்லுகிறது ''தேவனே (இயேசு), உம்முடைய தேவன் (பிதா), உமது தோழரைப் பார்க்கிலும் (சீஷர்கள், ஊழியர்கள், விசுவாசிகள்) உம்மை ஆனந்தத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்.'' அதனால்தான் ''நீர் அபிஷேகம் பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசு'' (அப் 4:28) என்று அவர் குறிப்பிடப்படுகிறார். தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாக அவர் அபிஷேகிக்கப்பட்டார் (லூக் 4:18).

ஞானஸ்நானத்தின் போது வானத்திலிருந்து இயேசுவின் மேல் இறங்கிய ஆவியானவர் உடனடியாகத் திரும்பிச் சென்றுவிடவில்லை. இயேசுவோடிருந்து பிசாசினால் சோதிக்கப்படும் படியாக இயேசுவை அனுப்பிவைத்தவர் அவர்தான். ''இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானைவிட்டுத் திரும்பி, ஆவியானவராலே

வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு, நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார்'' (லூக்கா 4:1,2). எனவே சோதனை வேளையில் ஆவியானவர் இயேசுவோடு இருந்து அவரைப் பெலப்படுத்தியிருக்கலாம் என்று தெளிவாகிறது. ''பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்த பின்பு, சிலகாலம் அவரைவிட்டு விலகிப்போனான். பின்பு இயேசு "ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்'' (வ, 13.14) என்று வேதவசனம் தொடர்கிறது.

இதற்குப் பிறகுதான் கலிலேயாவில் இயேசுவின் ஊழியம் தொடங்குகிறது. ஞானஸ்நானத்துக்கு முன்பும் அவர் பரிசுத்தமாகவே வாழ்ந்தவர், தன்னுடைய சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் எந்தப் பாவமும் செய்யவில்லை. இருந்தாலும் அவர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேக வல்லமையைப் பெறும்வரை ஊழியத்திற்கு காத்திருக்கவேண்டியதாயிருந்தது.

இயேசுவின் அற்புத ஊழியம், அவர் திரித்துவத்தின் இரண்டாவது நபராகிய தேவகுமாரன் என்ற அதிகாரத்தின் அடிப்படையில் செய்யப்படவில்லை, தன்னுடைய தேவத்துவத்தின் சகல அதிகாரங்களையும் தன்னைவிட்டு விலக்கியவராய், முற்றிலுமாக ஒரு மனிதனாகவே அவர் உலகில் வாசம்பண்ணினார். குஷ்டரோகிகளைக் குணமாக்கியது, குருட்டுக் கண்களைத் திறந்தது, செவிடர்களைக் கேட்கவைத்தது, பிசாசுக்களைக் கடிந்து கொண்டது, தண்ணீர் மேல் நடந்தது, காற்றை அடக்கியது, ஆயிரக்கணக்கானவர்களைப் போஷித்தது, தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றியது, மரித்தோரை உயிர்ப்பித்தது போன்ற அற்புதங்களை திரித்துவ தேவன் என்ற முறையில் அவர் செய்திருந்தால் தன்னுடைய முப்பது வயதுவரை ஏன் எதுவுமே செய்யாதிருந்தார்?

''நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுக்களைத் துரத்துகிறபடியால், தேவனுடையை ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே'' (மத் 12:28) என்று தன்னுடைய வல்லமையின் பின்னணியை வெளிப்படையாகவே அவர் அறிவித்தார். "அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாக கர்த்தருடைய வல்லமை விளங்குகிறது'' (லூக்கா 5:17) என்ற வசனம் தன்னுடைய சுயபலத்தினால் யாரையும் இயேசு குணமாக்கவில்லை என்பதை நிரூபிக்கிறது.

தன்னுடைய சரீரபிரகாரமான பிரிவுக்குப்பின் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து பரிசுத்த ஆவியின் வல்லமையை தன்னுடைய சீஷர்கள் அபரிமிதமாகப் பெற்றுக்கொள்ளப் போவதினால் இயேசு

சொல்லுகிறார் ''என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'' (யோவான் 14:12).

## இயேசுவின் பாடுமரணத்தில் ஆவியானவர்

பரிசுத்தவான்களின் பாடுகளில் தேவ ஆவியானவர் உதவி செய்யும் சத்தியம் ஏசாயா 50:6-8ல் வாக்களிக்கப்பட்டிருக்கிறது, ''அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடை மயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்'', இந்த வசனம் தீர்க்கதரிசனமாக இயேசுவின் பாடுகளைக் குறிப்பிடுவதாக இருக்கும் போது, அதில் (கர்த்தராகிய ஆண்டவர்' என்று சொல்லப்படுவது அவரில் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர்தான் என்பதில் சந்தேகமில்லை.

''அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப் பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்த'' (ஏசா 53:3) இயேசுவின் உபத்திரவ நாட்களில் தேற்றரவாளராகிய ஆவியானவர் அவருக்கு ஆறுதலைக் கொண்டுவந்திருக்க வேண்டும்

''இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன், பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ'' (யோவான் 12:27) என்று தன்னுடைய ஆற்றாமையை இயேசு வெளிப்படுத்துகிறார், கெத்செமனேத் தோட்டத்தில் துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார் (மத் 26:37) என்று சொல்லப்பட்டிருக்கிறது, உலகின் பாவங்கள் தன்மேல் சுமத்தப்படும் வேளையில் தேவனுடன் தான் நித்திய நித்தியமாகக் கொண்டிருக்கும் ஐக்கியம் தன்னைவிட்டு நீங்கும் என்பதை உணர்ந்து ''என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படிச் செய்யும்'' (வ. 39) என்று கதறுகிறார்,

இருப்பினும் பரிசுத்த ஆவியானவர் அவரோடு இருந்து, அவரை ஆற்றித் தேற்றி பெலப்படுத்தியபடியால் கல்வாரியை நோக்கி தைரியமாக தன்னுடைய பயணத்தை இயேசு தொடங்குகிறார். ஆவியானவரிடமிருந்து பெற்றுக்கொண்ட வல்லமையினால் மட்டுமே அவர் தயக்கமின்றி சிலுவை மரணத்தை ஏற்றுக்கொள்ளமுடிந்தது, ''நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து...'' (எபி 9:14) என்ற வசனம் இதை உறுதிப்படுத்துகிறது. பிதாவானவர் நியமித்த இரட்சிப்பின் கிரியையை

நிறைவேற்ற, மனித குமாரனாகிய இயேசுவுக்கு ஆவியானவரின் உதவி தேவைப்பட்டது.

இயேசுவின் வாழ்க்கையில் ஒரே ஒருவேளைதான் அவர் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தையும், ஆறுதலையும் முற்றிலுமாக இழந்தவராய்க் காணப்பட்டார், பிதாவின் முகமும் அவருக்கு மறைக்கப்பட்டது. "இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்" (ஏசாயா 54:7) என்ற தீர்க்கதரிசனம் கல்வாரியில் நிறைவேறியது. பாவ நிவாரண பலியாக நின்ற இயேசுவின் மேல் உலகின் பாவங்கள் சுமத்தப்பட்டபோது பிதாவாகிய தேவனே அவரை நொறுக்கி, பாடுகளுக்குட்படுத்தினதால் (ஏசா 53:10) "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத் 27:46) என்று இயேசு கதறி அழுகிறார். எவருடைய ஒத்தாசையும் இன்றி, தனி மனிதனாக நின்று, பழுதற்ற குற்றநிவாரண பலியாக இயேசு உங்களுக்காகவும், எனக்காகவும் தன்னை ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதே இரட்சிப்பின் நிபந்தனை.

## இயேசுவின் உயிர்த்தெழுதலில் ஆவியானவர்

"நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 11:25) என்றும் "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" (10:17,18) என்று இயேசு சொல்லியிருக்கிறார். ஏனென்றால் "பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல குமாரனும் தம்மில்தானே ஜீவனுடையவர்" (5:26).

பிதாவாகிய தேவனும் தன்னுடைய குமாரனுடைய உயிர்த்தெழுதலில் செயல்பட்டார் என்பதை அப்போஸ்தலர் 2:24 இவ்விதமாகச் சொல்லுகிறது "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்."

அதே நேரத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதலில் பரிசுத்த ஆவியானவரின் பங்கை வேதத்தின் பல வசனங்கள் தெரிவிக்கின்றன. பவுல் சொல்லுகிறார், "பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்" (ரோமர் 1:5). "மாம்சத்தில் கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1பேதுரு 3:18)

இயேசுவை மரணத்திலிருந்து உயிர்ப்பித்த பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரையும்

உயிர்ப்பிக்க வல்லவராயிருக்கிறார் என்று பவுல் சொல்லுவதையும் கவனியுங்கள். ''அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்'' (ரோமர் 8:11). ஆவியானவர் நம் ஒவ்வொருவருக்குள்ளும் வாசமாயிருக்கிறார், (அத்தியாயம் 6-ல் இந்த சத்தியம் விளக்கப்படுகிறது). அது நமக்கு நித்திய ஜீவன் என்கிற எவ்வளவு பெரிய நன்மையைத் தருகிறது.

பரிசுத்த ஆவியானவர் உயிர்ப்பிக்கும் தேவன் "இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப் பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள்" என்று எசேக்கியேல் 37:5ல் சொல்லப்பட்டிருக்கிறது. மரித்துப் போன சரீரத்தை மட்டுமல்ல, மரித்துப்போன மனித ஆவியையும் அவர் உயிர்ப்பிக்க வல்லவர். மறுஜென்மத்தின் கிரியையில் அவர் அதைத்தான் செய்கிறார்.

## உயிர்த்த இயேசுவும் ஆவியானவரும்

இயேசுவை உயிர்ப்பித்ததோடு பரிசுத்த ஆவியானவரின் கிரியை இயேசுவைப் பொறுத்தவரை நிறைவு பெறவில்லை, ஏனென்றால் இயேசு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்பு பல முக்கியமான போதனைகளை சீஷர்களுக்குக் கொடுக்க இயேசுவுக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி தேவைப்பட்டது. "இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்கு பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்டபின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும், செய்யவும், உபதேசிக்கவும்'' (அப் 1:1,2) தொடங்கினார் என்று எழுதப்பட்டிருக்கிறது. 'பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்டார்' என்றால் ஊழியத்தில் ஆவியானவரையும் இணைத்து கட்டளையிட்டார் என்று எடுத்துக் கொள்ளலாம், யோவான் 14.15, 16 அதிகாரங்களில் தொடங்கிய வேலை அவர் உயிர்த்த பின்னும் தொடர்கிறது.

இங்கு முக்கியமான கட்டளை இதுதான். ''நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள், ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்." (அப் 1:4.5) தமது ஞானஸ்நானத்தின் போது ஆவியானவரின் நிரப்புதலைப் பெறும்வரை தான் எந்த ஊழியமும் செய்யாமல் காத்திருந்ததைப்போல், அப்போஸ்தலர்கள் மூன்றரை ஆண்டுகள் தன்னால் பயிற்றுவிக்கப்பட்டிருந்தாலும் பெந்தெகொஸ்தே நாளில்

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளும் வரை அவர்கள் எதுவும் செய்யாமல் காத்திருக்க வேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பு.

உயிர்த்தெழுந்த இயேசுவின் முக்கியமான போதனை என்ன தெரியுமா? "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்." (அப் 1:8) என்பதே. இயேசுவுக்கு சாட்சியாயிருப்பது என்பது எளிதான காரியமல்ல. ஜெபிப்பது எளிது, உபவாசிப்பது எளிது, பிரசங்கிப்பது எளிது, காணிக்கை கொடுப்பது இன்னும் எளிது. சாட்சியாய் ஜீவிக்க நம்முடைய முழு வாழ்க்கையும் தேவனுக்குகென்று அர்ப்பணிக்கப் பட்டிருக்கவேண்டும், பேச்சு, சிந்தை, செயல் எல்லாம் அவருடைய ஆளுகைக்குள் இருக்கவேண்டும், ஆவியானவரின் உதவியின்றி யாரும் சாட்சியாயிருக்க முடியாது, ஏனென்றால் தேற்றரவாளராகிய ஆவியானவரே இயேசுவைக் குறித்து சாட்சி கொடுப்பவர் (யோவான் 15:26).

லூக்கா எழுதிய சுவிசேஷத்தில்தான் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து கூடுதலான உண்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன, அதில் இயேசு சீஷர்களிடம் பேசிய கடைசி வார்த்தை இதுதான், "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக்கா 24:49).

இவ்விதமாக இயேசுவின் வாழ்க்கையில் அவர் மரியாளின் வயிற்றில் உற்பத்தியான நாள்துவங்கி, அவர் பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் நான் வரை எல்லா காரியங்களிலும் பரிசுத்த ஆவியானவர் அவரோடு இடைபட்டார். பாவமறியாத தேவகுமாரனே ஆவியானவரைச் சார்ந்தும், அவருடைய வழிநடத்துதலை நம்பியும் செயல்படவேண்டியதாயிருந்தது, அப்படியிருந்தால் பூமியின் மண்ணின் தூசியினாலே உருவாக்கப்பட்ட நாம், அனுதினமும் பாவச்சேற்றில் விழுந்து எழும்பிக்கொண்டிருக்கும் நாம் நம்முடைய அன்றாடக வாழ்க்கையில் எவ்வளவு தூரம் அவரைச் சார்ந்து, நம்பி செயல்படவேண்டும் என்பதை உணர்ந்து கொள்வது உத்தமம்.

# 6

# மனித இரட்சிப்பில் பரிசுத்த ஆவியானவர்

'இரட்சிப்பு' என்பது ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் நித்திய கண்ணோட்டத்தில் மோட்சத்தையும் நரகத்தையும் பிரிக்கும் ஒரு கோடு. இவை இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை என்று ஒன்றும் இல்லை. ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாக மாறியிருக்க வேண்டும், அல்லது இரட்சிக்கப்படாமல் பிசாசின் பிள்ளையாகவே தொடர்ந்து ஜீவிக்க வேண்டும். கல்வாரியில் இயேசு சம்பாதித்த வாழ்க்கையை கிறிஸ்துவோடு இணைப்பதின் மூலம் நித்தியஜீவனைப் பெற்றுக் கொண்டவனே இரட்சிக்கப்பட்டவன்,

எனவே இரட்சிப்பு என்பது பாவத்தை அழித்து. பாவியை மீட்கும்படியான தேவனுடைய திட்டம் என்பது உறுதிப்படுகிறது. "இரட்சிப்பு கர்த்தருடையது" (யோனா 2:9, சங் 3:8), "நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்" (சங் 37:39) இரட்சிப்பின் கிரியையில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூன்று நபர்களும் செயல்படுகிறார்கள்,

இரட்சிப்பை பிதாவாகிய தேவன் தீர்மானம் செய்து, திட்டமிட்டு, தன்னுடைய நேச குமாரனை உலகத்துக்குள் அனுப்புகிறார் (யோவான் 3:16, கலா 4:5). பிதாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படிந்தவராய் இரட்சிப்பின் கிரியையை தன்னுடைய பாடுமரணத்தின் மூலம் கல்வாரியில் இயேசு நிறைவேற்றுகிறார் (யோவான் 6:38, எபி 10:5-7). அவர் உயிர்த்து பரலோகம் சென்றபின், பிதாவுடன் இணைந்து, தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு விசுவாசியும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளத் தேவையான கிரியைகளை மனிதனுக்குள் நடத்தும்படியாக பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறார். (யோவான் 14:26, 15:26, 16:7)

மனித இரட்சிப்பில் பரிசுத்த ஆவியானவர் செய்யும் முக்கியமான கிரியைகள் இவைகளே.

1) மறுஜென்மம் (Regeneration) என்ற புதிய ஜீவனை வழங்கும் பணி (யோவான் 3:5-8).

2) வாசம் செய்தல் (indwelling) என்னும் இரட்சிப்பை நிலைப்படுத்தும் பணி (1 கொரி 3:16, 2 தீமோ 1:14).

3) அபிஷேகம் (Anointing) என்னும் ஊழியத்துக்கு பெலப்படுத்தும் பணி (2 கொரி 1:21, சங் 23:5).

4) பரிசுத்தப்படுத்தல் (Sanctification) என்னும் பரிசுத்த ஜீவியத்துக்கு வழிநடத்தும் பணி (ரோமர் 8:13, 1 பேதுரு 1:2).

பரிசுத்த ஆவியானவர் நடப்பிக்கும் முக்கியமான இதர செயல்பாடுகளான பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் (Baptism of the Holy Spirit), நிரப்பப்படுதல் (Filling in) வரங்கள் (Gifts) கனித்தன்மைகள் (Fruit) ஆகியவைகளைக் குறித்து தனி அத்தியாயங்களில் தொடர்ச்சியாகக் கற்றுக்கொள்ளுவோம்.

## மறுஜென்மம்

தீத்து 3:5ல் இவ்விதமாகப் பவுல் சொல்லுகிறார் "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." நாம் செய்கிற எந்த நற்கிரியையும் நம்மை இரட்சிப்பதில்லை. மனிதன் தன்னைத்தானே இரட்சிக்க முடியாத இருண்ட நிலையில் இருக்கிறான், தான் இரட்சிக்கப்பட தேவனுக்கு அவன் எந்த உதவியும் செய்ய முடியுமா என்றால் அதுவும் இல்லை. ஏனென்றால் ஒருவன் பாவம் செய்வதை விட்டுவிட்டான், பரிசுத்தமாக ஜீவிக்கிறான், நற்கிரியைகளையேச் செய்கிறான் என்பதினால் மட்டும் அவன் இரட்சிக்கப்படுவதில்லை.

பாவ மனிதன் பெற்றுக் கொள்ளும் முதல் இரட்சிப்பின் அனுபவம் மறுஜென்மம் அல்லது மறுபடியும் பிறத்தல், இது பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலாகும். மறுபடியும் பிறத்தல், சில மொழிபெயர்ப்புகளில் மேலிருந்து பிறத்தல் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஆவிக்குரிய புதிய பிறப்பின் விளைவாக "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும்" (எபே 2:1) மரித்த நிலையில் இருக்கும் மனித ஆத்துமாவுக்கு புதிய ஜீவன் வழங்கப்பட்டு,

''புதுச் சிருஷ்டி'' (2 கொரி 5:17) ஆக ''புதிய மனுஷனைத்-தரித்துக்கொண்டவனாக'' (எபே 4:24) ஒரு மனிதன் மாறுகிறான், ''அவர்கள், இரத்தத்தினாலாவாது, மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்'' (யோவான் 1:13). ''அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக்கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கும்'' (எபே 2:5) அனுபவமே மறுஜென்மம்.

''மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக'' (ரோமர் 6:13) மாற்றப்படும் நாம் நித்தியவாசியான கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டு அவருடைய நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளுகிறோம்.

புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு மட்டுமே வழங்கப்படும் இந்த 'மறு ஜென்மம்' என்ற அனுபவத்தைக் குறித்து இயேசு நிக்கொதேமுவிடம் இவ்விதமாகச் சொல்லுகிறார், ''ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்'' (யோவான் 3:3). ''ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்'' (வ.5) இதில் ஜலம் வேத வசனத்தையும் (1பேதுரு 1:23), யாக் 1:18) ஆவி பரிசுத்த ஆவியானவரையும் குறிக்கிறது, இவர்களே நம்முடைய ஆவிக்குரிய புதிய பிறப்பின் பெற்றோர்,

இயேசு தொடர்ந்து சொல்லுகிறார் ''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்,'' (வ. 6) மாம்சம் பலவீனமான, அழிவுக்குள் வழிநடத்தும் தன்னைப் போன்ற மாம்சத்தைத்தான் உண்டாக்கமுடியும், பரிசுத்த ஆவியானவரோ புதிய ஜீவனைத் தருகிறார், அந்த ஜீவன் அவருடையது, நிரந்தரமானது.

புதிய ஏற்பாட்டில் 85 வசனங்கள், புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்வதினால் மனிதனுடைய வாழ்க்கை எப்படி மாற்றி அமைக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. முக்கியமான காரியம் என்னவென்றால் மறுபடியும் பிறந்த அந்த நிமிடத்தில்தானே, நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறிவிடுகிறோம், ''தேவகுமாரனுடைய சாயலுக்கு'' (ரோமர் 8:29) ஒப்பாகிவிடுகிறோம், ''கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாகிவிடுகிறோம்'' (ரோமர் 8:17). தேவனால் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளாக மாறி நாம் பெற்றுக் கொள்ளும் புத்திரசுவிகாரத்தின் ஆவியின் மகத்துவங்களை மனித அறிவினால் ஒருபோதும் விளங்கிக்கொள்ளமுடியாது.

மறுபடியும் பிறத்தல் முற்றிலுமாக பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடு என்பதை இயேசு உறுதிப்படுத்துகிறார். அவர் சொல்லுகிறார் "காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" (யோவான் 3:8).

காற்று பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் உருவகங்களில் ஒன்று என்பதை 4-வது அதிகாரத்தில் பார்த்தோம், காற்றினுடைய செயல்பாட்டை நாம் எவ்விதமாக நிர்ணயம் பண்ண முடியாதோ, அறிந்துகொள்ள முடியாதோ, அவ்விதமாகவே ஆவியானவர் எங்கே, எப்படி, எவ்விதமாக செயல்படுகிறார் என்பதை நாம் கண்டு கொள்ளமுடியாது.

வேதத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கும் மிகப் பெரிய பிரசங்கம் ஸ்தேவானுடையது (அப்:7). இருந்தாலும் அது ஒரு மனிதனையும் இரட்சிக்கவில்லை. வேண்டாவெறுப்புடன் தீர்க்கதரிசி யோனா புறஜாதிகள் மத்தியில் பிரசங்கித்தபோது தேவனை அறியாதிருந்த இலட்சக்கணக்கான ஆத்துமாக்கள் மனந்திரும்பினார்கள், அடையாளங்கள், அற்புதங்கள், போதனைகள் மத்தியில் தேவ குமாரனாகிய இயேசுவின் ஊழியத்தினால் நூற்றுக்கணக்கான ஆத்துமாக்களே தேவனை ஏற்றுக்கொண்டார்கள். பேதுருவின் ஒரே நாள் பிரசங்கம் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை மீட்டது. இவைகளுக்குக் காரணம் ஆவியானவரின் வித்தியாசமான செயல்பாடேயாகும்.

பரிசுத்த ஆவியினால் ஒருவன் பிறக்கும்போது பெற்றோரின் தெய்வீக சுபாவங்களைத் தனக்குள் பெற்றுக்கொண்டவன் ஆகிறான். அவன் தேவனை சிருஷ்டி கர்த்தராக மட்டுமல்லாமல் தன் சொந்தத் தகப்பனாக அறிந்துகொள்ளுகிறான். தேவனைப் பற்றி அறிந்து கொள்வதினால் எந்த நன்மையும் இல்லை. தேவனை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

தேவனை அறிந்துகொள்வதின் மூலமாகவே தேவனோடு ஜெபத்தில் அவரோடு பேசி உறவு கொள்ளும் மேன்மையை நாம் பெறுகிறோம். நாம் தேவனுடைய சுபாவத்தை நம்மில் கொண்டிருப்பதினால்தான் வேதவசனங்கள் நம்முடைய ஆத்துமாவுக்கு ஆகாரமாக மாறுகிறது. "நாம் தேவனுடைய

பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச்சாட்சி கொடுக்கிறார்'' (ரோமர் 8:16). (மறுஜென்மம் என்ற ஆவிக்குரிய சத்தியம் ஆசிரியரின் 'கிருபையின் மேல் கிருபை' என்ற புத்தகத்தில் விளக்கப்பட்டிருக்கிறது).

மறுபடியும் பிறந்து தேவனுடைய பிள்ளைகளாக மாறிய நாம் கடைசிவரை, அதாவது நம் மரணம்வரை, அல்லது இயேசுவினுடைய வருகைவரை தேவனுடைய பிள்ளைகள்தான். ஒருமுறை வழங்கிய நித்திய ஜீவனை அவர் திரும்ப எடுத்துக் கொள்வதில்லை.

மறுபடியும் பிறந்த ஒருவன் இன்னொருமுறை மறுபடியும் பிறக்கவேண்டியதில்லை. மறுபடியும் பிறந்த ஒரு மனிதன் பாவம் செய்யும்போது தன்னுடைய மீறுதல்களினிமித்தம் தேவனுடன் கொண்டிருக்கும் தன்னுடைய் ஆவிக்குரிய ஐக்கியத்தை இழந்ததுபோல் காணப்படலாம். ஆனால் அவனுடைய புத்திர சுவீகாரத்தை அவன் இழப்பதில்லை. ஏனென்றால் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடியநடத்துவார் (பிலிப் 1:5).

மனம்திருந்திய மைந்தன் உவமையில் வரும் இளையகுமாரன் மனந்திரும்பி தன் தகப்பனிடம் வந்தபின்புதான் மறுபடியும் குமாரனாகிறான் என்பதில்லை. பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தபோதும் அவன் குமாரன்தான். தகப்பன் மகன் என்ற உறவு எந்த சூழ்நிலையிலும் மாறுவதே இல்லை.

## வாசமாயிருத்தல்

மறுஜென்மத்தினால் உயிர்ப்பிக்கப்பட்டு, புதிய ஜீவனைப் பெற்றுக்கொண்ட ஆத்துமாவை நித்தியத்துக்குள் பிரவேசிக்கும் வரைக் காத்துக் கொள்ளும்படியாக பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனுக்குள் வாசம் செய்யவேண்டியதாயிருக்கிறது. பவுல் சொல்லுவதுபோல் "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்'' (எபே 2:10). எனவே பவுல் சொல்லுகிறார் "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்'' (2 தீமோ 1:14). நம்முடைய முயற்சியில் அதைக் காத்துக்கொள்வது என்பது இயலாத காரியம்,

பரிசுத்த ஆவியானவர் ''உங்களுடனே வாசம் பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதினால் நீங்கள் அவரை அறிவீர்கள்'' (யோவான் 14:17) என்ற வசனத்தை 1-வது அதிகாரத்திலேயே தியானித்தோம். ''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா'' (1 கொரி 3:16). ''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா" (1 கொரி 6:19). என்று கொரிந்து சபைக்கு பவுல் எழுதுகிறார்.

'கொரிந்து சபையார் மாம்சத்துக்குரியவர்கள், பெலனில்லாதவர்கள், பொறாமை, வாக்குவாதம், பேதகம் நிறைந்தவர்கள் என்றும்' (1 கொரி 3: 4-7) விபசாரப் பாவத்துக்குட்பட்டவர்களென்றும் (5:1) நாம் அறிவோம். ஆனாலும் அந்த சபையாரிடமே பவுல் சொல்லுகிறார் 'நீங்கள் பரிசுத்த ஆவியின் ஆலயம்.' இந்த பிரச்சனைகள் மத்தியிலும் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருப்பது தடைபடவில்லை.

நியாயப்பிரமாணம் என்ன சொல்லும்? 'நற்கிரியைகளைச் செய்யுங்கள். அப்போது நீங்கள் தேவனுடைய ஆலயமாவீர்கள்.' ஆனால் கிருபையின் தத்துவம் என்ன தெரியுமா? 'மறுபடியும் பிறந்ததின் விளைவாக நீங்கள் தேவனுடைய ஆலயம் ஆகவே நற்கிரியைகளைச் செய்யுங்கள்.'

பிரமாணத்தின் காலம் கல்வாரியோடு முடிந்தது. "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல'' (ரோமர் 8:9). ஆவிக்குட்பட்டவனே நற்கிரியைகளைச் செய்கிறான்.

மறுபடியும் பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார். அதனால்தான் அவனுடைய சரீரம் பரிசுத்தமான ஆலயமாக மாறுகிறது. தேவனை எல்லா சூழ்நிலைகளிலும் கனப்படுத்தும் வாழ்க்கை இப்படிப்பட்ட மனிதனுக்குத்தான் சாத்தியமாகிறது. ''நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால் (மறுஜென்மத்தின் விளைவாக) அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களிலே அனுப்பினார். ஆகையால் நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய். நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய்த்

தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்'' (கலா 4:6,7). ''ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு'' (கொலோ 1:12) நாம் தகுதியுள்ளவர்களாகிறோம்.

பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனில் நிரந்தரமாக வாசம் செய்யும் அனுபவம் பழைய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. யோசேப்பு (ஆதி 41:38) யோசுவா (எண் 27:18) தானியேல் (4:8) போன்ற பல பரிசுத்தவான்கள் தேவ ஆவியைப் பெற்றுக்கொண்டு செயல்பட்டார்கள். ஆனால் தற்காலிகமாகவே ஆவியானவர் அவர்களுக்குள் இருந்து செயல்பட்டார்.

''ஆவி சவுலைவிட்டு நீங்கினார்'' (1 சாமு 16:14) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ''கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினபடியால்'' (நியா 15:14) வல்லமையான கிரியைகளைச் செய்த சிம்சோன் அவர் தன்னைவிட்டு விலகிப் போனதை அறியாதிருந்தான் (16:20) என்று பார்க்கிறோம். இந்த பரிதாபமான நிலமை தனக்கும் வந்துவிடக்கூடாது என்பதினால்தான் ''தாவீது உமது சமூகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்'' (சங் 51:11) என்று வேண்டுதல் செய்கிறார்.

புதிய ஏற்பாட்டு நாட்களில் நாம் இப்படியாக தாவீதைப்போல் ஜெபிக்க வேண்டியதில்லை. ஏனென்றால் என்றென்றைக்கும் (யோவான் 14:16) நம்முடன் ஆவியானவர் இருக்கும்படியாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயேசு பிதாவிடம் வேண்டிக் கொண்டிருக்கிறார். இன்றும் பிதாவின் வலது பாரிசத்தில் இருந்து நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

நிரந்தரமாக ஆவியானவர் நமக்குள் வாசம் செய்யும் சத்தியம் வாக்குத்தத்தமாக ஏசாயா 59:21ல் இவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது ''உன்மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.''

இரட்சிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவன் பாவம் செய்யும் போது பரிசுத்த ஆவியை இழந்துபோவான் என்று வேதத்தில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. ஆவியானவர் ஒருவனுக்குள் வாசமாயிருப்பதை நிறுத்திவிட்டார் என்பது இரட்சிக்கப்படாத நிலமையைக் குறிப்பிடுகிறது.

அதேநேரத்தில் பாவங்கள் மத்தியிலும் அவர் நம்மிடம் வாசமாயிருக்கிறார் என்பதினால் பாவம் செய்ய நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. நம்முடைய பின்மாற்றம் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறது (எபே 4:30) அவித்துப்போட ஆரம்பிக்கிறது. (1 தெச 5:19). நிரப்பப்படுவதற்கு எதிர்மறையான இந்த கிரியைகளைக் குறித்து 8-வது அதிகாரத்தில் பார்க்கலாம்.

நாம் "ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருவதினால்'' (எபே 2:22). அவரைத் துக்கப்படுத்தாமலிருப்பது நம்முடைய பொறுப்பும், கடமையுமாகிறது. அதனால்தான் பவுல் எச்சரிக்கிறார் "நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால் அவர்கள் (அவிசுவாசிகள்) நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் (2 கொரி 6:16,17). பேதுருவும் சொல்லுகிறார் "தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார் .... ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது, பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது'' (1 பேதுரு 4:14,15).

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசமாயிருக்கிறவர் என்பதினால் நாம் பரிசுத்தத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம், அவர் நமக்குள் வாசமாயிருக்கும்படியாகவே ஆவியின் வரங்கள் அருளப்படுகின்றன. ஏனென்றால் சங்கீதம் 68:18ல் தாவீது சொல்லுகிறார் "தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம் பண்ணும் பொருட்டு துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக் கொண்டீர்".

பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனுக்குள் வாசமாயிருந்து நான்கு வித்தியாசமான கிரியைகளை நடப்பிக்கிறார்

**நிரப்புகிறார்** (அதிகாரம் 8)

**வரங்களை அருளுகிறார்** (அதிகாரம் 9 & 10)

**முத்தரிக்கிறார்** (முத்திரை - Seal)

**அச்சாரத்தைக் கொடுக்கிறார்** (advance/guarantee)

2 கொரிந்தியர் 1:22 சொல்லுகிறது "அவர் நம்மை முத்தரித்து நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்".

**முத்திரை** என்ற வார்த்தை அதிகாரத்தையும் உரிமையையும் குறிக்கிறது. பார்வோனுடைய முத்திரை மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட யோசேப்பு (ஆதி 41:42) எகிப்தின் பிரதம மந்திரியாகிறார். நமக்குள் ஆவியானவர் வாசம் செய்யும்போது நாம் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி, ராஜரிகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி, தேவனுடைய ஜனம் (1 பேதுரு 2:9) என்ற அதிகாரம், நிச்சயம் நமக்கு வழங்கப்படுகிறது.

அடுத்ததாக முத்திரை பாதுகாப்பைக் குறிக்கிறது. பதிவுத்தபாலில் ஒரு பொருளை அனுப்பும்போது 'அரக்கு முத்திரை' போடுகிறார்கள். யாருக்கு அந்த பொருள் அனுப்பப்படுகிறதோ அவர்தான் அந்த முத்திரையை உடைத்துப் பொருளை எடுத்துக்கொள்ள முடியும். பரிசுத்த ஆவியானவர் நம்மை முத்திரை போட்டு பிதாவிடம் அனுப்புகிறார். எனவே பிசாசானவன் நம்மை கைப்பற்றிக் கொள்ள முடியாது. அதனால்தான் பவுல் "நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவி'' என்று ஆவியானவரைக் குறிப்பிடுகிறார் (எபே 4:30).

இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறித்து பவுல் மேலும் சொல்லுகிறார் "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்'' (எபே 1:13,14)

**அச்சாரம்** என்றால் முன்பணம் என்று பொருள். ஒரு நிலம் அல்லது வீட்டை வாங்கும்போது, விலை பேசி ஒப்பந்தம் செய்து முன்பணம் கொடுக்கப்பட்டதுமே அதன் உரிமை மாறிவிடுகிறது. குறிப்பிட்ட நேரத்தில் (மீட்கப்படும் நாளில்) மீதியான பணம் கொடுக்கப்பட்டு விலைகிரையம் பதிவு செய்யப்படும் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபெக்காளிடம் கொடுத்த பொற்காதணியும், கடகங்களும் அவள் ஈசாக்குவின் உரிமையாகப் போகிறதை உறுதிப்படுத்தும் அச்சாரம் என்று சொல்லமுடியும்.

பரிசுத்த ஆவியை அச்சாரமாக, முதற்கனியாகப் பெற்றுக்கொண்ட நாம் கிறிஸ்துவினுடையவர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் இன்னும் பலகாரியங்கள் நம்மில் நடக்கவேண்டியதிருக்கின்றன. நம் சரீரம் மகிமைப்படவேண்டிய-திருக்கிறது, சரீரத்தை ஒட்டிக்கொண்டிருக்கும் பாவக்கறைகள் அகற்றப்படவேண்டியதிருக்கிறது. ஆனால் அச்சாரம் கொடுக்கப்பட்ட நாள் முதல் இந்த மாற்றங்கள் நம்மில் தோன்ற ஆரம்பித்துவிட்டன. நாள் ஒன்று வரும், பரிபூரணப்பட்டவர்களாய் அந்த மீட்பின் நாளில் நாம் அவருக்குச் சொந்தமாகிவிடுவோம்.

## அபிஷேகம்

தேவனுடைய பிள்ளைகள் என்ற மேலான சிலாக்கியத்தைப் பெற்றிருக்கும் நம்முடைய பிரதானமான கடமை அவரை நேசித்து அவருக்கு ஊழியம் செய்வதாகும். ஊழியம் என்றால் பூமியில் தேவனுடைய வேலையை நடப்பிப்பது ஆகும், நம்முடைய பெலத்தினாலோ, ஞானத்தினாலோ தேவனுடைய வேலையைச் செய்யமுடியாது.

எனவே கிறிஸ்துவை இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினாலே அபிஷேகிக்கப் படுகிறார்கள். மனித சக்திக்கு மிஞ்சிய, இயற்கை நியதிகளுக்கு மேலான பெரிய காரியத்தைச் செய்யும்படியாக தேவன் நம்மை அழைத்திருக்கிறார், அழைத்தவர் உண்மையுள்ளவர். தன்னுடைய ஆவியின் ஆற்றலினால் மாமிச பெலவீனங்கள், அன்பற்ற தன்மை, அவிசுவாசம், மற்றும் சந்தேகங்களை மேற்கொள்ள அபிஷேகத்தை வழங்குகிறார்.

ஒரு மனிதனை இன்னொரு மனிதன் அபிஷேகிக்க முடியாது. தான் பெற்றிருக்கும் அபிஷேகத்தை மற்றவர்களுக்கு வழங்குவதும் கூடாத ஒரு காரியம், 2 கொரிந்தியர் 1:21 சொல்கிறது "நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே". "நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்" (1 யோவான் 2:20). "நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்" (சங் 23:5) என்று தான் பெற்றக்கொண்ட அபிஷேகம் சாமுவேலிடமிருந்து அல்ல, தேவனால் வந்தது என்று தாவீது அறிக்கையிடுகிறார். "கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசு" (ஏசாயா 45:1) என்று பெர்சிய நாட்டு புறஜாதி ராஜா குறிப்பிடப்படுகிறார்,

பழைய ஏற்பாட்டு நாட்களில் தேவனுடைய பிரதிநிதிகளாக இஸ்ரவேலை அரசாள இராஜாக்கள் அபிஷேகிக்கப்பட்டார்கள், திறப்பின் வாசலில் நின்று இஸ்ரவேலருக்காக தேவசமூகத்தில் பலிகளைச் செலுத்தி, பரிந்து பேசும் ஆசாரியர்கள் அபிஷேகிக்கப்பட்டார்கள், இவை உண்மைதான். தேவனுடைய வார்த்தைகளை இஸ்ரவேலருக்கு அறிவிக்கும் தீர்க்கதரிசிகளும் அபிஷேகிக்கப்பட்டார்கள் என்று நினைக்கிறோம், ஆனால் எந்த தீர்க்கதரிசியும் அபிஷேகிக்கப்பட்ட நிகழ்ச்சி வேதத்தில் சொல்லப்படவில்லை, தேவனுடைய ஆணையின்படி எலிசாவை எலியா அபிஷேகித்திருக்க வேண்டும், (1 இரா 19:16). ஆனால் அப்படி அவன் செய்யவில்லை, தேவனுடைய வார்த்தையை அறிவித்த தீர்க்கதரிசிகளை, மனிதர்கள் மூலமாக அல்ல, தேவனே நேரடியாக அபிஷேகித்தார்,

புதிய ஏற்பாட்டில் நாம் ஒவ்வொருவரும் ராஜரீகமான ஆசாரியர்களாயிருக்கிறோம், (1 பேதுரு 2:9) நம்மில் தோன்றும். சுயத்தையும், பாவத்தையும் தோற்கடித்து ராஜாக்களாகிறோம், உலகத்துக்காக தேவனிடம் பரிந்துபேசும் ஆசாரியர்களாகிறோம், எனவே எந்த ஒரு கிறிஸ்தவனாவது தான் அபிஷேகம் பெறவில்லை என்று சொல்லமுடியாது. அனுதினமும் புதிய அபிஷேகம் வேண்டும் என்று நாம் தேடி ஓடவேண்டியதில்லை.

அந்நிய பாஷை பேசினால்தான் அபிஷேகம் என்பதல்ல, ஆடுவது, பாடுவது, சத்தமிடுவதுதான் அபிஷேகம் என்பதல்ல, ஆரவாரமாய் இசைக்கருவிகளை முழங்கவைத்து, பாடல் அடிகளை மிகமிக வேகமாக பாடவைத்து, மக்களை உணர்ச்சிவசப்படுத்துவதுதான் அபிஷேகம் என்பதல்ல. தேவனுடைய வேலையைச் செய்ய தேவனுடைய பெலத்தைப் பெறுவதுதான் அபிஷேகம், அதை வழங்குவது பரிசுத்த ஆவியானவரே.

அந்த நாட்களில் ஒரு சரீரம் அல்லது ஒரு பொருளின்மேல் எண்ணெய் பூசுவது அல்லது ஊற்றுவது அபிஷேகிக்கிறதாக சொல்லப்பட்டது, விழாக்காலங்களில், விருந்து உபச்சாரங்களில் மனமகிழ்ச்சியின் அடையாளமாக எண்ணெய் பூசப்பட்டது, நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது, தேவன் வெள்ளைப்போளம், கருவாப்பட்டை, வசம்பு, இலவங்கப்பட்டை ஆகியவற்றை ஒலிவ எண்ணெயில் கலந்து அபிஷேகத் தைலத்தை உண்டாக்கும்படியாக மோசேக்கு கற்றுக்கொடுக்கிறார்

(யாத் 30:23-25) இந்த எண்ணெய் பரிசுத்த ஆவியானவருக்கு வெளிப்படையான அடையாளமாகும்.

ஒருவர் மேல் இந்த எண்ணெய் பூசப்படும்போது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக, அல்லது ஒரு ஊழியத்தை நிறைவேற்றும்படியாக பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கி வருவதைக் இது சித்தரிக்கிறது. (1 சாமு 10:1). தேவன் அவர்களுக்கு கொடுத்த வேலையை செவ்வையாகச் செய்து முடிக்க தெய்வீக ஆற்றலை போதனையை, வழிநடத்துதலை அபிஷேகத்தின் வாயிலாக அவர்கள் பெற்றுக்கொண்டார்கள் என்பதை உணர்த்தும் படியாகவே அவர்கள் மேல் எண்ணெய் பூசப்பட்டது.

''நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை, அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது, அது சத்தியமாயிருக்கிறது பொய்யல்ல'' (1 யோவான் 2:27). நாம் பெற்ற அபிஷேகம் ஒருநாள் கூடி மறுநாள் குறையும் என்று வேதத்தில் சொல்லப்படவில்லை, அது நிலைத்திருக்கிறது, அது சகலத்தையும் போதிக்கிறது. போதிப்பது பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளில் ஒன்று.

கிரேக்க மொழியில் 'கிறிஸ்து' என்பதற்கும் எபிரேய மொழியில் 'மேசியா' என்பதற்கும் அபிஷேகிக்கப்பட்டவர் என்றுதான் பொருள், விலையேறப்பெற்ற பரிமளத்தைலத்தை அவர்மேல் ஊற்றிய நிகழ்ச்சி நான்கு சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது (மத் 26:7, மாற் 14:3, லூக்கா 7:36 யோவான் 12:3) மற்றபடி புதிய ஏற்பாட்டில் யாரும் எண்ணெய் பூசப்பட்டு அபிஷேகிக்கப்படவில்லை. வியாதியஸ்தர்கள் மேல் எண்ணெய் பூசுவது மட்டும் யாக்கோபு 5:14ல் சொல்லப்பட்டிருக்கிறது

## பரிசுத்தமாக்கப்படுதல்

கல்வாரியில் இரட்சிப்புக்கான கிரையம் செலுத்தப்பட்டாயிற்று. அது ஒரு கடந்தகால நிகழ்ச்சி, பாவத்தின் சம்பளம் மரணம் என்ற நியதியிலிருந்து மனித இனம் தப்பிவிட்டது, நாம் இரட்சிக்கப்பட்டு விட்டோம், ஆனால் நாம் அனுதினமும் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம், எனவே இரட்சிப்பு ஒரு நிகழ்கால நிகழ்வு பாவத்தின் தண்டனையிலிருந்து தப்பித்த நாம் இன்று பாவத்தின் வல்லமையை, அதிகாரத்தை மேற்கொள்ளவேண்டும். பாவம் நிறைந்த

உலகில் நாம் ஜீவிக்கும்போது அதின் அசுத்தங்கள் நம்மைத் தீட்டுப்படுத்துகின்றன. எனவே தேவன் சொல்லுகிறார் "நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்'' (வெளி 22:11) ஏனென்றால் தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல. பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்'' (1 தெச 4:7) ''பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' (எபி 12:14).

பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் சரியான அர்த்தம் தேவனுடைய உபயோகத்துக்கென்று பிரித்தெடுக்கப்படுதல் என்பதாகும். இந்த பொருளில் இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டில் சுமார் 760 தடவையும் புதிய ஏற்பாட்டில் 300 தடவையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்து நம்மில் உருவாகுமளவுக்கு நாம் பரிசுத்தமாகவேண்டும். (கலா 4:19) கிறிஸ்துவின் சாயலாகிய மகிமையை நாம் பெறுவதற்கு நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் அனுதினமும் செயல்படுகிறார். "கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்'' (2 கொரி 3:18).

''ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டபடியினாலே'' (2 தெச 2:13) என்று பவுல் எழுதியிருப்பதைக் கவனியுங்கள். "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்'' (1 யோவான் 1:7) என்பது உண்மைதான், அந்த சிந்தப்பட்ட இரத்தத்தினால் வரும் பரிசுத்தத்தை தனிப்பட்டவர்களின் வாழ்க்கையில் நிலைநிறுத்துவது ஆவியானவர்தான். எபிரெயர் 10:14,15 சொல்லுகிறது "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் (இயேசு) என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார், இதைக் குறித்து பரிசுத்த ஆவியானவரும் நமக்கு சாட்சி சொல்லுகிறார்.'' நம்முடைய பரிசுத்தத்தின் நிலை இன்னதென்பதை ஆவியானவரே அறிவார்.

இவ்வாறு இரட்சிப்பின் கிரியையை ஒரு மனிதனுடைய இருதயத்தில் தொடங்குபவர், நடத்துபவர், நிலை நிறுத்துபவர், பூரணப்படுத்துபவர், பரிசுத்த ஆவியானவரே. கிறிஸ்துவினுடைய கிருபையிலும், தேவனுடைய அன்பிலும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியத்திலுமே இரட்சிப்பு அடங்கியிருக்கிறதென்றால், ஆவியானவரின் ஐக்கியத்தின் மூலமாகவே, அவர் நமக்குள்

வாசமாயிருப்பதினாலேயே கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும் நம்முடையதாகிறது. நாம் இரட்சிக்கப்பட்டவர்களாகிறோம், இரட்சிப்பில் நிலை நிற்கிறோம்.

இவ்வாறு இரட்சிப்பின் கிரியையை மனிதனில் நிறைவேற்றும்படியாக புதிய ஏற்பாட்டு நாட்களில் மனிதனுக்குள் இருந்து, அதாவது அவனுடைய ஆள்தத்துவத்துக்குள் பிரவேசித்து (intra-personal) பரிசுத்த ஆவியானவர் செயல்படுகிறார். இந்த அனுபவத்தையே இயேசு ஆவியானவர் 'உங்களுக்குள்ளே இருப்பதினால்' (யோவன் 14 17) என்று குறிப்பிடுகிறார். பெந்தெகொஸ்தே நாள்வரை பரிசுத்த ஆவியானவர் மனிதனுக்கு வெளியே இருந்து (Extra-personal) செயல்பட்ட அனுபவத்தை அதே வசனத்தில் 'உங்களுடனே வாசம் பண்ணி' என்று இயேசு குறிப்பிடுகிறார்.

ஒரு விசுவாசிக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்வதின் விளைவாகவே வரங்கள் செயல்பட ஆரம்பிக்கின்றன. அவன் பெற்றுக் கொண்ட அபிஷேகம் அவனை வாழ்க்கையில் பல கடினமான அனுபவங்கள் வழியாக நடத்துகிறது. சகலத்துக்கும் தேவனையே சார்ந்து கொள்ளும் அனுபவத்தைப் பெறுகிறான். அவனுடைய சுயம் உடைக்கப்படுகிறது. இவ்விதமாக முற்றிலுமாக தன் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு சமர்ப்பணம் செய்யும்போது அவனில் இருந்து கிறிஸ்துவின் தெய்வீக சாயல் வெளிப்படுகிறது. அவன் கிறிஸ்துவை பிரதிபலிக்க ஆரம்பிக்கிறான். ஆவியின் கனி அவனில் தோன்றுகிறது அவனுடைய இரட்சிப்பு பூரணப்படுகிறது.

# 7

## பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்

பரிசுத்த ஆவியானவரைக் குறித்த சத்தியங்களில் அதிக குழப்பத்தையும், சபைகளில் பிரிவினைகளையும் உண்டாக்குகிற ஒரு உபதேசம் உண்டென்றால் அது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்ததே. பெந்தெகொஸ்தே நாட்களுக்குப் பின் இது இரட்சிப்பில் ஒரு முக்கியமான அங்கமாக இருப்பதினால் இந்த சத்தியத்தின் பின்னணியில் பலரை தவறான பாதையில் பிசாசு வழிநடத்திக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

மேலும் மறுஜென்மம், வாசம் செய்தல் ஆகிய கிரியைகள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்துடன் இணைந்து பொதுவாக ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் நடைபெறுவதினால் ஒன்றை ஒன்று வேறுபடுத்திக் காட்டுவது எளிதல்ல.

ஞானஸ்நானத்தோடு பரிசுத்த ஆவியானவரை சம்பந்தப்படுத்தி சொல்லப்படும் வேதவசனங்களை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது பகுதியில் கிறிஸ்து ஞானஸ்நானம் கொடுப்பவராகவும், இரண்டாவது பகுதியில் ஆவியானவர் ஞானஸ்நானம் கொடுப்பவராகவும் சொல்லப்படுகிறது.

இவைகளில் முதல் பிரிவே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம். இதைக் குறித்த மொத்தம் ஆறு வசனங்களில் நான்கு யோவான் ஸ்நானனினுடைய இயேசுவைக் குறித்த அறிக்கையாக இந்த நடையில் வெளிப்படுகிறது. "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன். எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்." (மத் 3:11, மாற்கு 1:8, லூக்கா 3:16, யோவான் 1:33). ஐந்தாவது வசனம் இயேசுவின் அறிக்கை. "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (அப் 1:4). எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சியாக இந்த ஐந்து வசனங்கள் குறிப்பிடுகின்றன. ஆறாவது வசனமான

அப்போஸ்தலர் 11:16ல் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நடந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சியாக பேதுருவின் அறிக்கையில் அமைகிறது. "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன்."

ஞானஸ்நானத்தைக் குறித்த இரண்டாவது பிரிவு வசனங்கள்:- "எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்." (1 கொரி 12:13). "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலா 3:27). "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாதிருக்கிறீர்களா?" (ரோமர் 6:3). "ஞான்ஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் ..." (கொலோ 2:12). "ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே தேவனும் பிதாவும் உண்டு" (எபே 4:5). "ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குவதாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை" (1 பேதுரு 3:21) "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் ரட்சிக்கப்படுவான்" (மாற்கு 16:16).

முதல் பிரிவைச் சேர்ந்த ஆறு வசனங்களே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறிக்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. அவைகளிலிருந்து நாம் புரிந்துகொள்ளும் முதல் குறிப்பு இந்த அனுபவம் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு மட்டுமே சொந்தமானது என்பதுதான். முதல் முறையாக பெந்தெகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அந்த நாளோடு நின்றுவிடவில்லை. யோவான் 1:33ல் யோவான் ஸ்நானகன் இவ்விதமாகச் சொல்லுகிறார், "நானும் இவரை அறியாதிருந்தேன், ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்." இதில் 'ஞானஸ்நானங் கொடுக்கிறவர்,' என்ற வார்த்தை தொடர்ந்து இயேசு அதைக் கொடுத்துக் கொண்டிருக்கப் போகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்த எல்லா வேதவசனங்களுமே திட்டவட்டமாக அறிவிக்கும் ஒரு சத்தியம் இதுதான். இந்த அனுபவம் கொடுக்கப்படும் பிரதானமான நோக்கம் விசுவாசிகள் சாட்சியாக ஜீவிக்கவும், ஊழியங்களைச் செய்யும் பெலனை பெறுவதே ஆகும். இந்த அனுபவத்தைப் பெற்றவர்களே தேவனுடைய சாட்சியாக ஜீவிக்க தகுதியடைகிறார்கள். ஊழியங்களைச் செய்ய வல்லமையையும் பெறுகிறார்கள்.

மூலபாஷையில் ஞானஸ்நானம் என்ற வார்த்தைக்கு தண்ணீருக்குள் அமிழ்த்தி வைக்கப்படுதல், தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் என்று அர்த்தம். அந்த நாட்களில் துணிகளுக்கு சாயம்போடும் தொழிலில் இந்த பதம் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. துணியை அல்லது நூலை சாயம் நிறைந்த தண்ணீருக்குள் முக்கி வெளியே எடுக்கும் போது அது புதிய நிறத்தைப் பெற்றுவிடுகிறது. துணி புதியதொரு மாற்றத்தைப் பெறுகிறது. இயேசு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கும்போது நம்மை எல்லா பக்கங்களிலும் ஆவியானவர் சூழ்ந்து கொள்ளுகிறார். ஆவியின் முழு நிறைவைப் பெறுகிறோம். "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகி" (2 பேதுரு 1:4) விடுகிறோம்.

ஆவியானவர் எப்போதுமே இயேசுவை மகிமைப்படுத்துகிறார் என்பதினால் இந்த ஞானஸ்நானத்தைப் பெறும்போது கிறிஸ்துவோடு மிகவும் நெருக்கமான முறையில் இணைக்கப்படும் ஆவிக்குரிய மேலான அனுபவத்தைப் பெறுகிறோம். "இந்த ஒரே ஆவியினாலே," ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படும்" (1 கொரி 12:13) அனுபவத்தினால் "இனி நானல்ல கிறிஸ்து" (கலா 2:20) என்ற நிச்சயம் நமக்குள் உண்டாகிறது. நாம் கிறிஸ்துவின் கிரியைகளைப் பூமியில் நடப்பிக்கிறவர்களாகிறோம்.

யோவான் 14:20ல் "நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" என்று இயேசு சொல்லுகிறார் அல்லவா? மறுஜென்ம முழுக்கின் விளைவாக '**நான் உங்களில்**' என்ற அனுபவம் பூர்த்தியாகிறது. '**நீங்கள் என்னில்**' என்ற அனுபவமோ பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் மட்டுமே பூரணமாகிறது. காட்டொலிவ மரத்தின் கிளைகள் நல்ல ஒலிவமரத்தோடு இணைக்கப்பட்டு, அதன் வேருக்கும், சாரத்துக்கும் உடன் பங்காளியாவதுபோல் (ரோமர் 11:17). கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் அங்கமாகிவிடுகிறோம். கிறிஸ்துவில் ஒன்றித்து விடுகிறோம்.

இதன் விளைவு என்ன? சரீரமாகிய சபைக்கு கிறிஸ்து தலையாகிவிடுகிறார் (1 கொரி 11:3), எபே 1:23. தலையாகிய கிறிஸ்து சரீரத்தின் எல்லா அவயவங்களையும் ஆளுகை செய்கிறார். போஷிக்கிறார் (எபே 5:29). பெலப்படுத்துகிறார் (பிலி 4:13). பரிசுத்தப்படுத்துகிறார் (எபே 5:25-27). வரங்களையும் ஊழியங்களையும் கொடுக்கிறார் (1 கொரி 12:27-28). எபேசியர் 4:16 கூறுவது போல் ''அவராலே சரீரம் முழுவதும் அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.''

ஒரு சுவர் கட்டப்படும்போது பல தனி கற்கள் ஒன்றோடு ஒன்று இணைத்து வைக்கப்படுகின்றன. அதன்மேல் சாந்து பூசப்பட்டப்பின் நாம் கற்களைப் பார்ப்பதில்லை, சுவரைத்தான் பார்க்கிறோம். கல்லின் தனித்தன்மை மறைந்துவிடுகிறது. இவ்வாறு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் நம்முடைய தனித்தன்மைகள் மறைந்து கிறிஸ்துவுக்குள்ளாக இணைக்கப்படுகிறோம். கிறிஸ்துவுக்குள்ளாக நம்மை மறைத்துக்கொள்ளும் உன்னதமான அனுபவத்தை நாம் பெறுகிறோம். கிறிஸ்துவுக்குள் என்ற பதம் புதிய ஏற்பாட்டில் பல தடவை வருகிறது.

கிறிஸ்துவுக்குள் அவருடைய மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் பங்காளியாகிவிடுகிறோம். (கொலோ 2:12) ''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.'' (ரோமர் 6:3-5). இந்த வசனத்தை மீண்டும் ஒரு தடவை வாசித்து கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்தெழுதலில் நாம் இணைக்கப்பட்டிருப்பதின் இரகசியத்தை அறிந்துகொள்ளுவோம்.

நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதினால்தான் கிறிஸ்துவின் மரணத்தினால் நம்முடைய பாவங்களை தேவன் மன்னிக்க முடிகிறது. மன்னித்த அவர் "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோட கூட உட்காரவும் செய்தார் (எபே 2:7). அப்படியானால் நாம் ஏதோ ஒரு பரிமாணத்தில் இப்போதே பரலோகத்தில் இருக்கிறோம்.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே பெற்றுக்கொள்ளும் அனுபவம். (மறுபடியும் பிறத்தலைப்போல) வேதத்தில் எந்த இடத்திலும் 'பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறுங்கள்' என்ற ஆலோசனை கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் இது ஒவ்வொரு கிறிஸ்தவனின் பிறப்புரிமை. இதை ஒருவன் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை,

இந்த ஞானஸ்நானம் எப்போது இயேசுவால் கொடுக்கப்படுகிறது என்பதில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. முதல்முறையாக இந்த ஞானஸ்நான அனுபவத்தைப் பெற்றவர்கள் பெந்தெகொஸ்தெ நாளில் மேல்வீட்டறையில் இருந்த 120 சீஷர்களும், அந்த நாளிலே இரட்சிக்கப்பட்ட 3000 யூதர்களும் என்பதை எல்லாரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனல் 120 சீஷர்களும் ஏற்கனவே ஆவியானவரை அறிந்து, ஏற்றுக்கொண்டவர்கள்தானே. உயிர்த்தெழுந்த இயேசு "அவர்கள்மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" (யோவான் 20:20) என்ற போது மறுஜென்ம அனுபவத்தைப் பெற்றுக்கொண்டவர்கள்தானே.

இதன் அடிப்படையில் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் எல்லாரும் உடனடியாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்று சொல்ல முடியாது என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். மறுபடியும் பிறந்த இவர்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டார்கள்தான். ஆனால் 120 சீஷர்களைப் போல் ஊழியம் செய்வதற்கான வல்லமை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். சுவிசேஷத்தை சொல்ல துணிவில்லாதவர்களாய் யூதர்களுக்குப் பயந்து கதவுகளை அடைத்து ஒளிந்துக்கொண்டிருந்தார்கள். (யோவான் 20:19).

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றபிறகுதான் அவர்கள் தங்கள் ஊழியங்களைச் செய்து வெற்றிகண்டார்கள். எனவே இரட்சிக்கப்பட்ட மனிதனை ஊழியத்துக்கு தகுதிப்படுத்தும் இந்த

அனுபவம் பரிசுத்த ஆவியினால் மறுஜென்மத்துக்கு பிறகு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் மூலமாய் வழங்கப்படுகிறது என்பது இவர்களுடைய வாதம். பெந்தெகொஸ்தே சபையார் பொதுவாக மறுஜென்ம முழுக்குக்கு பிறகே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் வழங்கப்படுகிறது என்று கருதுகிறார்கள். இதன் வெளிப்படையான அடையாளம் அந்நிய பாஷை என்கிறார்கள்.

ஆனால் பெரும்பான்மையான வேத ஆராய்ச்சியாளர்களின் கருத்து என்னவென்றால் ஒரு கிறிஸ்தவன் மறுபடியும் பிறக்கும் அந்த நாளிலேயே பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வாசம்பண்ண ஆரம்பிக்கிறார். எனவே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். மறுஜென்மத்தில் மூலமாக "மகிமையின் நம்பிக்கையாக" (கொலோ 1:27) கிறிஸ்துவின் சுபாவம் மனிதனில் வைக்கப்படுகிறது என்றால், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தில் அந்த விசுவாசி கிறிஸ்துக்குள் வைக்கப்படுகிறான். பெந்தெகொஸ்தெ நாளில் பேதுருவின் பிரசங்கத்தினால் மூவாயிரம் யூதர்கள் மறுபடியும் பிறந்தவர்களாகிறார்கள், இரட்சிக்கப்பட்ட அந்த நாளிலேயே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டவர்களும் ஆகிறார்கள்.

120 சீஷர்களைப் போல் இந்த மூவாயிரம் பேரும் 'காத்திருக்கவில்லை' என்பது உண்மைதான். பலத்த காற்று அடிக்கிற முழக்கத்தை அவர்கள் கேட்கவில்லை என்பது உண்மைதான். அக்கினி நாவுகள் அவர்கள்மேல் அமரவில்லை என்பது உண்மைதான். வெவ்வேறு பாஷைகளிலே பேசவில்லை என்பதும் உண்மைதான். ஆனாலும் பெந்தெகொஸ்தே நாளுக்கென்று வாக்களிக்கப்பட்ட 'உன்னதத்திலிருந்து வரும் பெலன்', 'பிதாவின் வாக்குத்தத்தம்' ஆகிய பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அந்த நாளிலேயே அவர்களுடையதாகிறது.

ஏன் சீஷர்கள் இயேசு பரமேறிய பின் பத்து நாட்கள் காத்திருந்தார்கள் என்றால் அதற்கு முந்தின நாள் வரை பரிசுத்த ஆவியானவர் இந்த புதிய முறையில் அருளப்படவில்லை. "அதனால்தான் என் பிதா வாக்குத்தத்தம் பண்ணியதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால்தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரில் இருங்கள்" (லூக்கா 24:49). யோவேல் தீர்க்கதரிசி மூலமாக வழங்கப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் இந்தநாளில் நிறைவேறிற்று. (யோவேல் 2:28, 29, அப் 2:16).

ஒரு பாவி மனந்திரும்பி இயேசுவிடம் வரும்போது அவர் அவனுடைய பாவங்களை மன்னிப்பதோடு நிறுத்திவிடுவதில்லை. தனக்குள்ளாக அவனுக்கு ஒரு நிரந்தரமான இணைப்பை, ஐக்கியத்தை, அந்தஸ்தை அருளும்படியாக பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானமும் கொடுத்துவிடுகிறார். எனவே அதைப் பெறும்படியாக பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் நாம் காத்திருப்புக் கூட்டங்களில் போய் காத்திருக்க வேண்டியதில்லை. மனிதர்கள் நமக்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கொடுக்கமுடியாது. இயேசு கிறிஸ்து ஒருவரே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கொடுப்பவர் (மத் 3:11, மாற்கு 1:8, லூக்கா 3:16, யோவான் 1:33). பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கிய இந்த கிரியையை இன்றும் அவர் ஒவ்வொரு மனிதன் இரட்சிக்கப்படும் போதும் செய்து கொண்டே இருக்கிறார்.

இதை பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கத்தில் இவ்விதமாகக் குறிப்பிடுகிறார். ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது." (அப் 2:38, 39) யோவேலினால் வழங்கப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் ஆதி சபை நாட்களில் வசித்த யூதர்களுக்கும், அவர்களுடைய சந்ததியாருக்கும் மட்டுமல்ல, தூரதேசத்தாரான இந்தியர்களுக்கும் உண்டு. 'பரிசுத்த ஆவியின் வரம்' என்று ஒருமையில் குறிப்பிடுவதினால் இது ஆவிக்குரிய வரங்களைக் குறிப்பிடாமல் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமாகிய வாக்குத்தத்தத்தைக் குறிப்பிடுகிறது என்பது சில வேத ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாய் கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவோடு இணைக்கப்படுகிறோம் என்பதைப் பார்த்தோம். இறுதியாக இவ்வாறு இணைக்கப்படுவதின் மூலமாக கிறிஸ்துவுக்குள் நமக்கு வழங்கப்படும் மேலான ஆசீர்வாதங்களைக் குறித்த சில வேதவசனங்களை தெரிந்துகொள்ளுவது நல்லது.

''கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை "(ரோமர் 8:1). ஆவியின்படி நடப்பவர்கள் என்றால் யார்? ஆவிக்குரியவர்கள், பெந்தெகொஸ்தே சபையார்தான்

ஆவிக்குரியவர்கள் என்பதல்ல. பரிசுத்த ஆவியானவரோடு சீரான தனிப்பட்ட உறவு கொண்டிருப்பவர்களே ஆவிக்குரியவர்கள்.

"நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், நீதியுமானார்" (1 கொரி 1:30,31)

"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின ...." "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்" (2 கொரி 5:17,21). தேவ சமூகத்தில் கிறிஸ்துவுக்குள்ளாக நாம் நீதிமான்களாகும் இரகசியம் இதுதான்.

"அவர் (தேவன்), கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் .... தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்," (எபே 1:3,6). உலகத்தோற்றத்திற்கு முன்பே நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பிள்ளைகள் என்ற சிலாக்கியத்தை உடையவர்கள்.

"முன்னே தூரமாயிருந்த நீங்கள், இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள், கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபே 2:13).

"தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் (கிறிஸ்து) வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும், தலைவராயிருக்கிற அவருக்குள், நீங்கள் பரிபூரணமுள்ளவர்ளாயிருக்கிறீர்கள்" (கொலோ 2:9,10).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரால் நமக்கு ஞானஸ்நானம் கொடுப்பதின் மூலமாக நாம் இந்த மேலான ஆசீர்வாதங்களையெல்லாம் பெற்றுக்கொள்ளுகிறோம்.

# 8

## பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல்

துவக்கத்திலேயே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்துக்கும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதலுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் நன்றாக விளங்கிக்கொள்ளவேண்டும். இரண்டும் வித்தியாசமான ஆவிக்குரிய அனுபவங்கள்.

பெந்தெகொஸ்தெ நாளில் இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து தம்முடைய ஆவியை ஊற்றியதின் விளைவாக மேல் வீட்டறையில் இருந்த 120 பேர் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை முதன் முறையாகப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்களெல்லாரும் "பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு" (அப் 2:4) பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் வந்த முதல் விளைவு, நிரப்பப்படுதல். இயேசு ஞானஸ்நானம் கொடுக்கிறார். அதன் விளைவாக சீஷர்கள் ஆவியானவரின் நிரப்புதலைப் பெறுகிறார்கள்

முதல் கிரியையான பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஒருவனுக்கு ஒருதடவை மட்டுமே கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் தான் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை ஒருவன் எந்த சூழ்நிலையிலும், எந்த காரணத்தைக் கொண்டும் இழந்துபோவதில்லை.

ஆனால் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவன் நிரப்புதலை இழந்துபோகலாம். பெற்றுக் கொண்ட நிரப்புதலில் குறைவுபடலாம் ஆனால் தேவ வசனங்களின் அடிப்படையில் ஒருவன் தன்னுடைய நிரப்புதலை இழந்துபோனால் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். குறைவு பட்டால் திரும்ப நிரப்பிக்கொள்ளலாம். எனவே நிரப்பப்படுதல் என்பது ஒரு தொடர் கிரியை. ஒரு கிறிஸ்தவன் தொடர்ச்சியாக நிரப்பப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அபிஷேகத்தைப்போல் இது ஒரு மனிதனில் நிலைத்திருப்பதில்லை. (1 யோவான் 2:27)

ஆதி அப்போஸ்தலர்களை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற அவர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் (அப் 2:4) என்பதைப் பார்த்தோம். அடுத்ததாக நியாயசபையிலே விசாரிக்கப்படும் போது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து (4:8) பேசினார் என்று பார்க்கிறோம். விடுதலையாக்கப்பட்டு சபைக்குத் திரும்பியதும் சபையாக ஜெபித்தபோது எல்லாரும் மீண்டும் நிரப்பப்பட்டார்கள் (4:31) என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே நிரப்பப்படுதல் என்ற ஆவிக்குரிய அனுபவம் அனுதினமும் புதிப்பிக்கப்படவேண்டிய, மீண்டும் மீண்டும் செயல்படுத்தப்பட வேண்டிய அனுபவமாகும்.

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களிலும் பலர் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருந்தார்கள். உதாரணம்: மோசே, சிம்சோன், தாவீது, தானியேல். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமோ முற்றிலுமாக புதிய ஏற்பாட்டு அனுபவம். ''தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்" (லூக்கா 1:15) என்று யோவான் ஸ்நானகனைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் எலிசபெத்து (1:41) சகரியா (1:67), பேதுரு (அப் 4:8), சீஷர்கள் (4:31), ஸ்தேவான் (7:55), பர்னபா (11:24), பவுல் (13:52) ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்கள்.

வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியத்துக்கு ஆவியினால் நிரப்பப்படுவது அவசியமாகும். இயேசு கிறிஸ்துவுக்கே ஆவியின் நிறைவு தேவைப்பட்டது என்று பார்த்தோம். தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்ததை யோவான் 3:34 உறுதிப்படுத்துகிறது. மோசே என்ன வாஞ்சிக்கிறான் என்பதைக் கவனியுங்கள். "கர்த்தருடைய ஜனங்கள் எல்லோரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே'' (எண் 11:29).

நிரப்பப்படுதல் என்ற அனுபவம் மறுஜென்மம், அல்லது பரிசுத்த ஆவி நமக்குள் வாசமாயிருந்தலைப் போல் இரட்சிப்பில் ஒரு அங்கம் அல்ல. இரட்சிக்கப்பட்டவர்கள் சிலர் பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதலைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கலாம், அல்லது ஒரு முறைப் பெற்றுக்கொண்டு அதன் பின் இழந்தும் காணப்படலாம். நிரப்பப்படுதலை ஒருவன் காலதாமதமாகவும் பெற்றுக்கொள்ளலாம். இந்த அனுபவத்தை ஒருவன் பெற்றுக்கொள்ளாதபோது அவனுடைய இரட்சிப்பு எந்த விதத்திலும் பாதிக்கப்படுதில்லை என்றாலும்

அவனுடைய வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தில் பாதிப்பு ஏற்படக்கூடும்.

பவுலை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அவர் முதலாவதாக சுவிசேஷத்தைக் கேட்டது ஸ்தேவானுடைய நீளமான பிரசங்கத்தின் மூலம், ''பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய்(அப் 7:55), தேவ தூதனுடைய முகத்தைப்போல்' (அப் 6:15) பிரகாசிக்கும் முகத்தைக்கொண்ட ஸ்தேவானின் பேச்சு அவரை கண்டித்து உணர்த்தியிருக்கவேண்டும். தமஸ்குவுக்குப் போகும் வழியில் இயேசு பவுலை சந்திக்கிறார். ''ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்'' (9:6) என்று தன்னை முழுவதுமாக தேவனிடம் ஒப்புக்கொடுத்த வேளையிலேயே பவுல் இரட்சிக்கப்பட்டாயிற்று. அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று. இருந்தாலும் பவுல் மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபித்தார் என்றால் (9:9,11) அது அவருடைய இரட்சிப்புக்காக இருந்திருக்கமுடியாது. ஏனென்றால் தேவனுடைய அழைப்பை அவர் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டாயிற்று. ஸ்தேவானிடம் தான் கண்ட ஆவியின் நிறைவையே பவுல் ஜெபித்துக் கேட்டிருக்கவேண்டும். அதனால்தான் இயேசுவால் அனுப்பிவைக்கப்பட்ட அனனியா அவரிடம் சொல்லுகிறார். “சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர் நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார்'' (9:17).

அந்நிய பாஷையில் பேசுதல், கைகளைத் தட்டுதல், பரவசப்படுதல், துள்ளிக் குதித்தல், நடனமாடுதல், தரையில் விழுதல் போன்ற வெளி அடையாளங்கள்தான் பரிசுத்த ஆவியின் நிறைவை வெளிப்படுத்துவதாக நாம் நினைத்துக்கொள்ளக்கூடாது. இப்படியான தவறான கருத்துக்கள் இருப்பதினால் பல கிறிஸ்தவர்கள் நிரப்பப்படுதல் அனுபவம் தங்களுக்கு அவசியமில்லை என்று நினைக்க ஆரம்பிக்கிறார்கள். அளவில்லாமல் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்த இயேசு கிறிஸ்து இந்த மாதிரியான எந்த செயலையும் செய்யவில்லை. யோவான் ஸ்நானகன், எலிசபெத்து, சகரியா, ஸ்தேவான், பர்னபா முதலியோரும் இவைகளை நடப்பிக்கவில்லை.

அப்போஸ்தலருடைய நடபடிகளில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களில் மூன்று குழுவினர் மட்டுமே (அப் 2:1-4 மேல் வீட்டறை சீஷர்கள், 10:44,46 கொர்நேலியு வீட்டார், 19:1-6 எபேசு சபையார் நிரப்பப்பட்டதும் அந்நிய பாஷை பேசினதாகப் பார்க்கிறோம். லூக்கா 4:1ல் இயேசு நிரப்பப்பட்டபோது பிசாசின்

சோதனையில் வெற்றி பெற பெலனைப் பெறுகிறார். எலிசபெத்து நிரப்பப்பட்டவளாய் மரியாளை ஆசீர்வதிக்கிறார் (1:41-45). சகரியா நிரப்பப்பட்டபோது தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். (1:67,79). ஸ்தேவான் நிரப்பப்பட்டபோது பரலோக தரிசனங்களைப் பார்க்கிறார் (அப் 7:55). இவ்விதமாக நிரப்பப்பட்டவர்கள் தேவனால் உபயோகப்படுத்தப்படுகிறார்கள். இதுவே நிரப்புதலின் உண்மையான அடையாளம்,

சீஷர்களைக் குறித்து "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தேவ வசனத்தைத் தைரியமாகச் சொன்னார்கள்" (அப் 4:31) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நபர் நிரப்பப்பட்டிருக்கிறார் என்பதினால் அவர்கள் பாஷை பேசுகிறார்களோ இல்லையோ, வசனத்தைத் தைரியமாக அறிவிப்பார்கள். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் 1:8). தாங்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு ஊழிய வாஞ்சை இல்லாதவர்களாக யாரும் இருந்தால் அவர்களுடைய ஆவிக்குரிய அனுபவத்தில் குறை இருக்கிறது என்று அர்த்தம்,

பரிசுத்த ஆவியானவரின் நிறைவை நாம் பெற்றுக்கொள்ளும் போது நம்முடைய வாழ்க்கையில் நடப்பதென்ன? ஆவியானவர் நம்மை ஆளுகை செய்ய ஆரம்பிக்கிறார். "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல் ஆவியினால் நிறைந்து"... (எபே 5:18) பாட்டுப்பாடி, ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி, ஸ்தோத்தரித்து ஒருவருக்கொருவர் கீழ்ப்படியும்படியாக ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. மதுபானத்தினால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு மனிதனை ஆளுகை செய்வது அவன் குடித்த மது ன்பதை நாம் அறிவோம். மது அவர்களை வித்தியாசமான மனிதர்களைப்போல் செயல்பட வைக்கிறதல்லவா? ஆனால் ஆவியினால் நிரப்பப்பட்டவர்களோ ஒருவரோடு ஒருவர் பேசி, பாடி, ஐக்கியம் கொண்டு, ஸ்தோத்திரம் சொல்பவர்களாகவும், ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து வாழ்பவர்களாகவும் மாறுவார்கள்.

அடுத்ததாக ஒரு முக்கியமான காரியத்தை நாம் கவனிக்கவேண்டும். 'நிரப்பப்படுங்கள்' என்று வேதத்தில் ஒரு ஆலோசனையாகச் சொல்லப்படாமல் கற்பனையாக - ஒரு திட்டவட்டமான கட்டளையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நிரப்பப்பட்ட மனிதர்கள் பலரில் குற்றங்கள் குறைகள் இருக்கிறது என்பதினால் நிரப்பப்படுதல் என்ற அனுபவம் எனக்கு வேண்டாம் என்று ஒதுங்கி

இருப்பது பாவமாகிறது. நிரப்பப்படுவதினால் ஒருவனுடைய பாவத்தன்மை நீக்கப்படுவதாக வேதத்தில் சொல்லப்படவில்லை. இயேசுவிடம் பாவமே இல்லை. இருந்தாலும் அவரும் நிரப்பப்படவேண்டியிருந்தது. ஆவியின் நிறைவை ஒரு கிறிஸ்தவன் வேண்டுமென்றால் பெற்றுக்கொள்ளலாம்; வேண்டாமென்றால் ஒதுக்கிவிடலாம் என்பதல்ல.

'நிரப்பப்படுங்கள்' என்று பன்மையில் - சபையார் அத்தனை பேரும் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான கடமையாக பவுல் குறிப்பிடுவதையும் கவனிக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரால் உற்பத்தியானவரும் தேவ குமாரனுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே நிரப்பப்படவேண்டியதிருந்தால் அந்த அனுபவம் நமக்கு எவ்வளவு முக்கியமானது.

'பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுங்கள்' என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர 'பரிசுத்த ஆவியினால் நிரப்புங்கள்' என்று அல்ல. N.I.V. ஆங்கில மொழி பெயர்ப்பில் 'பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட விட்டுக்கொடுங்கள்' என்று சரியானபடி சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பாத்திரம் நிரப்பப்படவேண்டுமானால் முதலாவது அது வெறுமையாக்கப்பட வேண்டும். நம்முடைய சுயம், பாரம்பரியங்கள், சபை வைராக்கியங்கள், சுய மேன்மைகள் எல்லாவற்றையும் நீக்கி நம்மை வெறுமையாக வைத்துக்கொள்ளும்போது நிச்சயமாகவே ஆவியானவர் நம்மை நிரப்புவார் என்பதில் சந்தேகமில்லை.

கிரேக்க மொழியிலிருந்து 'நிரப்பப்படுங்கள்' என்ற வார்த்தையை சரியாக மொழிபெயர்க்க வேண்டுமானால் 'நிரப்பப்பட்டுக்கொண்டே இருங்கள்' என்று எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று வேத பண்டிதர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். நிரப்பப்படுதல் ஒரு தொடர் கிரியையாக செயல்படவேண்டும். மதுபானத்தின் ஆளுகையில் இருப்பவன் அதில் நிலைத்திருக்க குடித்துக்கொண்டே இருப்பதைப் பார்க்கிறோமே.

"தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவி" என்ற வசனத்தை அப்போஸ்தலர் 5:3 ல் வாசிக்கிறோம். இதிலிருந்து நாம் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது நிரப்பப்படுவோம் என்பது தெளிவாகிறது. வேத வசனத்துக்குக் கீழ்ப்படியும்போது அதின் ஆசிரியரான ஆவியானவரைக் கனம் பண்ணுகிறோம். எனவே அவர் நம்மேல் பிரியமாகி நம்மை நிரப்புவது நிச்சயமல்லவா?

பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கு நாம் பிதாவிடம் ஜெபிக்கவேண்டும் என்ற ஆலோசனையை இயேசு தருகிறார். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" (லூக்கா 11:13).

பரிசுத்த ஆவியின் 'நிரப்பப்படுதல்' என்ற அனுபவத்தை நாம் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதற்கு மூன்று ஆலோசனைகளை பவுல் அப்போஸ்தலன் கொடுக்கிறார்.

(1) "நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் **துக்கப்படுத்தாதிருங்கள்.** சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத்துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது" (எபே 4:30,31).

(2) "ஆவியை **அவித்துப் போடாதிருங்கள்**" (1தெச 5:19). ஆவியானவரின் நிறைவைத் தடை செய்யும் இரண்டு காரியங்கள், அவரைத் துக்கப்படுத்துவதும், அவரை அவித்துப் போடுவதுமாகும். இவை இரண்டும் எதிர்மறையான கிரியைகள்.

(3) "ஆவிக்கேற்றபடி **நடந்து கொள்ளுங்கள்**" (கலா 5:16). ரோமர் 8:14 சொல்லுகிறது "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்."

## 'துக்கப்படுத்தாதிருங்கள்'

பரிசுத்த ஆவியானவர் ஒரு கிறிஸ்தவனுக்குள் வாசமாயிருப்பதின் நோக்கம் அவனுடைய சிந்தை, சொல் செயல்பாடுகள் எல்லாம் தேவனைப் பிரியப்படுத்துவதாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் அவர் செய்யாதே என்று சொல்லும் காரியங்களை நாம் செய்யும்போது, அவர் விரும்பாத செயல்களை செய்யும்போதும் அவர் துக்கப்படுகிறார்.

கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம், பெருமை, மன்னிக்காத தன்மை, பொறுமையின்மை, குற்றஞ்சாட்டும் தன்மை போன்ற குணாதிசயங்கள் உள்ளவர்களிடம் பரிசுத்த ஆவியானவர் ஜீவிக்கவேண்டுமென்றால் அது எவ்வளவு கடினமானது, பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் மென்மையானவர். பரிசுத்தமானவர். ஒரு கிறிஸ்தவன் மூலமாக ஆவியானவர் மற்றவர்களுக்கு ஊழியங்களைச் செய்ய வேண்டியதிருக்க இப்போது அவனுக்கே அவர் ஊழியம் செய்யவேண்டியதாகிறது. அவனுக்குள் என்றென்றைக்கும் வாசம் செய்யும்படியாக ஆவியானவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் (யோவான் 14:16,17, 1 யோவான் 2:27). எனவே அவனைவிட்டு விலகவும் முடியாது. வைராக்கியம், கோபம், மனக்கசப்பு ஆகிய உலக மனிதர்களின் சுபாவங்கள் கிறிஸ்தவர்களிடம் இருப்பது ஆவியானவரைத் துக்கப்படுத்தும்.

பரிசுத்த ஆவியானவர் எந்த மனிதனையும் வற்புறுத்தி அல்லது பலாத்காரம் செய்து அவனை பரிசுத்தத்துக்குள் வழிநடத்துவதில்லை. எனவே அவர் துக்கப்பட ஆரம்பிக்கும்போது அவர் ஏதோ பிடிவாதம் பண்ணி அவனுடன் ஒத்துழைக்க மறுக்கிறார் என்பதல்ல. மனிதன் தன் சுயசித்தத்தின்படி நடக்க அவர் ஒருபோதும் தடை பண்ணுவதில்லை. நமக்கு நலமான காரியங்கள் எது என்பதை அவர் அறிவார். ஆவிக்குரிய கனிகளான அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம் போன்றவைகளால் நம்மை அலங்கரிக்க அவர் விரும்புகிறார். அதற்கேற்ற கிரியைகளை அவர் நம்மில் நடத்த நாம் அனுமதிக்காதபோது அதைக்குறித்து விசனமடைகிறார்.

இம்மாதிரி சூழ்நிலைகளில் பரிசுத்த ஆவியானவரை நாம் இழந்ததுபோல் உணரத்துவங்கலாம். ஏனென்றால் நம்முடைய பாவத்தினால் வேத வசனங்கள் மூலமாக ஆவியானவர் நம்மிடம் பேசுவதை நாம் கேட்க முடியாமல் போகிறது. இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நாம் இருந்த ஆவிக்குரிய இருளுக்குள் தள்ளப்பட்டதுபோல் நாம் உணர்வடையலாம். விபச்சார பாவத்தில் விழுந்த தாவீதின் அனுபவ விளைவை நாமும் பெறலாம். அவர் சொல்லுகிறார், "நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று. இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டு போயிற்று" (சங் 32:3,4)

ஆனால் இதை முன்னிட்டு நாம் மனம் தளரவேண்டியதில்லை. "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9). "அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (வ.7). அறிக்கையிடுவதின் மூலம் பாவமன்னிப்பைப் பெறும் சிலாக்கியம் தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது.

"நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1 கொரி 11:31). நாம் பாவிகள் என்று நம்மை நாமே நியாயந்தீர்க்கும் அதிகாரமும் நமக்கு கொடுக்கபட்டிருக்கிறது. அதை நாம் செய்யும் போது பிதா நம்மைத் தண்டிக்கப் புறப்படுவதில்லை. நம்முடைய பாவங்களை பாவங்களாக அறிக்கையிடாமல் நம்மையே நீதிமான்களாக்க முயற்சி செய்யும்போதுதான் தேவன் அவருடைய பிள்ளைகளைச் சிட்சிக்கத் துவங்குகிறார். (எபி 12:5, 8) "தேவரீர் ஒருவருக்கே விரோதமாக" (சங் 51:4) பாவம் செய்தேன் என்று அவரிடம் வரும்போது நம்முடைய மூர்க்ககுணம் நீக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவருடன் சீரான உறவைப் பெறுவோம்.

## 'அவித்துப் போடாதிருங்கள்'

இந்த வசனத்தின் சரியான மொழிபெயர்ப்பு 'ஆவியை அவித்துப்போடுவதை நிறுத்திவிடுங்கள்' என்று இருக்கவேண்டும். 'செய்யாதே' என்று ஆவியானவர் சொல்லும் காரியங்களை நாம் செய்யும்போது அவரைத் துக்கப்படுத்துகிறோம் என்று பார்த்தோம். 'செய்' என்று சொல்லும் காரியங்களை நாம் செய்யாதிருக்கும்போது அவரை அவித்துப்போடுகிறோம்.

உதாரணமாக ரயிலிலோ பஸ்ஸிலோ பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கும் போது அருகில் இருப்பவரிடம் சுவிசேஷத்தைச் சொல்லும்படியாக ஆவியானவர் ஏவுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். பல காரியங்களை யோசித்து நாம் அவ்வாறு சத்தியத்தைச் சொல்லவில்லையென்றால் ஆவியானவரை அவித்துப் போடுகிறவர்களாகிறோம். ஏனென்றால் அவருடைய செயல்பாட்டை நாம் மட்டுப்படுத்திவிட்டோம். நம் மூலமாக அவர் ஒரு ஆத்துமாவுக்குள் செயல்படாமல் தடை செய்துவிட்டோம்.

அடுத்ததாக, பாவம் ஒரு கிறிஸ்தவனுக்குள் பிரவேசிக்கும்போது துக்கப்படும் பரிசுத்த ஆவியானவரை, அந்த பாவம் அறிக்கையிடப்பட்டு விடப்படாதபோது அவித்துப்போடுகிறவர்கள் ஆகிறோம். ஏனென்றால் இப்படியான வேளைகளில் நாம் தேவனுடைய சித்தத்துக்கு எதிராக செயல்படுகிறோம்.

இதற்கு முந்தின வசனத்தில் ''எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்'' (1 தெச 5:18) என்று சொல்லப்பட்டிருப்பதையும் கவனிக்கவேண்டும். எதிர்காலத்தைக் குறித்த பயம், சந்தேகம், கவலை, தாழ்வு மனப்பான்மை, கோழைத்தனம், மூடநம்பிக்கைகள், தனிமை உணர்வு, குழப்பம் போன்றவைகள் நம்முடைய ஆவியில் சஞ்சரிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்படமுடியாமல் போகிறது. இதை மேற்கொள்ளும்படியாகவே நாம் எல்லாவற்றுக்கும் மனமகிழ்ச்சியோடு தேவனுக்கு நன்றி சொல்லப் பழகவேண்டும்.

ஆவியை அவித்துப்போடாமல் நாம் ஜீவிப்பதற்கு நம்முடைய வாழ்க்கையை முற்றிலுமாக தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுப்பது ஒரு நல்ல வழி ''என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது'' (லூக்கா 22:42) என்ற ஜெபம்

பொதுவாக நம்முடைய வாயிலிருந்து வெளிவருவதில்லை. கர்த்தராகிய இயேசு தன்னுடைய மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தாரல்லவா? (பிலி 2:8). பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டாரல்லவா? (எபி 5:8) பிதாவுக்குப் பிரியமானவைகளையே எப்பொழுதும் செய்தாரல்லவா? (யோவான் 8:29). தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போதுதான் முழுமையான பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதல் நமக்குக் கிடைக்கும். அப்போது நாம் ஆவியை அவித்துப்போடாமல் ஆவியின் கிருபை வரங்களை அனல்மூட்டி எழுப்புகிறவர்களாக இருப்போம். (2 தீமோ 1:6)

## 'ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்'

பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதலை நாம் தொடர்ச்சியாக அனுபவிக்கவேண்டுமானால் நாம் செய்யவேண்டிய மூன்றாவது காரியம், ஆவிக்கேற்றபடி நடப்பதாகும். பரிசுத்த ஆவியானவரை சார்ந்து நாம் ஜீவிக்கும்போது, ஆவியில் நடக்கிறவர்களாகிறோம். வேதம் சொல்லுகிறது "இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ" (ஆமோஸ் 3:3).

"ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் தேவனுடைய புத்திரர்" (ரோமர் 8:14). இதன் சரியான மொழிபெயர்ப்பு 'ஆவியினால் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தேவனுடைய புத்திரர்' என்று இருக்க வேண்டும். ஏனென்றால் நடத்தப்படுதல் என்பது ஒரு நாளில் நடந்து முடியும் அனுபவம் அல்ல. ஒவ்வொரு வினாடியும் ஆவியானவர் நம்மை நடத்தும்போதுதான் மறுஜென்மத்தின் மூலமாக தேவனுடைய பிள்ளைகளான நாம் அவருடைய புத்திரராக வளர்ச்சி அடைகிறோம்.

"மேலும் ஆவிக்கேற்றபடி நடப்பவர்கள்." மாம்ச இச்சையை வெற்றிகொள்வார்கள்." (கலா 5:16). "இவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல என்பதினால் மாம்சத்தின் கிரியைகளான விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் போன்றவை இவர்களை மேற்கொள்ளாது (வ 18-21).

ஒருவன் தன்னுடைய சொந்த பலத்தில் நடந்து மாம்ச இச்சைகளை மேற்கொள்வது என்பது முடியாத காரியம். பரிசுத்த ஆவியானவரை மட்டும் நம்பி செயல்படும் அனுபவமே ஆவியில் நடப்பதாகும். ஆவியானவரைக் குறித்து நன்றாக அறிந்த ஒரு மனிதனே அவரை நம்பி, அவரில் நடக்கமுடியும்.

ஒரு சிறு குழந்தை நடக்கப் படிக்கும்போது முதலில் சிரமப்படுகிறது. பலவேளைகளில் அந்த முயற்சியில் தோல்வி அடைகிறது. விழுந்து விழுந்து எழும்புகிறது. ஆவிக்கேற்றபடி நாம் நடக்கும் அனுபவத்தையும் இவ்விதமாக படிப்படியாகத்தான் கற்றுக்கொள்ளவேண்டியதிருக்கிறது. ஒரே நாளில் நாம் தேர்ச்சியடைவதில்லை.

“வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க-மாட்டீர்கள்'' (மத் 5:20) என்று மலைப்பிரசங்கத்தில் இயேசு திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார். கொலைசெய்யும்போதும், விபசாரம் செய்யும் போதும்தான் நாம் பாவம் செய்கிறோம் என்பதல்ல. ஒரு சகோதரனை நியாயமில்லாமல் கோபிப்பது கொலைசெய்வதற்கு இணையானது (5:22). ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்ப்பவன் விபசாரம் செய்பவனாகிறான் (5:28). ஆகவே மேலான நீதியை பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும் ஒருவனே செய்ய முடியும்.

பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும் அனுபவத்தை புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களாகிய நாம் மட்டுமே பெற்றிருக்கிறோம் என்றாலும் பழைய ஏற்பாட்டு நாட்களிலேயே இதைக்குறித்த வெளிப்பாடு கொடுக்கப்பட்டிருந்ததைப் பார்க்கிறோம். “உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும், என் நியாயங்களைக் கைக்கொள்ளவும், அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்'' (எசே 36:27).

ஆவியானவர் நமக்குள் வைக்கப்படுவதினால், அவர் நமக்குள் வாசம் செய்வதினால்தான் நாம் அவரால் நடத்தப்படுகிறோம். அவ்வாறு நடத்தப்படும்போது நம்முடைய எல்லா கிரியைகளும் அவருடையதாகிவிடுகிறது. அவரே ''தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்'' (பிலி 2:13) என்று இந்த சிலாக்கியத்தைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது.

ஒருவன் ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கிறான் என்பதற்கு உண்மையான அடையாளம் அவனிடமிருந்த வெளிப்படும் கனிகளே தவிர அவன் செயல்படுத்தம் வரங்கள் அல்ல. கொரிந்து சபையார் பல வரங்களைப் பெற்றவர்கள்தான், ஆனால் அவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல, மாம்சத்துக்குரியவர்களே என்று பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறாரல்லவா? (1 கொரி 3:1-4).

பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கும் மனிதனே தன்னுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவைப் பிரதிபலிக்க முடியும். அவனிடமிருந்து மட்டுமே கிறிஸ்துவின் குணாதிசயங்களான அன்பு, சந்தோஷம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய ஆவிக்குரிய கனிகள் வெளிப்பட முடியும். ஆவியின் நிறைவு ஒரு நன்மையான மாற்றத்தை நம்மில் ஏற்படுத்தவேண்டும், இருதயங்களையும் வாழ்க்கையையும் மாற்றுவதே உண்மையான உன்னத அனுபவம்.

# 9

# ஆவிக்குரிய வரங்களின் பொதுவான தன்மைகள்

பெந்தெகொஸ்தே நாளிலே பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு 'நாங்கள் என்ன செய்யவேண்டும்' என்று முன் வந்த யூதர்களைப் பார்த்து பேதுரு சொல்லுகிறார் ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்''. (அப் 2:38) இங்கே பேதுருவினால் 'பரிசுத்த ஆவியின் வரம்' என்று ஒருமையில் குறிப்பிடப்படுவது. ஆவிக்குரிய வரங்கள் அல்ல, பிதா வாக்குத்தத்தம் பண்ணின பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் துவக்கத்தில் இவ்விதமாக பரிசுத்த ஆவியானவரை ஒருவன் பெற்றுக் கொண்டவனாகிறான், தொடர்ந்து அவன் பரிசுத்த ஆவியானவரால் அனுதினமும் நிரப்பப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதும், அவர் நம்மை ஆண்டுகொள்வதும் இரண்டு வேறுபட்ட அனுபவங்கள்.

அவருடைய முழுமையை தன் வாழ்க்கையில் அனுபவிக்க ஆரம்பிக்கும்போது. அவனுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் சபையின் வளர்ச்சியில் அவன் செயல்பட வேண்டுமென்பதற்காக பல வித்தியாசமான ஆவிக்குரிய வரங்களைக் கொடுக்க ஆரம்பிக்கிறார், எனவே வரங்கள் என்பது மனிதனில் காணப்படும் இயற்கையான திறமைகள் அல்ல.

வரங்கள் என்ற வார்த்தையிலிருந்து நாம் உடனடியாகத் தெரிந்துகொள்வது அது இலவசமாக, நன்கொடையாக வெகுமதியாக ஈவாக வழங்கப்படுகிறது என்பதுதான். வரங்களை ஒருவன் ஏதோ ஒரு காரியத்தைச் செய்து சம்பாதித்துக் கொள்ளமுடியாது, கிரையம் கொடுத்து வாங்கிக்கொள்ள முடியாது, யாரிடமும் போய் கற்றுக் கொள்ளவும் முடியாது,

நம்முடைய நல்நடத்தையினிமித்தமும் வரங்களை தேவன் நமக்குத் தருவதில்லை, உங்கள் பிள்ளைகளுக்கு பிறந்தநாள் பரிசு கொடுக்கிறீர்கள் என்றால் அதற்கு காரணம், அவர்கள் உங்கள் பிள்ளைகள் என்பதினால்தான், அவர்கள் நல்ல பிள்ளைகளாக நடந்து கொண்டார்கள் என்பதினால் அல்ல, நல்நடத்தைக்குப் பிரதிபலனாக கொடுக்கப்படுவது வரமல்ல, கூலி அல்லது சம்பளம். எனவே எல்லா தேவபிள்ளைகளும், தேவ கிருபையினால் வரங்களைப் பெற்றுக் கொண்டவர்களாகிறார்கள்.

வரங்களையெல்லாம் "அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்:" (1 கொரி 12:11) எனவே வரங்கள் அவைகளைச் செயல்படுத்துபவர்களுக்கு சொந்தமானதல்ல, குறிப்பிட்ட சபைகளுக்கும் சொந்தமானதல்ல. அவை முற்றிலுமாக பரிசுத்த ஆவியானவரின் தன்னிச்சையான செயல்பாடு, யாருக்கு வரம் கொடுக்கப்படும் என்பதை அவரே தீர்மானிக்கிறார்,

ஒரு குறிப்பிட்ட நன்மையை அல்லது ஊழியத்தை ஒரு மனிதனுக்குச் செய்யவேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் விரும்பும்போது, அவர் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு விசுவாசியை பயன்படுத்துகிறார், எனவே அந்தக் கிரியையை ஒரு விசுவாசி ஆவியானவரின் உதவியுடன் நடப்பிக்கிறார் என்று சொல்வது கூட தவறு, அது முற்றிலுமாக 'ஆவியினுடைய அநுக்கிரகம்' (1 கொரி 12:7).

சொல்லப் போனால் வரத்தைப் பெறுவது அதனால் நன்மையை (சரீர சுகம், விடுதலை ஆகியவை) பெறும் மனிதன் தானே ஒழிய வரத்தைச் செயல்படுத்தும் தேவ ஊழியர் அல்ல. யாருக்கு வரம் கொடுக்கப்படுகிறது என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி தெரிந்து கொள்ளுங்கள். வரம்பெற்றவர்கள் என்று தங்களை அழைத்து கொள்ளும் ஊழியர்கள் தேவன் பயன்படுத்தும் கருவிகள்தான். தேவ ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் வாய்க்கால்கள்தான்.

அதனால்தான் பேதுரு சொல்லுகிறார் "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரன் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன். ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன்

மகிமைப்படும்படியே செய்வீர்களாக." (1 பேதுரு 4:10,11) வரத்தைச் செயல்படுத்துபவர்கள் அதின் சொந்தக்காரர்களல்ல உக்கிராணக்காரர்கள். எனவே வரங்களைக் குறித்து அதை செயல்படுத்துபவர்கள் தங்களை மேன்மை பாராட்ட ஒன்றுமில்லை,

சபை ஊழியத்துக்கென்று, தனிப்பட்ட நபர்களுக்கு பரிசுத்த ஆவியானவரால் வழங்கப்படும் அல்லது உயிர்ப்பிக்கப்படும் திறமையே வரமாகும். ''ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது'' (1 கொரி 12:7) என்ற வசனம் ஆங்கிலத்தில் "Now to each one, the manifestation of the spirit is given for the common good", என்று சொல்லப்பட்டிருக்கிறது, சபையின் பொதுவான நன்மை மற்றும் அதின் வளர்ச்சிக்காகவே வரங்களை ஆவியானவர் வழங்குகிறார்,

இயேசுவின் இரண்டாவது வருகைவரை சபையை கட்டிக் காக்கும்படியாகவும், விசுவாசிகளை பெலப்படுத்தும்படியாகவும் வரங்கள் வழங்கப்படுகிறது. பவுல் சொல்லுகிறார். "நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள் (1 கொரி 1:7). வரங்களை நடப்பிப்பது ஆவியானவர் என்பதினால்தான் "அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்கள்" (எபி 2:4) என்று சொல்லப்பட்டிருக்கிறது,

அற்புதங்களைச் செய்யும், இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையை ஒவ்வொரு விசுவாசியும் பெற்று அனுபவிப்பது அவசியம்தான், எனென்றால் நாம் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக செயல்படவேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பு. தன்னுடைய அப்போஸ்தலர்களை தன்னுடைய சார்பில் ஊழியத்துக்கு அனுப்பும்போது இயேசு சொல்லுகிறார் "வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள்; மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்" (மத் 10:8).

''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' (மாற்கு 16:15) என்ற பிரதான கட்டளையை அடுத்து இயேசு சொல்லுகிறார் "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான

யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்!" (வ. 17 & 18) தேவனுடைய சுவிசேஷத்தை உறுதிப்படுத்துவதே வரங்களின் பிரதான நோக்கமாகும் (எபி 2:3,4).

வேதத்தில் பெரும்பாலான அதிசயங்களும் அற்புதங்களும் தேவ குமாரனாகிய இயேசுவினால் நடப்பிக்கப்பட்டன என்பதை நாம் அறிவோம். பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்தில் பேதுரு இவ்விதமாகக் குறிப்பிடுகிறார், "நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்" (அப் 2:22).

இந்த அற்புதங்களின் பின்னணியை அப்போஸ்தலர் 10:38 அறிவிக்கிறது. "நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்". "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" (மத் 12:28) என்று சொல்லி, இயேசு தான் தன்னுடைய சொந்த பெலத்தினால் எந்த பலத்த கிரியையையும் நடப்பிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறார்.

பழைய ஏற்பாட்டு நாட்களில் மோசே மூலமாக தேவனுடைய நியாயப்பிரமாணம் வெளிப்படுத்தப்பட்டபோது எகிப்தின் வாதை, செங்கடல் திறப்பு, வானத்திலிருந்து மன்னா போன்ற பெரிய அற்புதங்களை தேவன் நடப்பித்தார். அடுத்ததாக எலியா, எலிசா மூலமாக தீர்க்கதரிசன வெளிப்பாடு இஸ்ரவேலருக்கு முதன்முறையாக வழங்கப்பட்டபோது அவர்களும் பலத்த கிரியைகளை நடப்பித்தார்கள்.

மற்றபடி எஸ்றா, நெகேமியா, எரேமியா, எஸ்தர் போன்ற பல ஊழியர்கள் எந்த அற்புதங்களையும் நடப்பிக்கவில்லை என்பது மட்டுமல்ல, அற்புதங்களைக் கண்ணாலும் கண்டதில்லை. அந்நிய பாஷைகளில் பேசுவது, பிசாசுகளைத் துரத்துவது, கரங்களை நோயாளியின் மேல் வைத்து குணமாக்குவது போன்ற ஆவியின் வரங்கள் பழைய ஏற்பாட்டில், எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

''ஸ்திரிகளிடத்தில் பிறந்தவர்களில் அவனைவிட பெரியவன் ஒருவனும் இல்லை'' (மத் 11:10) என்று இயேசுவினால் பாராட்டப்பட்ட யோவான் ஸ்நானன் ஒரு அற்புதத்தையும் செய்ததில்லை (யோவான் 10:41). ஆகவே வரங்களைச் செயல்படுத்துபவர்கள்தான் மேலான ஊழியர்கள் என்பதல்ல,

கிருபையின் சுவிசேஷத்தை முதலாவதாக அறிவித்த இயேசு, தான் பலவிதமான அற்புதங்களைச் செய்ததோடு நிறுத்திக்கொள்ளாமல், ''நான் என் பிதாவினிடத்தில் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'' (யோவான் 14:12) என்று அறிவித்தார். தேவன் சாதாரண மனிதரை அசாதாரண வல்லமையுள்ளவர்களாக மாற்ற விரும்புகிறார்,

அப்போஸ்தலர்கள், சீஷர்கள் மட்டுமல்ல, விசுவாசிகளும் அற்புதங்களைச் செய்யமுடியும். ஏனென்றால் இயேசு பிதாவிடம் போகிறார், வரங்கள் செயல்படுவதின் அஸ்திபாரம் இதுதான். அவர் பரலோகம் போனதும் செய்யவிருந்த முதல் காரியம் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் வாசம் பண்ணும்படியாக பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதுதான். ஆவியானவரே சகல ஆசீர்வாதங்களின் ஊற்று. விசுவாசிகளாகிய கால்வாய்கள் மூலமாக ஜீவ ஊற்றுத் தண்ணீர் கடந்து போகிறது. பலருடைய தாகம் தீர்க்கப்படுகிறது,

''வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே, ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே, கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.'' (1கொரி 12:4-6) ஆவியானவர், கர்த்தர், தேவன் ஆகிய மூன்று திரித்துவ நபர்களும் தனித்தனியாகவும் இணைந்தும் வரங்களை வழங்குவதில் செயல்படுகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

மேலும் வரம் (gift, charismata), ஊழியம், (service, diakoniai) கிரியை (working, energemata) என்று மூன்று பிரிவாக ஆவிக்குரிய வரங்கள் அழைக்கப்படுவதையும் இந்த வசனங்களில் காண்கிறோம், எனவே வரம் என்பது தன்னில்தானே ஒரு சக்தி அல்லது வல்லமை, அல்லது ஊழியம் என்று சொல்லுவதைவிட, ஊழியம் செய்ய ஒரு மனிதனைத் தகுதிப்படுத்த பரலோகத்திலிருந்து திரித்துவ தேவன் அருளும் தெய்வீக திறமை என்று சொல்லமுடியும்,

வித்தியாசமான வரங்கள் என்று சொல்லும்போது பொதுவாக அந்நியபாஷை, தீர்க்கதரிசனம், குணமாக்குதல் ஆகிய வரங்கள் உடனடியாக நம்முடைய மனதில் தோன்றுகின்றன. அடுத்ததாக 1 கொரிந்தியர் 12:8-10ல் சொல்லப்படும் ஒன்பது வரங்கள் நினைவுக்கு வருகிறது,

**1) ஞானத்தைப் போதிக்கும் வசனம்**
**2) அறிவை உணர்த்தும் வசனம்**
**3) விசுவாசம்**
**4) குணமாக்கும் வரம்**
**5) அற்புதங்களைச் செய்யும் சக்தி**
**6) தீர்க்கதரிசனம் உரைத்தல்**
**7) ஆவிகளைப் பகுத்தறிதல்**
**8) பற்பல பாஷைகளைப் பேசுதல்**
**9) பாஷைகளை வியாக்கியானம் செய்தல்**

இந்தப்பட்டியலில் ஒன்பது வரங்களை மட்டும் பவுல் குறிப்பிடுவதற்கு காரணம், ஆவியின் கனியாக ஒன்பது தன்மைகளை மட்டும் அவர் சொல்லுவதினால் இருக்கலாம். மேலும் பாஷைகளைக் குறித்த இரண்டு வரங்களை இந்த பட்டியலின் கடைசியில் பவுல் குறிப்பிடுவதினால் அவை முந்தினவைகளைவிட குறைந்தவை என்பதினால் அல்ல. இவை பழைய ஏற்பாட்டு காலத்து பரிசுத்தவான்களுக்கு அருளப்படாத புதிய வரங்கள் என்பதினால், கடைசியில் சொல்லப்படுகிறது.

அதே 1 கொரிந்தியர் 12வது அதிகாரத்தின் கடைசியில் (வ 28) எட்டு வரங்களைக் குறிப்பிடும்போது அடியில் கண்ட நான்கு புதிய வரங்களைப் பவுல் சேர்த்துக் கொள்வதைப் பார்க்கிறோம்.

**10) அப்போஸ்தலர்**
**11) போதகர்**
**12) ஊழியர்**
**13) ஆளுகை**

எபேசியர் 4:12,13ல் ஐந்து வரங்களைக் குறித்துப் பேசும் பவுல் இரண்டு புதிய வரங்களை அறிமுகப்படுத்துகிறார்.

**14) சுவிசேஷகர்**
**15) மேய்ப்பர்**

இதுவரைக் குறிப்பிடப்படாத மூன்று வரங்களை ரோமர் 12:6-8 வசனங்களில் பார்க்கிறோம்.

**16) புத்தி சொல்லுதல்**
**17) பகிர்ந்து கொடுத்தல்**
**18) இரக்கம் செய்தல்**

மேலும் விவாகம் செய்யாமல் தேவ ஊழியம் செய்வது தேவனால் அருளப்பட்ட வரம் (1 கொரி 7:7) என்று சொல்லப்படுகிறது. 1 பேதுரு 4:9,10ல் விருந்தோம்பல் ஒரு வரமாகவும், யாத்திராகமம் 31:1-5ல் கைவினைக் கலைத்திறன் ஒரு வரமாகவும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு ''தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகள்'' (1 பேதுரு 4:10) இருபதுக்கும் மேலானவை வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, பல வேளைகளில் இரண்டு மூன்று வரங்கள் ஒன்றோடொன்று இணைந்து வித்தியாசமான முறைகளில் ஒரு புதிய வரத்தைப்போல செயல்படுவதையும் பார்க்கிறோம்.

பிசாசுக்களைத் துரத்துவது, சர்ப்பங்களை எடுப்பது. விஷத்தினால் சேதமடையாமலிருப்பது (மாற்கு 16:18) ஆகியவைகளும் விசுவாசிகளுக்கு அருளப்படும் வரங்கள்தான். வேதத்திலுள்ள வரங்களின் பட்டியல் எதிலும் சொல்லப்படாத புதிய கிருபை வரங்கள் இந்த நாட்களில் சபையில் வெளிப்படுவதையும் நாம் பார்க்கலாம்.

ஞான வரங்களை விரும்பும்படியாக (1 கொரி 14:1), நாடும்படியாக (14:12), அவைகளில் தேறும்படியாக (14:12), அவைகளுக்காக விண்ணப்பம் பண்ணும்படியாக (14:13) வேதம் ஆலோசனை தருகிறது. ''ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை'' (12:1) என்று பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார்.

அதே நேரத்தில் வரங்களுக்கு அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுப்பதும் ஆபத்தான காரியம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டு. வரங்களைப் பெறுவது எப்படி என்பதைக் கற்றுக் கொள்வது நம் வாழ்க்கையின் குறிக்கோளாக மாறிவிடக்கூடாது. வரங்களைத் தேடுவதைவிட தேவ கிருபையைத் தேடுவது உத்தமம். வரங்களைச் செயல்படுத்தும் ஊழியர்களைப் பின்பற்றுவதைவிட கனி நிறைந்த ஊழியர்களைப் பின்பற்றுவது உத்தமம். கொரிந்து சபையாரை பவுல் கடிந்து கொள்வதற்கு முக்கியமான காரணம், கனி நிறைந்த பரிசுத்த வாழ்க்கையை விட வரங்களுக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்ததினால்தான்.

''நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது'' (யாக் 1:17). வரங்கள் பூரணமானவைதான், ஆனால் அவை யார் மூலமாக வெளிப்படுகிறதோ அந்த மனிதர்கள் எவ்வளவு

பிரபலமானவர்களாக இருந்தாலும் பூரணமானவர்கள் அல்ல என்பதை அறிந்து கொள்ள வேண்டும்,

அதனால்தான் பவுல் சொல்லுகிறார் ''நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது'' (1 கொரி 13:9). ஒரு ஊழியர் பலவிதமான வரங்களை செயல்படுத்துகிறார் என்பதினால் மட்டும் அவர் தேவனோடு ஒன்றித்து நடப்பவர் என்று முடிவு செய்துவிட முடியாது, தங்கள் வாழ்க்கையில் பரிசுத்தமில்லாத பலர் வரங்களைச் செயல்படுத்துகிறார்கள்.

தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தவர்களை, பிசாசுகளைத் துரத்தினவர்களை, அற்புதங்களைச் செய்தவர்களை ''நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்'' (மத் 7:23) என்று சொல்ல வேண்டியதிருக்கும் என்று இயேசு குறிப்பிடுகிறார். தீர்க்கதரிசனம் சொல்லுவது, பிசாசைத் துரத்துவது, அற்புதங்காளைச் செய்வது பிதாவின் சித்தத்தின்படி இல்லாமல் சுயமேன்மையின் அடிப்படையில் இருந்தால் அது அக்கிரமச் செய்கையாகி விடுகிறது.

''தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே'' (ரோமர் 11:29). நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவன் தான் மனிதர்களுக்கு வழங்கிய வரங்களைப் பொதுவாகத் திரும்பப் பெறுவதில்லை. இதனால்தான் பின்மார்க்க சூழ்நிலையிலும் சில ஊழியர்களிடம் வரங்கள் செயல்படுகிறது.

வரங்களை மிகைப்படுத்தும் ஊழியர்கள் தேவனை அல்ல, தாங்கள் பெற்றிருக்கும் வரங்களை மகிமைப்படுத்த ஆரம்பித்துவிடுகிறார்கள். தேவன் விரும்பினால் ஒரு கழுதையும் கூட வரத்தைப் பெற்றுக் கொள்ளும். பிலேயாம் போன்ற தீர்க்கதரிசிக்கே ஆலோசனை வழங்கும். (எண் 22:28). ஒருவனுடைய ஆவிக்குரிய நிலமையை அவர்கள் செயல்படுத்தும் வரங்களிலிருந்து அறியமுடியாது, ''அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்'' (மத் 7:20).

ஆவியின் வரங்களைப் போலியான முறையில் அசுத்த ஆவிகள் நடப்பிக்க முடியும் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். தேவன் ஆரோனின் கோலை சர்ப்பமாக மாற்றினார் என்றால் எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திர வித்தையினால் அப்படிச் செய்தார்கள். (யாத் 7:11) ''கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய

அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" (மத் 24:24) என்று இயேசு எச்சரிக்கிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து எச்சரிக்கை வேதத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. "அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்." (மத் 7:15)

ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடிப்படையில் வரங்கள் பரிசுத்த ஆவியானவரால் வழங்கப்படுவதில்லை என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். யோவான் ஸ்நானன் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை என்பதை ஏற்கனவே பார்த்தோம். கொரிந்து சபையாரை யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்கள் (1 கொரி 1:7) என்று பவுல் குறிப்பிட்டாலும் அவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல, மாம்சத்துக்குரியவர்கள், கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் (1 கொரி 3:1) என்று பவுல் கண்டிப்பதைப் பார்க்கிறோம்.

தேவ ஊழியத்தில் ஒரு அங்கமாக, கருவியாக, வாய்க்காலாக தேவன் ஒருவனைப் பயன்படுத்தும்படியாகவே வரங்களைக் கொடுக்கிறார். நாம் மற்றவர்களுடைய தேவைகள், பிரச்சனைகளை உணர்ந்தவர்களாய், அவர்கள்மேல் கரிசனை உள்ளவர்களாய், அன்பு செலுத்தி, அவர் (இயேசு) நடந்த வண்ணமாக நாமும் நடக்கும்போது (1 யோ 2:6), வரங்களைப் பெறுகிறோம். அப்போது நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருந்து, வரங்களைக் குறித்து நம்மை மேன்மை பாராட்டாத கிருபையை அவரிடமே ஜெபித்துப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. வரங்கள் செயல்படுவதின் மூலம் மனிதர்களுடைய கண்கள் இயேசுவின் மேல் வைக்கப்படவேண்டுமே தவிர, அவைகளைச் செயல்படுத்தும் ஊழியர்கள்மேல் அல்ல. இந்த விஷயத்தில் பல தவறுகள் நவீனகால ஊழியங்களில் நடந்துவருகின்றன.

"முக்கியமான வரங்களை நாடுங்கள்" (கொரி 12:31), "அன்பை நாடுங்கள்; ஞான வரங்களையும் விரும்புங்கள். விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்" (14:1). தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் (அந்நிய பாஷைகளில் பேசுகிறவனிலும்) மேன்மையுள்ளவன் (14:5) போன்ற பவுலின் வார்த்தைகள் சில குறிப்பிட்ட வரங்களை முக்கியமானவைகளாக பவுல் கருதுவதை வெளிப்படுத்துகின்றன. இது அவருடைய சொந்த கருத்து. சபைக்கு பக்தி விருத்தி உண்டாக்கும் (14:12) வரங்களை பிரதானமாக பவுல் நினைப்பதில் தவறில்லை. வரங்களை அருளுவது பரிசுத்த ஆவியானவர் என்பதினால் எல்லா வரங்களுமே முக்கியமானவைகளாகத்தான் இருக்கமுடியும்.

மேலும் ஒரே வரம் வித்தியாசமான நபர்களுக்கு வித்தியாசமான அளவில் கொடுக்கப்படலாம். பவுல் சொல்லுகிறார் "உங்களெல்லாரிலும் நான் அதிமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன் (14:18). ஒருவன் தான் பெற்றுக்கொண்ட வரத்தை அப்பியாசத்தின் மூலம் வளர்த்துக் கொள்ளவும் முடியும். "உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே" (1 தீமோ 4:14) என்று பவுல் எச்சரிப்பதை கவனியுங்கள். "நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்." (2 தீமோ 1:6). பயன்படுத்தாமல் விடப்பட்ட வரங்கள் பலவீனப்படலாம்.

எல்லா வரங்களும் பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்டாலும், அவற்றை நல்ல முறையில் செயல்படுத்துவது, சபை பயனடையும்படியாக அவற்றை ஊக்குவித்து வல்லமையுள்ளதாக மாற்றுவதில் உக்கிராணக்காரன் என்ற முறையில் மனிதனுக்கும் பங்கு உண்டு என்பதை மேல்கண்ட வசனங்களிலிருந்து அறிகிறோம். ஐந்துதாலந்தைப் பெற்றுக் கொண்டவன் அதை பத்தாக்குகிறான், ஒரு தாலந்தைப் பெற்றவனோ, அதைப் புதைத்து வைக்கிறான் (மத் 25:14-30). முந்தினவனே உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியன்.

அடுத்ததாக, வரங்கள் யாருக்கெல்லாம் கொடுக்கப்படுகிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒருவனுடைய ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடிப்படையில் அதாவது தகுதியின் அடிப்படையில் அவை அருளப்படுவதில்லை என்பதை ஏற்கெனவே பார்த்தோம். எனவே புகழ் பெற்ற, பெரிய ஊழியர்கள்தான் வரங்களை நடப்பிக்க முடியும் என்பதில்லை. "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன" (மாற்கு 16:17) என்றுதான் சத்திய வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு கிரயம் கொடுத்து நாம் வரங்களைப் பெற்றுக்கொள்வதில்லை. அப்படியானால் அது ஒரு வரமல்ல, எல்லா ஈவுகளும் இலவசமானவை. "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப் 4:13) என்று பவுல் அறிக்கையிடுவதைப் போல, நாம் எல்லோருமே வரங்களை நடப்பிக்க முடியும் என்று விசுவாசிப்போம். நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரே எல்லா வரங்களுக்கும் மூலகாரணமானவர், வரங்களையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின் படியே நமக்கு பகிர்ந்து கொடுக்கிறார் (1 கொரி 12:11).

பவுல் சொல்லுகிறார் ''நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயங்களிலிருந்தும், எல்லா அவயங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும், கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே, நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன், ஊழியஞ் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும், தரித்திருக்கக் கடவன், பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக் கடவன் (ரோமர் 12:4-8).

இவ்விதமாக எல்லா விசுவாசிகளுக்கும் வரங்கள் கொடுக்கப்படுகிறது என்பதும், அதினிமித்தம் அவர்கள் தேவனுடைய சபைக்கு பொறுப்பான ஒரு கடமையை நிறைவேற்ற வேண்டியவர்களாகிறார்கள் என்பது புதிய ஏற்பாட்டு உபதேசங்களில் முக்கியமானது. பவுல் சொல்லுவதுபோல ''நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (1 கொரி 12:27). ஒவ்வொரு அவயவமும் தனித்தனியே நடப்பிக்க வேண்டிய கடமை உண்டு (1 கொரி 12:12-26). கிறிஸ்துவுக்காக நாம் ஜீவிக்கவேண்டுமானால் ஒருவருடைய உதவி ஒருவருக்குத் தேவை. வரங்களின் மூலமாக ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் தேவவல்லமை செயல்படவேண்டியதிருக்கிறது. தேவைகள் சந்திக்கப்படவேண்டியதிருக்கிறது. தன்னிடம் வந்த நோயாளியைப் பார்த்து இயேசு 'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று மட்டும் சொல்லவில்லை, 'குணமாகு' என்றும் சொன்னார். குணமும் ஆனது.

நம்மில் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக வரங்கள் நமக்குள் இருக்கின்றன என்றாலும், ஏற்ற நேரத்தில் தம்முடைய சுயாதீன தீர்மானத்தின் அடிப்படையில் ஆவியானவரே அவைகளை நடப்பிக்கிறார் என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். (1 கொரி 12:11). ஒரு குறிப்பிட்ட வரத்தை ஒருவன் உடையவனாய் இருப்பதினால், தான் நினைத்த நேரமெல்லாம் அதைச் செயல்படுத்த முடியாது. அற்புதம் செய்யும் வரத்தைப் பெற்றவன் தான் விரும்பும்போதெல்லாம் அதைச் செய்யமுடியாது, தான் நினைக்கும்போதெல்லாம் தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் சொல்ல முடியாது. குணமாக்கும் வரமுள்ளவன் எப்போது வேண்டுமானாலும்

வியாதியஸ்தரைக் குணமாக்கலாம் என்றால் பட்டணத்திலுள்ள எல்லா மருத்துவமனைகளையும் மூடிவிடலாமே!

பிலிப்பி பட்டணத்தில் அசுத்த ஆவியை உடைய பெண் பவுலையும் சீலாவையும் குறித்து "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள், இப்படி அநேக நாள் செய்து கொண்டு வந்தாள்," (அப் 16:17) என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே அநேக நாட்களில் பவுலிடமிருந்த பிசாசைத் துரத்தும் வரம் செயல்படவில்லை என்பது தெளிவாகிறது. ஒரு குறிப்பிட்ட நாளில் பவுல் சினங்கொண்டு, திரும்பிப் பார்த்து: "நீ இவளைவிட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று." (வ 18)

நாம் ஆராதிக்கும் தேவன் தம் நோக்கங்களுடன், தமது தயவுள்ள சித்தத்தின் படி இந்த உலகத்தை ஆளுகை செய்பவர் (தானி 4:35). வானத்தையும் பூமியையும் தன்னுடைய வார்த்தையினாலே உருவாக்கியவர் (ஆதி 1). அவருக்கு முன்பாக மனிதர்கள் தராசில் படியும் தூசியை போன்றவர்கள். (ஏசா 40:15). அவர் தமது சித்தத்தின் படி ஒருவனைத் தாழ்த்துகிறார், ஒருவனை உயர்த்துகிறார் (சங் 75:7) சூரியனை உதிக்கப்பண்ணுகிறார், மழையைப் பெய்யப் பண்ணுகிறார் (மத் 5:45). சமுத்திரத்தின் பெருமையை ஆளுகிறார், அலைகளை அடங்கப்பண்ணுகிறார் (சங் 89:9). ஆகாயத்துப் பட்சிகளைப் போஷிக்கிறார் (மத் 6:26). காட்டுப் புல்லை உடுத்துவிக்கிறார் (6:30). மனிதனுடைய சுவாசத்தை தன்னுடைய கையில் வைத்திருக்கிறார் (தானி 5:23).

தங்களுக்கு சில வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற தைரியத்தில் தங்கள் விருப்பத்தின்படியெல்லாம் அவைகளை செயல்படுத்தமுடியும் என்று நினைப்பவர்கள் இப்படிப்பட்ட மேலான மகத்துவமும், மகிமையும் நிறைந்த தேவனை ஒரு சாதாரண மந்திரவாதியைப் போலாக்கிவிடுகிறார்கள். ஆதி அப்போஸ்தலர்கள் எல்லா வரங்களையும் உடையவர்களாய் இருந்தாலும் எந்த வேளையிலும் 'எங்கள் அற்புதப் பெருவிழாவுக்கு வாருங்கள். நாங்கள் குணமாக்குவோம். நாங்கள் விடுதலை தருவோம்' என்றெல்லாம் அறிக்கையிட்டதாகத் தெரியவில்லை. சப்பாணி ஒருவன் ஒவ்வொரு நாளும் தேவாலயத்தின் அலங்கார வாசலில் வைக்கப்பட்டிருந்தான், நாள்தோறும் பேதுருவும் யோவானும் தேவாலயம் போய்

வருபவர்கள்தான். அவனைக்குறித்த பாரமும் மனதுருக்கமும் அவர்களுக்கு அனுதினமும் உண்டாயிருக்கலாம். ஆனாலும் ஒரு குறிப்பிட்ட நாளில்தான் ஆவியானவர் செயல்படுகிறார். அந்த நாளில்தான் அற்புதம் நடக்கிறது.

ஆதி அப்போஸ்தலர்களுடைய நாட்களுக்குப்பின் அற்புதங்களும் அடையாளங்களும் நடக்கிறதா என்பது சிலருடைய கேள்வி. இந்த நாட்களிலும் வரங்கள் செயல்படுகின்றன என்பதை பெந்தெகொஸ்தே, மற்றும் கரிஸ்மாட்டிக் அனுபவங்களைக் கொண்ட சபைகள் திட்டவட்டமாக அறிவிக்கின்றன. சில பாரம்பரிய சபைகளோ அற்புதங்களின் நாட்கள் ஆதி சபையோடு முடிந்துவிட்டன என்று கருதுகின்றன. அப்போஸ்தல ஊழியத்தை உறுதிப்படுத்தும் படியாகவே ஆதி சபையில் வரங்கள் செயல்பட்டன என்றும், அவர்களுடைய மறைவுக்குப் பின் பெரிதான அற்புதங்கள் சபைகளில் காணப்படவில்லை என்பதும் இவர்களுடைய நம்பிக்கை,

தங்களுக்கு ஆதாரமாக அவர்கள் ''நம்முடைய அறிவு குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்'' (1 கொரி 13:10) என்ற வசனத்தைக் குறிப்பிடுகிறார்கள். நிறைவான வேத புத்தகம் எழுதி முடிக்கப்பட்டபின் சுவிசேஷத்தை உறுதிப்படுத்த அற்புத அடையாளங்கள் அவசியமில்லை என்பது இவர்களுடைய வாதம்.

வேதத்தில் எந்த இடத்திலும் ஆவியின் வரங்கள் தற்காலிகமானவை, அவை ஆதிசபைக்கு மட்டுமே சொந்தமானவை என்று சொல்லப்படவில்லை. சுவிசேஷத்தை உறுதிப்படுத்தும்படியாக ஆதி அப்போஸ்தலர்களுடைய சபைக்கு ஆவியின் வரங்களின் மூலமாகக் கொடுக்கப்பட்ட தேவ வல்லமை, உலகமெங்கும் பரவலாக சுவிசேஷம் சொல்லப்படவிருக்கும் இந்த கடைசி நாட்களில் இன்னும் அதிகமாகவே தேவைப்படுகிறது என்பதில் சந்தேகமே இல்லை. ஏனென்றால் ''தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே'' (ரோமர் 12:29).

நிறைவானது என்று பவுல் அப்போஸ்தலர் குறிப்பிடுவது கிறிஸ்துவின் இரண்டாவது வருகை என்பதினால் வரங்களின் செயல்பாடு இன்னும் முற்றுப்பெறவில்லை, ''நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்'' (1 கொரி 1:7) என்ற வசனம் இதை உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்து வெளிப்படும்

இரண்டாவது வருகையின் நாள்வரை வரங்கள் செயல்படும் என்பதை நம்புவோம்.

ஆதி சபையில் செயல்பட்ட அதே பரிசுத்த ஆவியானவர், அதே வல்லமையுடன் இன்றும் நம்மோடிருக்கிறார். பிரச்சனை என்னவென்றால், ஆதிசபையில் வரங்கள் செயல்பட்டதின் மூலம் தேவன் மட்டுமே மகிமைப்பட்டார். இப்போதோ, வரங்களைச் செயல்படுத்தும் தேவ தாசர்களும் மகிமைப்படுகிறார்கள். எனவே ஆவியானவர் துக்கமடைந்திருக்கலாம். ஊழியர்களும் விசுவாசிகளும் மனந்திரும்புவார்களாக.

இறுதியில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய காரியம் இதுதான், கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய பிள்ளைகள். எனவே அதிசயங்களையும், அற்புதங்களையும், தீர்க்கதரிசனங்களையும் பின்தொடர்ந்து நாம் ஓடக்கூடாது. அவை நம்மைப் பின்தொடர்ந்து வரவேண்டும்.

இரண்டு தவறுகளைச் செய்யாதபடி நாம் கவனமாக இருக்கவேண்டும்.

1) ஆவிக்குரிய வரங்களை மிகைப்படுத்தி ஒரு ஒழுங்கற்ற நிலையில் அவைகளைப் பயன்படுத்த, பயன்பெற முயற்சிப்பது.

2) ஆவிக்குரிய வரங்களை முற்றிலுமாகப் புறக்கணித்து தயவாக அருளப்பட்ட தேவ வரங்களை அவித்துப் போடுவது.

# 10

## ஆவியின் பிரதான வரங்கள்

ஆவியின் வரங்களைக்குறித்த பொதுவான காரியங்களை முந்தின அதிகாரத்தில் கற்றுக்கொண்ட நாம் அடுத்து முக்கியமான ஒன்பது வரங்களைக் குறித்து தெளிவான விளக்கத்தை தனிப்பட்ட விதத்தில் அறிந்து கொள்ளுவது அவசியமாயிருக்கிறது.

1 கொரிந்தியர் 12-வது அதிகாரத்தில் பவுல் நமக்கு முன்னால் வைக்கும் ஒன்பது வரங்களைக் குறித்து பல கருத்து வேறுபாடுகள் சபைகளில் காணப்படுகின்றன. வரங்களைக் குறித்து பல புத்தகங்கள் புகழ்பெற்ற ஊழியர்களினால் எழுதப்பட்டிருந்தாலும், அவைகளில் பெரும்பாலானவை அவர்களின் தனிப்பட்ட அனுபவங்களை போதனையாக வெளிப்படுத்தும் முயற்சியாகும். இதன் விளைவாக வரங்களைக் குறித்து பல குழப்பங்கள் பரவலாக விசுவாசிகளிடம் தோன்றியுள்ளன. வரங்களைக் குறித்து வேத வசனங்கள் என்ன சொல்லுகிறது என்பதையே நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

இந்த முக்கியமான ஒன்பது வரங்களை மூன்று வகையாகப் பிரித்து, அதன்பின் ஒவ்வொன்றாக அவைகளைப்பற்றி அறிந்து கொள்ளுவது பிரயோஜனமாயிருக்கும். அப்படிச் செய்யும்போது வரங்களை வரிசைப்படுத்தும் பட்டியலில் சில மாறுதல்கள் செய்ய வேண்டியதிருக்கிறது.

ஐக்கிய வரங்கள் (பேச்சில் வல்லமை)

1) **பற்பல பாஷைகளைப் பேசுதல்**
2) **பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்**
3) **தீர்க்கதரிசனம் உரைத்தல்**

வல்லமை வரங்கள் (செயலில் வல்லமை)

4) **குணமாக்கும் வரங்கள்**
5) **அற்புதங்களை செய்யும் சக்தி**
6) **விசுவாச வரம்**

வெளிப்படுத்தும் வரங்கள் (அறியும் வல்லமை)

7) **ஆவிகளைப் பகுத்தறியும் வரம்**

8) **ஞானத்தை போதிக்கும் வசனம்**

9) **அறிவை உணர்த்தும் வசனம்**

## பற்பல பாஷைகளைப் பேசுதல்

பற்பல பாஷைகளில் பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் ஆகிய இரண்டு வரங்களும் பழைய ஏற்பாட்டு நாட்களில் எவருக்கும் அருளப்படவில்லை. அந்நிய பாஷை, பற்பல பாஷை, வேற்றுமொழி எல்லாம் ஒரே அனுபவம்தான். முதல்முறையாக பெந்தெகொஸ்தே நாளில் மேல்வீட்டறையில் காத்திருந்த சீஷர்களுக்கு முதல் முறையாக இந்த அனுபவம் வழங்கப்பட்டது.

புதிய ஏற்பாட்டில் பாஷைகளைப் பேசும் வரத்தைக் குறித்து (Glossolalia) பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் நவமான மொழிகளில் பேசும் இந்த வரம் தீர்க்கதரிசனமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது: "பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்" (ஏசாயா 28:11).

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டபோது அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் (சீஷர்களுக்கு) காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" (அப் 2:3,4). தேவ ஒத்தாசையினாலே அவர்கள் பேசியதை பல தேசங்களிலிருந்தும் வந்த கிரேக்கர், அரபியர், எகிப்தியர். முதலான பல பாஷைகள் பேசும் பகுதியிலிருந்து வந்தவர்கள் "தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்" (வ 6). "நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்கிறோமே" (வ 11) என்று பிரமித்துத் திகைத்து நின்றார்கள்.

"நவமான பாஷைகளைப் பேசுவார்கள்" (மாற்கு 16:17) என்ற இயேசுவின் எதிர்பார்ப்பு பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறுகிறது. அந்நிய பாஷை என்பது தேவன் அருளும் வரம். அதைக் குறை கூற, அல்லது குறைத்து மதிப்பிட எவருக்கும் உரிமையில்லை, அது

அவ்வளவு முக்கியமான வரமல்ல என்று சொல்லும் போது அந்த வரத்தை அல்ல, அதை அருளிய பரிசுத்த ஆவியானவரைக் குறை சொல்லுகிறோம். அற்பமான ஒரு காரியத்தை தேவன் நமக்கு தரமாட்டார் என்று நம்புவோம், உலக ஞானம், கல்வி அறிவு அதன் மதிப்பை அறியாமல் இருக்கலாம். அதன் முக்கியத்துவத்தைத் தேவன் அறிவார்.

''அந்நியபாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசுகிறான்'' (1 கொரி 14:2). ''அந்நிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது (வ, 22). ''அந்நிய பாஷையினால் ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணுகிறான்'' (வ, 16). ''உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்'' (வ 18) என்று சொல்லும் பவுலின் வாஞ்சை என்ன தெரியுமா? ''நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்'' (வ, 5) ''அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்'' (வ 39), ஆகிய வசனங்கள் இந்த வரத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான், தேவன் ஆவியாயிருக்கிறார் (யோ 4:24). ஆவியோடும் உண்மையோடும் மட்டும் மனிதன் அவருடன் ஐக்கியம் கொள்ளமுடியும். ''நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து (ஆத்துமாவின் செயல்பாடு) பயனற்றதாயிருக்கும்'' (1கொரி 14:14) என்று பவுல் குறிப்பிடுகிறார். இவ்விதமாக அந்நிய பாஷை ஒரு ஜெபமாக, ஸ்தோத்திரமாகச் செயல்படுகிறது. என் ஆவி, என் கருத்து என்று பவுல் குறிப்பிடுவதினால் இவ்விதமான ஜெபத்தை தேவனிடம் ஏறெடுப்பது மனிதனுக்குள் இருக்கும் மனித ஆவியேயன்றி பரிசுத்த ஆவியானவர் அல்ல,

இவ்விதமாக அந்நிய பாஷை அதை பேசுபவனின் மூளை அறிவினால் ஆத்துமாவால் விளங்கிக் கொள்ள முடியாத நிலமையில் மனிதனுடைய ஆவி தேவனைத் துதிக்கும் அல்லது தேவனிடம் வேண்டிக்கொள்ளும் அனுபவமாகிறது. ''அந்நிய பாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே (தன்னுடைய மனித ஆவியால்) இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்'' (1 கொரி 14:2).

மனித ஞானம் குறைவுபட்டது. தன்னுடைய தேவைகளைத் தானே அறிந்து கொள்ளமுடியாத நிலமையில் அவன் இருக்கிறான். சர்வ வல்லமையும், மகத்துவமும் பராக்கிரமும் நிறைந்த பரலோகத்தின் தேவனுடன் அவன் பேசி ஐக்கியம் கொள்ளும்படியாக வரும்போது, கருத்தோடு, மூளை அறிவோடு (ஆத்துமாவால்) பேசுவது கடினமான ஒரு காரியம். ஒருவேளை கருத்தோடு அவன் பேச ஆரம்பிக்கும் போது அச்சத்தினிமித்தம் அந்த ஐக்கியம் தடைபட்டு விடலாம்.

"ஆயினும், பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந்தால்" (வ 11) ஒரு குழந்தை தான் பேசுவது என்ன என்பதை முழுவதுமாகத் தெரிந்து கொள்ளாமல் இருந்தாலும், தைரியமாகப் பேசுவதைப் போல தனது அறிவின் வரம்பைக்கடந்து ஆவியானவர் தரும் வார்த்தைகளை விசுவாசத்தோடு தைரியமாகப் பேசுகிறான். மறுபடியும் பிறந்ததினால் உயிர்ப்பிக்கப்பட்ட மனிதனுடைய ஆவி, பரிசுத்த ஆவியோடு இணைக்கப்பட்டு, உயிர்ப்பிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள்ளாக, மனித அறிவின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுதலை பெற்று, பிதாவை நோக்கி விடுதலையோடு ஜெபிப்பதே அந்நிய பாஷை அனுபவமாகும், இங்கே ஜெபம் ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்படுவதினால், முழுமையாக தேவன் அதை அங்கீகரிக்கிறார்,

"அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்" (வ. 4) அதாவது ஆவிக்குரிய ரீதியில் தன்னைத்தானே கட்டிஎழுப்புகிறான். பலப்படுத்திக் கொள்ளுகிறான், "நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது, அது அடங்காத பொல்லாங்குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது-மாயிருக்கிறது" (யாக் 3:8), "நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிற தாயும் இருக்கிறது" (வ, 6). இப்படிப்பட்ட நாவின் இயற்கையான முரட்டுத்தனத்தையும் அசுத்தத்தையும் பரிசுத்த ஆவியானவர் நீக்கி, தன்னுடைய ஆளுகைக்குள் வைத்துக் கொள்ளும்போது அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கை கட்டப்படுவதில் ஆச்சரியமில்லையே! இதன் விளைவாக பாஷைகளில் பேசுகிறவன் இளைப்பாறுதலையும், ஆறுதலையும் பெற்று (ஏசா 28:11) வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடிகிறது.

உணர்ச்சி வசப்பட்ட, பக்தி பரவசத்தினால் மெய்மறந்த

நிலமையில்தான் அந்நிய பாஷை பேசப்படுகிறது என்ற கருத்து தவறானது; கட்டுப்பாட்டுடனும், அமைதியான முறையிலும் அந்நிய பாஷைகளில் தேவனைத் துதிக்க முடியும். இப்படிப்பட்ட கருத்துள்ள ஆராதனையை பவுல் ஊக்குவிப்பதைப் பார்க்கிறோம் ( 1 கொரி 14:27-28).

அந்நிய பாஷையைப் பேசுவது சிலசமயம் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புவது உண்மைதான். பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் மதுபானத்தினால் நிரப்பட்டிருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டார்களல்லவா? (அப் 2:13). அதற்காக உணர்ச்சிவசப்படுவதின் விளைவாகத்தான் பாஷைகளில் பேசுகிறார்கள் என்று சொல்லுவது தவறு. உணர்ச்சி வசப்படுவது மனிதனுடைய ஆத்துமாவோடு சம்பந்தப்பட்டது. பாஷைவரம் மனிதனுடைய ஆவியோடு சம்பந்தப்பட்டது. இரண்டும் வேறுபட்ட அனுபவங்களின் அடிப்படையிலானவை,

அந்நிய பாஷை வரத்தை அங்கீகரிக்காத சில ஊழியர்களின் கொள்கைகளை விசுவாசிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. வேதம் சொல்லுவது போல் "சிலர் விசுவாசியாமல் போனாலுமென்ன? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ? அப்படியாக்கமாட்டாது" (ரோமர் 3:3). அந்நிய பாஷையை குறைத்துப் பேசி கேலிப்பண்ணும் பழக்கம் அந்த வரம் அருளப்பட்ட முதல் நாளிலிருந்தே உலகில் காணப்படுகிறது (அப் 2:13). கடைசி நாட்களில் அது அதிகரித்திருப்பதில் ஆச்சரியம் இல்லை.

பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் அந்நிய பாஷையில் என்ன பேசினார்கள் என்பதை கூடிவந்த யூதர்கள் எல்லாருமே விளங்கிக் கொண்டார்கள் (அப் 2:6). பேசிய சீஷர்களோ அந்த பாஷைகளை அறிந்திருக்கவில்லை. "இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயர்களல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே," (வ 7,8) என்று யூதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். எனவே சிலவேளைகளில் அந்நிய பாஷை பல நாட்டு மனிதர்கள் பேசும் வித்தியாசமான பாஷைகளில் வெளிப்படலாம். அந்த பாஷைகளை அறிந்தவர்கள் என்ன பேசப்படுகிறது என்பதை விளங்கிக் கொள்ள முடியும் என்றும் பார்க்கிறோம்,

அதே நேரத்தில் ஒருவனும் அறியமுடியாத (1 கொரி 14:2),

பரலோக அல்லது தூதர்களின் பாஷையிலும் இந்த வரம் வெளிப்படலாம். வேதத்தில் ஒரு இடத்தில் பேசப்பட்ட அந்நிய பாஷையைக் கேட்டவர்கள் விளங்கிக் கொண்டார்கள் என்பதினால், விளங்கிக் கொள்ளும்படியாக மனிதர் பாஷைகளில் பேசப்படுவதுதான் அந்நிய பாஷை. மற்றவையெல்லாம் வெறும் பிதற்றல் என்று தீர்மானிப்பது தவறு. 14-வது அதிகாரம் முழுவதும் வியாக்கியானம் செய்யப்பட்டால் மட்டுமே விளங்கிக் கொள்ளக் கூடிய அந்நிய பாஷையைக் குறித்து கொரிந்து சபைக்கு பவுல் பலமுறை குறிப்பிடுகிறார்.

அந்நிய பாஷை இரண்டு வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. முதலாவது தனி மனிதனின் பக்திவிருத்திக்காக. பக்தியின் பாஷையாக ஒருவரும் அறிந்து கொள்ளாத முறையில் மனிதன் தன்னுடைய ஆவியினாலே இரகசியங்களைப் பேசும் அனுபவம் (1 கொரி 14:2). இது தேவனிடம் நேரடியாகப் பேசப்படுவதினால் யாரும் விளங்கிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. யாரும் வியாக்கியானம் செய்வதும் கூடாத காரியம். இதைக் குறித்த சத்தியங்களை இதுவரை பார்த்தோம்,

இரண்டாவது வகையில் அந்நிய பாஷையில் பேசப்படுவது சபையில் எல்லோரும் கேட்கும்படியாக பேசப்பட்டு உடனடியாக வியாக்கியானம் செய்யப்படுவது. இதன் மூலம் அதன் அர்த்தத்தை எல்லோரும் அறிந்து கொள்ளச் செய்வதால் முழுசபையும் பக்தி விருத்தி அடைகிறது. சபையில் இவ்விதமாய் அந்நிய பாஷை பேசப்படும்போதெல்லாம் அது வியாக்கியானம் பண்ணப்பட வேண்டும் என்பதே பவுல் தரும் ஆலோசனை, "யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும், அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல். தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்" (வ 27,28).

வியாக்கியானமில்லாமல் ஒரே நேரத்தில் பலர் சபையில் எல்லோரும் கேட்டும்படியாக அந்நிய பாஷைகளில் பேசுவதினால் ஏற்படும் குழப்பத்தைத்தான் பவுல் இங்கே தடைசெய்வதைப்போல் காணப்படுகிறது. தனக்கும் தேவனுக்கும் தெரிய மனதுக்குள்ளாக அந்நிய பாஷை பேசுவதில் எந்த பிரச்சனையும் இல்லை. சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படவேண்டும் என்பதே (வ 26) பவுலின் வாஞ்சை. சபையார் அத்தனை பேரும், அல்லது

பெரும்பான்மையான சபையார் மொத்தமாக ஒருங்கிணைந்து அந்நிய பாஷைகளில் தேவனைத் துதிப்பது, பாடுவது, ஆராதிப்பதை பவுல் தடைபண்ணுவதாகத் தெரியவில்லை (1 கொரி 14:39)

## பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்

பரிசுத்த ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்ட மனிதனுடைய ஆவி அந்நிய பாஷைகளில் தேவனைத் துதிக்கிறது, அவரோடு பேசுகிறது என்பதைப் பார்த்தோம். அந்நிய பாஷை மூலமாக தேவன் விசுவாசிகளிடமும் அல்லது சில வேளைகளில் அவிசுவாசிகளிடமும் பேசுகிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். "பரியாச உதடுகளினாலும், அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்," என்று ஏசாயா 28:11ல் சொல்லப்பட்டிருக்கிறது. மறு பாஷைக்காரராலும், மறு உதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன்" (1 கொரி 14:21).

ஒருவர் தான் அறியாத, தனக்குப் பழக்கமில்லாத பாஷைகளில் பேசுவதுதான் அந்நிய பாஷை என்று பார்த்தோம். தேவன் நேரடியாக அந்நிய பாஷைகளில் மனிதரிடம் பேசுவது இல்லை. ஏனென்றால் அவருக்குத் தெரியாத பாஷை என்று எதுவும் இல்லை. இருந்தாலும் அவர் தன்னுடைய ஆளுகைக்கு விட்டுக்கொடுத்த ஒரு மனிதனை பாஷையில் பேசும்படியாக வழிநடத்திக் கொடுக்கிறார். அவர் பேசவைக்கிறார். அவன் பேசுகிறான். இங்கே மனிதனுடைய ஆவியின் கிரியை மட்டுப்படுத்தப்படுகிறது. முந்தின வகை அந்நியபாஷையில் இருந்தபடி மனித ஆவி பேசுவதில்லை. பரலோகத்திலிருந்து பெற்றுக் கொண்ட உந்துதல் அவனைப் பேசவைக்கிறது.

இந்த வகை "அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது" (கொரி 14:22). ஏற்கெனவே விசுவாசிக்கிறவனுக்கு புது அடையாளம் தேவையில்லை. அவிசுவாசிக்கு எப்படி அடையாளமாகிறது? ஒருவேளை பேசப்படும் பாஷை பேசுபவனுக்குத் தெரியாமலிருந்தும் கேட்கிற அவிசுவாசிக்கு தெரிந்திருக்கும் போது தேவன் தன்னோடு நேரடியாக பேசுவதை உணர்ந்து இரட்சிப்புக்கு வழிநடத்தப்படுகிறான். அப்படி ஒருவேளை அந்த பாஷையை அவன் அறியாதிருந்தாலும் அது வியாக்கியானம் பண்ணும் வரத்தை உடையவனால் வியாக்கியானம் செய்யப்பட்டு அவனுக்கு நேராக வரும்போது தேவ வல்லமை அவனை உயிர்ப்பிக்கும், தேவன் உண்மையானவர் அவர்

தன்மேல் கரிசனையுடையவர் என்ற சத்தியம் எந்த முரட்டாட்டம் பிடித்த மனிதனையும் மனந்திரும்பச் செய்துவிடும் (வ. 24:25).

அந்நிய பாஷை பேசும் வரத்தோடு வியாக்கியானம் பண்ணும் வரமும் இணைந்து செயல்படும்போது அது தீர்க்கத்தரிசன வரத்துக்கு இணையானதாகிறது (1 கொரி 14:3). “அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ, சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகப் பேசுகிறான். நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன் ஆகிலும், அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்'' (14:4,5). ''எனவே அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன்'' (வ:13). ஏனென்றால் இது சபைக்கு கூடுதலான ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது.

அந்நிய பாஷையை, இந்த இரண்டாவது வரத்தைப் பெற்ற மனிதன் வியாக்கியானம் செய்யத்தான் முடியுமே தவிர மொழி பெயர்க்க முடியாது என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஏனென்றால் வியாக்கியானம் செய்பவர் பேசப்பட்ட அந்நியபாஷையை அறியாதவர். சொல்லப்பட்ட காரியத்தின் பொதுவான அர்த்தமே வியாக்கியானமாக ஆவியானவரால் கொடுக்கப்படுகிறதே தவிர வார்த்தைக்கு வார்த்தை, வரிக்கு வரி மொழிபெயர்ப்பல்ல. இந்த வியாக்கியானம் மொத்தமாக வரத்தைச் செயல்படுத்துபவரின் மனதில் தோன்றுகிறது. அல்லது முதல் ஒன்றிரண்டு வார்த்தைகள் அவருக்கு அருளப்படுகிறது. வியாக்கியானம் பண்ணுபவர் விசுவாசித்துப் பேச ஆரம்பிக்கும்போது தொடர்ச்சியாக தேவன் வார்த்தைகளைக் கொடுக்கிறார்.

அந்நிய பாஷைகளைக் குறித்து பல கருத்துவேறுபாடுகள் சபைகளில் காணப்படுகின்றன. அந்நிய பாஷை இல்லாமல் அபிஷேகம் இல்லை, இரட்சிப்பு இல்லை, அதைப்பேசித்தான் ஆகவேண்டும் என்ற முறையில் சில நிர்ப்பந்தங்கள் சில சபைகளில் காணப்படுவதின் விளைவாக, அந்நிய பாஷை வரத்தைப் பெறாமலே உணர்ச்சிகளின் பிரதிபலிப்பாக சிலர் எதையோ பேசிவிட்டு, தங்களுக்கும் பாஷை வரம் உண்டு என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். இது தவறு. இத்தகைய பிதற்றலான

பேச்சை மிகைப்படுத்திக் கொண்டு ஆராய்ச்சி பண்ணும் சிலர் அந்நிய பாஷையே வேண்டியதில்லை என்று அறிவிப்பதும் தவறு. ஆவிக்குரிய பல அனுபவங்களை மூளை அறிவினால் முழுமையாக விளங்கிக்கொள்ள முடியாது. தேவன் அதை விளக்குவதுமில்லை. பல காரியங்களை நிதானித்து விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுவதே உத்தமம்.

## தீர்க்கதரிசனம் உரைத்தல்

'பின்வரும் காரியங்களை முன்னதாகவே அறிவித்தல்' என்ற பொருளிலும் (மத் 13:14, 2 பேதுரு 1:20,21, வெளி 1:3,22), 'இரகசியங்களை வெளிப்படுத்துதல்' என்ற பொருளிலும் (லூக் 22:64, 1 கொரி 14:24,25) தீர்க்கதரிசன வரம் செயல்பட்டு வருகிறது. அந்நியபாஷை வியாக்கியானத்தின் மூலமாக தீர்க்க தரிசனத்துக்கு இணையானதாகலாம். ஆனாலும் தீர்க்கதரிசனமாகாது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இந்த வரத்துக்கு எப்போதுமே பவுல் முக்கியத்துவம் கொடுப்பதைப் பார்க்கிறோம், ''விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்'' (1 கொரி 14:1) ''தீர்க்கதரிசஞ் சொல்லுகையில் அவிசுவாசியொருவன், அல்லது கல்லாதவனொருவன் உள்ளே பிரவேசித்தால் அவன் எல்லோராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான். அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்; அவன்முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்து கொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்'' (வ 24, 25). இப்படிப்பட்ட சம்பவங்கள் இன்று நம் சபைகளில் நடந்தால் தேவன் எவ்வளவு மகிமைப்படுவார்!

தீர்க்கதரிசனம் என்றால் என்ன என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவரால் தூண்டப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுவதுதான் தீர்க்கதரிசனம். பழைய ஏற்பாட்டு நாட்களில் தீர்க்கதரிசிகள் தேவனுடைய வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டு அதை நேரடியாக வெளிப்படுத்துபவர்களாகச் செயல்பட்டார்கள். தேவனுடைய வார்த்தையை அவர்கள் அப்பட்டமாகப் பேசினார்கள். பிலேயாம் இந்த அனுபவத்தைக் குறித்து சொல்லுகிறார். ''தேவன் என் வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன்'' (எண் 22:38).

தேவன் தீர்க்கதரிசிகளைக் குறித்து சொல்கிறார், ''என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்'' (உபா 18:18). ''இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்'' (எரே 1:9). ''நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன்'' (யாத் 4:12).

இவ்வாறு, பழைய ஏற்பாட்டு தீர்க்கத்தரிசிகள் 'கர்த்தர் உரைக்கிறார்' என்றும், 'தேவனுடைய வார்த்தை எனக்கு வந்தது' என்றும் தைரியமாகப் பேசினார்கள். அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட வார்த்தையை எழுதிவைக்கும்போது, அது பரிசுத்த வேதாகமத்தின் பகுதியானது. தீர்க்கதரிசன வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாதவர்களாகக் கருதப்பட்டு தண்டனை அடைந்தார்கள் (உபா 18:18-20,).

புதிய ஏற்பாட்டு நாட்களில் பல பரிசுத்தவான்கள் தேவனுடைய வார்த்தையைப் பேசி பிரசங்கித்ததுமட்டுமல்ல, புதிய ஏற்பாட்டு சுவிசேஷங்கள் மற்றும் நிருபங்களாக எழுதி வைத்தார்கள். ஆனால் இவர்கள் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படாமல் அப்போஸ்தலர்கள் என்று குறிப்பிடப்பட்டார்கள், (ரோமர் 1:1, 1 கொரி 1:1, 9:1-2, 2 கொரி 1:1, 11:12-13, 12:11-12, கலா 1:1 எபே 1:1, 1 பேதுரு 1:1, 2 பேதுரு 1:1, 3:2) புதிய ஏற்பாட்டு 27 புத்தகங்கள் தேவனுடைய வார்த்தைகள்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் தீர்க்கதரிசிகளாக குறிப்பிடப்படவில்லை.

அப்போஸ்தலருடைய நடபடிகளில் தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்ட அகபு என்ற மனிதனைச் சந்திக்கிறோம். ''அவன் உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்'' (11:28). மேலும் 21:11ல் அவர் ''பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக் கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டி புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார்'' என்கிறார்.

அகபுவை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியைப் போல தேவனுடைய வார்த்தையை நேரடியாக அறிவிப்பவராக எடுத்துக்கொள்ளாமல், எதிர்காலத்தைக் குறித்து தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒரு வெளிப்பாட்டை தன்னுடைய ஆவியில் பெற்றுக்கொண்டு, அதை தன்னுடைய ஆத்துமாவில் உணர்ந்து, அதன்பின் அதை அறிவிப்பவராக எடுத்துக்கொள்ளவேண்டும்,

இவ்வாறு பேசப்படும் புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு வேத வசனங்களுக்கு இணையான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியதில்லை.

இந்த நாட்களிலும் தேவன் தரிசனம் மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ ஒரு தீர்க்கதரிசியினுடைய மனதில் பதிக்கும் காரியத்தை அல்லது வெளிப்பாட்டை தன்னுடைய மூளை அறிவில் அவர் புரிந்து கொண்டு தன்னுடைய சொந்த வார்த்தையின் மூலமாக அறிவிக்கும்போது சில பிழையான காரியங்கள் அறிவிக்கப்படலாம்.

அகபு, எருசலேமில் உள்ள யூதர்கள் பவுலைக் கட்டி புறஜாதியினரிடம் ஒப்புவிப்பதாக அறிவிக்கிறார். ஆனால் யூதர்கள் அல்ல, ரோம சேவகர்களின் சேனாதிபதிதான் பவுலை இரண்டு சங்கிலிகளினால் கட்டுவிக்கிறார். (அப் 21:32,33 22:29) யூதர்கள் பவுலை கட்டுவிக்க எத்தனிக்கவே இல்லை. கொலை செய்யவே எத்தனித்தார்கள் (வ. 31) அகபு பேசினது தேவனுடைய வார்த்தை என்றால் இந்த தவறு வந்திருக்க முடியாதே!

நடந்தது என்ன? அகபு தரிசனத்தில் அல்லது தான் பெற்றுக்கொண்ட வெளிப்பாட்டில் பவுல் சிறைப்படுவதைப் பார்த்திருக்கவேண்டும். பவுலைச் சுற்றி யூதர்கள், ரோம சேவகர்கள், சேனாதிபதி நின்றிருப்பதையும், பவுல் சிறைக்குப் போவதையும் பார்த்திருக்கவேண்டும். இதினிமித்தம் யூதர்கள் பவுலைக் கட்டி புறஜாதியினரிடம் ஒப்புவிப்பார்கள் என்று அகபு அவராக தன்னுடைய மூளை அறிவை பயன்படுத்தி முடிவு செய்கிறார்.

இத்தகைய தவறு வரக்கூடாது என்பதினால்தான் பவுல் "தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக் கடவர்கள்," (1 கொரி 14:29) என்று ஆலோசனை தருகிறார். நிதானிப்பது என்றால் சொல்லப்பட்டவைகளில் அடங்கியிருக்கும் நன்மை தீமைகளை, குற்றம் குறைகளை கண்டு கொள்ளுதலாகும். ஏசாயா மூலமாக, அல்லது ஏரேமியா மூலமாக வெளிப்பட்ட தீர்க்கதரிசனங்களை நிதானிக்கும்படியாக யாரும் ஆலோசனை தருவார்களானால் அது தேவதூஷணமாகும். ஏனென்றால் அவை தேவனுடைய வார்த்தை.

புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் மனிதனுடைய ஆவியும் செயல்படுவதினால் தெய்வீக அதிகாரம் சற்று குறைகிறது. எனவே

"தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' (1 தெச 5:20,21) என்று சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் எந்த சத்தியத்தையும் சோதித்துப் பார்த்து அவைகளில் நலமானதை மட்டும் எடுத்துக்கொள்ள நமக்கு அனுமதி இல்லை ஆனால் புதிய ஏற்பாட்டு காலத்தில் வேதபுத்தகத்தில் எழுதப்பட்ட வேதவசனங்களை நீக்கி, புறம்மே வெளிப்படும் தீர்க்கதரிசனங்கள் நேரடியான தேவனுடைய வார்த்தைகளாக இராதபடியினால் நிதானம் அவசியமாகிறது.

தீரு பட்டணத்து சீஷர்கள் தீர்க்கதரிசனத்தின் மூலம் எச்சரிக்கப்பட்டவர்களாய் பவுலை நோக்கி: "நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள்" (அப் 21:4). ஆனால் பவுலோ பிரயாணத்தை நிறுத்தவில்லை. இது நேரடியான தேவனுடைய வார்த்தையாக இருந்திருந்தால் நிச்சயமாகவே பவுல் கீழ்ப்படிந்திருப்பாரல்லவா? எருசலேமில் பவுலுக்கு ஆபத்து காத்திருக்கிறது என்ற வெளிப்பாட்டை தீர்க்கதரிசிகளுக்குத் தேவன் கொடுக்கிறார். உடனே அவர்கள் பவுல் போகக் கூடாது என்று தங்கள் மூளை அறிவினால் முடிவு எடுக்கிறார்கள். அந்த ஆபத்தின் மூலமாக தேவ சித்தம் நிறைவேறவிருக்கிறது என்பதையோ பவுல் அறிவார். இப்படியாக தாங்கள் பெற்றுக்கொண்ட வெளிப்பாட்டின் நோக்கத்தை புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அறியாமலிருக்கலாம்.

'கர்த்தர் உரைக்கிறார்' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஒரு தடவை கூட சொல்லப்படவில்லை. புதிய ஏற்பாட்டின் எந்த பரிசுத்தவானும் இந்த வார்த்தையைப் பயன்படுத்தவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். தேவனுடைய வெளிப்பாட்டை மனிதன் தன்னுடைய ஆவியில் பெறுகிறான். அது அவனுடைய ஆத்துமாவுக்குள் (மனது, அறிவு, சித்தம்) பிரவேசிக்கிறது. ஆத்துமா சரீரத்தின் பேசும் அங்கமாகிய நாவுக்கு அந்தச் செய்தியை அறிவிக்க மனிதன் பேசுகிறான்.

இவ்விதமாக அறிவிக்கப்படும் தீர்க்கதரிசன வார்த்தைகளில் சிறிய தவறுகள் தோன்றிவிடுகிறது, ஏனென்றால் தீர்க்கதரிசனம் சொல்லுபவருடைய மனதில் உள்ள சொந்த எண்ணங்கள், விருப்பு வெறுப்புகள் அந்த வார்த்தையில் அவர் அறியாமலே பிரதிபலிக்க ஆரம்பிக்கின்றன. அதற்காக அவர்களை நாம் குற்றப்படுத்த வேண்டியதில்லை.

இருந்தாலும் புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தாங்கள் பெற்றுக்கொண்ட வெளிப்பாட்டை அறிவிக்கும் போது கர்த்தர் இவ்விதமாக சொல்லுவதுபோல் தெரிகிறது; கர்த்தர் இந்த காரியத்தை என் மனதில் தந்து அறிவிக்கச் சொல்லுகிறார் என்று பொதுப்படையாகச் சொல்லுவது பொருத்தமானதாயிருக்கும். தேவனுடைய இதயத்துடிப்பையும், அவருடைய மனதில் உள்ளவைகளையும் தீர்க்கதரிசிகள் அறிவிப்பதினால் அவர்கள் தங்கள் ஜெபவாழ்க்கையில் எப்போதும் தேவனுடன் ஐக்கியம் கொண்டிருப்பவர்களாக இருப்பது மிகவும் அவசியம்.

தேவாலயம் கட்டவேண்டும் என்ற விருப்பத்தை தாவீது தீர்க்கதரிசியாகிய நாத்தானிடம் அறிவித்தபோது "உம்முடைய இருதயத்தில் இருக்கிறதையெல்லாம் செய்யும், தேவன் உம்மோடு இருக்கிறார்," (1 நாளா 17:2) என்று பதில் சொல்லுகிறார். இது நாத்தானுடைய மனதிலிருந்து தோன்றிய வெளிப்பாடு. பலவேளைகளில் சிலர் தங்கள் சொந்தக் கருத்துக்களை தீர்க்கதரிசனமாகச் சொல்லி விடுவார்கள். ஆலயத்தை தாவீது கட்ட வேண்டாம் என்ற தேவனுடைய வார்த்தை (17:3,4) அந்த நாளின் இரவிலேயே நாத்தானுக்குக் கிடைக்கிறது.

ஒரு தீர்க்கதரிசி பேசுகிற வார்த்தையெல்லாம் தீர்க்கதரிசனமாகாது. அவை பரிசுத்த வேதாகமத்தோடு இணைந்திருக்கிறதா என்பதை சோதிப்பது, நிதானிப்பது, நம்முடைய கடமை. தேவன் முன்னுக்குப் பின் முரண்படப் பேசமாட்டார் (எண் 23:19). எனவே "நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1 யோவான் 4:1).

அதே நேரத்தில் தெளிவான, நமக்கு ஆறுதலையும், உற்சாகத்தையும், பரலோக வெளிப்பாடுகளுடன் தரக்கூடிய தீர்க்கதரிசன வரமுடையவர்களை இன்றும் தேவன் பயன்படுத்துகிறார் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். இவர்கள் பலருக்கு ஆசீர்வாதமாக இருக்கிறார்கள்.

கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறித்த எச்சரிக்கை வேதத்தில் பரவலாகக் காணப்படுகிறது. "அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத்தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக" (உபா 13:2,3). இந்த கடைசி நாட்களில் அந்திக் கிறிஸ்துவின் ஆவியை

உடையவர்கள் பல அதிசய, அற்புதங்கள் மற்றும் வெளிப்பாட்டு வரங்களை செயல்படுத்துவதைக் காண்முடிகிறது. சில சமயங்களில் அவர்களுடைய வார்த்தை நடவாமல் போகிறது. இதைக் குறித்து வேதம் சொல்கிறது "ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்பட வேண்டாம்" (உபா 18:22). இந்த நாட்களில் குறிசொல்லும் ஆவியை உடையவர்கள் புறமதங்களில் பிரபலமாகிவருவதைப் பார்க்கிறோம்.

புதிய ஏற்பாட்டு இன்றைய நாட்களில் தீர்க்கதரிசன வரம் வெளிப்படையாகப் பேசுவதேயொழிய எதிர்காலத்தை முன்னறிவிப்பதல்ல. சபை பக்திவிருத்தி அடையச் செய்வதற்க்கும், அறிவுறுத்துவதற்கும், ஆறுதலளிப்பதற்குமே இது பயன்படுத்தப் படவேண்டும். 1 கொரிந்தியர் 14:3 சொல்லுகிறது "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்."

சிலவேளைகளில் எதிர்காலத்தைப் பற்றிய குறிப்பு தீக்கதரிசனஞ் சொல்லுதலுக்குள் அடங்கியிருக்குமாயின், அறிவை உணர்த்தும் வசனம், ஞானத்தைப் போதிக்கும் வசனமாகிய வரங்களும் அதோடு இணைந்து செயல்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். இந்த வரத்தைத் தனிப்பட்ட வழிநடத்துதலுக்கு என்று எடுத்துக் கொள்ளும்போது ஞானத்தோடு அதை அறிந்து கொள்ளவேண்டும். எதிர் காலத்தைக் குறித்த வெளிப்பாடுகளோடு வந்தால் தேவன் நமக்கு தனிப்பட்ட முறையில் முன்பே காண்பித்த காரியங்களை உறுதிப்படுத்துவதற்கே தீர்க்கதரிசன வரம் பெற்றவர்களை தேவன் உபயோகிப்பார், நம்மோடு பேசிய ஒரு காரியத்தைத்தான் தேவன் ஒரு தீர்க்கதரிசி மூலமாக உறுதிப்படுத்துவார்.

## குணமாக்கும் வரங்கள்

வல்லமை வரங்களில் முதன்மையானது குணமாக்கும் வரங்கள், 'குணமாக்கும் வரம்' என்று ஒருமையில் வேதத்தில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. தேவைப்பட்டோருக்கெல்லாம் சுகத்தைக் கொடுக்கும்படியாக, எந்த நேரத்திலும் செயல்படும்வகையில் குணம் அருளப்படுவதினால் எப்போதுமே வரங்கள் என்று பன்மையில்தான் சொல்லப்பட்டிருக்கிறது (1 கொரி 12:9,28,30) பலதரப்பட்ட

வியாதிகளுக்கு பலவிதமான, குணமாக்கும் வரங்கள் தேவைப்படுகிறது.

சரீர சுகம் எல்லா மனிதர்களுக்கும் தேவன் தரக்கூடிய முக்கியமான ஆசீர்வாதம். இயேசுவின் ஊழியத்தில் மிகப் பெரும்பகுதியாக அவர் வியாதியஸ்தரை குணமாக்கிக் கொண்டு வந்தார் என்பதைப் பார்க்கிறோம். சீஷர்களுக்கு அவர் கொடுத்த முதல் கட்டளை இதுதான், ''வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள்'' (மத் 10:8).

குணமாக்குபவர் தேவன்தான். இந்த ஊழியத்தில் தேவன் யாரை கருவிகளாக உபயோகப்படுத்துகிறாரோ அவர்கள் தங்களைக் குணமாக்குபவர்களாக நினைத்துக் கொள்ளக் கூடாது. மாற்கு சுவிசேஷத்தின் கடைசி வசனம் சொல்லுவதுபோல ''கர்த்தர் அவர்களுடனே (சீஷர்கள்) கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.'' சொந்த பெயர் பிரஸ்தாபத்துக்காக அல்ல, வசனத்தை பிரஸ்தாபப்படுத்துவதே வரங்கள் வழங்கப்படுவதின் நோக்கம்.

ஆதாமின் பாவத்தினிமித்தமாகவே சரீர சுகவீனம், வியாதி, பெலவீனம், ஆரோக்கியமின்மை ஆகிய வாதைகளை மனிதன் அனுபவிக்கிறான். இவற்றின் விளைவாக சரீர மரணத்தையும் தேவனிடமிருந்து சாபமாக ஆதாம் பெற்றுக் கொண்டான். ஏசாயா 53:4,5 வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டபடி "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையிலே சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்'' (1 பேதுரு 2:24). நித்தியத்திலே நாம் எந்த வியாதியும் இல்லாமல் ஜீவிக்கப் போகிறோம், அதை இப்போதே நாம் உணர்ந்து கொள்ளும்படியாக சரீர சுகம் பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்றாக இப்போதே வழங்கப்படுகிறது.

ஆதி அப்போஸ்தலர்கள் கூடுதலாக செயல்படுத்திய வெளிப்படையான வரம் குணமாக்குதல்தான். சுற்றுப் பட்டணங்களிலிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும், அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள் (அப் 5:16). பேதுருவின் நிழல் பட்டவர்களும் சுகமடைந்தார்கள் (வ. 15). மெலித்தா தீவின் அதிபதியின் தகப்பன் காய்ச்சலினாலும் இரத்தபேதியினாலும்

வருத்தப்பட்டுக் கிடந்தான். பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம் பண்ணி, அவன் மேல் கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினார். இது நடந்த பின்பு, தீவிலே இருந்த மற்ற வியாதிஸ்தரும் வந்து குணமாக்கப்பட்டார்கள் (அப் 28:8,9). சுவிசேஷ நாட்களிலும் ஆதி அப்போஸ்தலருடைய காலங்களிலும் தேவனுடைய ராஜ்யம் வேகமாக பரவுவதற்கு ஒரு முக்கியமான காரணம் குணமாக்கும் வரங்களின் அபரிதமான செயல்பாடே ஆகும்.

கைகளை வைத்து குணமாக்குவது வழக்கமாக செய்யப்பட்டு வந்தது, "அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அவர் (இயேசு) தம்முடைய கைகளை வைத்து, அவர்களைச் சொஸ்தமாக்கினார்" (லூக்கா 4:40). "அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள் (மாற்கு 6:13) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சபையின் மூப்பர்கள் வியாதிப்பட்டவர்கள் மேல் எண்ணெய் பூசி விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது (எண்ணெய் பரிசுத்த ஆவியானவரின் உருவகங்களில் ஒன்று) ''விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்'' (யாக் 5:15). குணமாக்கப்படுதலில் விசுவாசம் பெரும் பங்கு வகிக்கிறது. வியாதியில் இருப்பவர்களுக்கும் விசுவாசம் தேவை (மத் 8:10,13, 15:28 லூக் 8:48, 17:19) கப்பர்நாகூமில் திமிர்வாதக்காரனைச் சுமந்து கொண்டு வந்தவர்களின் விசுவாசத்தைக் கண்டு (மாற்கு 2:5) இயேசு விடுதலையைக் கட்டளையிடுகிறார்.

குணமாக்கும் வரங்களின் செயல்பாடு, இந்த வரத்தைப் பெற்றவருக்கு எல்லா நேரங்களிலும் எல்லா விதமான வியாதிகளையும் சுகமாக்கும் வல்லமையைக் கொடுப்பதில்லை என்பதை முந்தின அத்தியாயத்தில் விளக்கமாகப் பார்த்தோம். எவ்விதமான இயற்கையின் அனுகூலமும் இன்றி தெய்வாதீனமான முறையில் பரிசுத்த ஆவியானவர் வியாதிகளையும், சரீரக்குறைபாடுகளையும் குணமாக்குகிறார். அவருடைய தீர்மானத்தின்படி யாருக்கு சுகமளிக்க விரும்புகிறாரோ அவரை சுகப்படுத்தும்படி தன்னுடைய ஊழியனுக்கு குணமாக்கும் வரங்களைக் கொடுக்கிறார்,

## அற்புதங்களைச் செய்யும் சக்தி.

''அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும்'' (எபி 2:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. மனிதர்களுடைய பயபக்தியையும்,

ஆச்சரியத்தையும் அதிசயிக்கத்தக்கதான முறையில் எழுப்பி தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்தும்படியாக தேவன் பலவேளைகளில் செயல்படுகிறார். இவ்வாறு தேவன் நேரடியான முறையில் இயற்கையின் போக்கில் தலையிடும்போது அற்புதம் சம்பவிக்கிறது.

அற்புதங்களைச் செய்யும் வரத்தை மனிதர்களுக்கு வழங்கும்போது தேவன் இயற்கையின் நியதிகளுக்கு எதிராகக் குறுக்கிட்டுச் செயல்படுகிறார். எகிப்தின் உபாதைகள் (யாத் 7) செங்கடல் திறக்கப்படுவது, (யாத் 14). சூரிய சந்திரன் தரித்து நின்றது (யோசுவா 10). எலியா அக்கினியை வருவித்தது (1 இரா 18). சூரிய கடிகாரம் பின்னிட்டுத் திரும்பியது (ஏசாயா 38:). இவைகளை பழைய ஏற்பாட்டு அற்புதங்களுக்கு உதாரணமாகச் சொல்லலாம். முற்றிலும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயலை மனிதன் மூலம் .தேவன் நடப்பிப்பதே அற்புதம்.

சுவிசேஷ நாட்களில் தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றியது. வனாந்திரத்தில் ஆயிரக்கணக்கானவர்களைப் போஷித்தது. காற்றையும் கடலையும் அடக்கியது போன்ற இயேசுவின் பலத்த கிரியைகள் அற்புதங்கள். அப்போஸ்தலருடைய நடபடிகளிலும் பெரிய அற்புதங்களைப் பார்க்கிறோம். பலவேளைகளில் சிறையில் அடைக்கப்பட்ட ஊழியர்கள் அற்புதமாய் விடுவிக்கப்படுகிறார்கள். (5:17:25, 12:1-17, 16:25-40).

பிலிப்பு காசா பட்டணத்திலிருந்து ஆவியானவரால் ஆசோத்துக்கு கொண்டுவரப்பட்டது (8:39.40). பவுல் பாம்பு கடித்தபின்னும் விஷத்தினால் பாதிக்கப்படாதிருந்தது (28:3-6) ஆகியவை அற்புதங்களே. அப்போஸ்தலர்களை விட இயேசுவை மாம்சத்தின்படி அறியாத பவுல் (2 கொரி 5:16) கூடுதலான அற்புதங்களைச் செய்கிறார் (அப் 19:11).

''அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது'' (அப் 5:12). ''அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டன'' (2 கொரி 12:12) ஆகிய சில வேத வசனங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு அற்புதங்களை நடப்பிக்கும் வரம் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே சொந்தமானது. எனவே அவர்கள் காலத்துக்குப் பின் அற்புதங்கள் நடைபெறுவதில்லை என்று சிலர் வாதாடுகிறார்கள்.

ஆனால் அப்போஸ்தலர் அல்லாத ஸ்தேவான் (அப் 6:8), பிலிப்பு (8:6,7) கலாத்திய சபையார் (கலா 3:5) கொரிந்து சபையார் (1 கொரி 12:10, 28) ஆகியோரும் அற்புதங்களை செய்ததை நாம் அறிவோம். பிசாசும் தன்னுடைய மந்திரவாதிகள், கள்ளப்போதகர்கள், தீர்க்கதரிசிகள் மூலமாக அற்புதங்களைச் நடப்பிக்கக்கூடும் என்பதினால் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

## விசுவாச வரம்

வேதாகமத்தில் நான்கு வகைகளில் விசுவாசம் சொல்லப் பட்டிருக்கிறது.

**பொதுவான விசுவாசம்:** இது விசுவாசிகள், அவிசுவாசிகள் எல்லாருக்கும் பொதுவானது. "அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவு" (ரோமர் 12:13) என்ற வசனம் இந்த பொதுவான விசுவாசத்தைக் குறிக்கிறது. இந்த விசுவாசம் இல்லாத மனிதனே கிடையாது. தான் கண்களால் பார்க்கிற, காதால் கேட்கிறதை ஆராய்ந்து நம்பும் அனுபவமே இந்த விசுவாசம். அவற்றை அவன் எளிதில் நம்பிவிடுகிறான். இந்த விசுவாசத்துக்கும் தேவன்மேல் வைக்கும் நம்பிக்கைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

**இரட்சிக்கும் விசுவாசம்:** "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்: இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு" (எபே 2:8). தேவனுடைய நித்திய ஜீவனைப் பெறுவதற்கும், பாவமன்னிப்புக்கும், தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் கல்வாரி மரணத்தின் மேல் ஒருவன் வைக்கும் நம்பிக்கையே இரட்சிக்கும் விசுவாசம். இயேசுகிறிஸ்துவைக் குறித்து-அவருடைய வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை ஒருவன் அறிந்து கொள்ளுவதினால் மட்டும் ஒருவன் இரட்சிக்கப்படுவதில்லை. "நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர்" (யோவான் 3:2) என்று அறிக்கையிட்ட நிக்கொதேமு அந்த நேரத்தில் இரட்சிக்கப்படவில்லை. அகிரிப்பா ராஜா தீர்க்கதரிசிகளை விசுவாசிப்பவன்தான் (அப் 26:27). ஆனால் இரட்சிப்பின் விசுவாசம் அவனில் காணப்படவில்லை.

**ஆவியின் கனியாகிய விசுவாசம்:** கலாத்தியர் 5:22ல் குறிப்பிடப்படும் இந்த கனி ஒரு மனிதனில் ஒரே நாளில் உண்டாவதில்லை. அனுதினமும், படிப்படியாக விசுவாசம் ஒரு

மனிதனில் வளர்ந்து கொண்டிருக்க வேண்டும். இதைக்குறித்துத்தான் "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும்," (லூக்கா 17:5) என்று அப்போஸ்தலர்கள் வேண்டிக் கொள்ளுகிறார்கள். இந்த விசுவாசம் ஒரு கிறிஸ்தவன் இயேசுவோடு நிலைத்திருப்பதினால் மட்டுமே உண்டாகிறது (யோவன் 15:5). "விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" (மாற்கு 9:23) என்று இயேசு சொல்லும்போது இந்த விசுவாசத்தையே குறிப்பிடுகிறார்.

**ஆவியின் வரமாகிய விசுவாசம்:** "வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசமும் ,,," (1 கொரி 12:9) என்று இந்த வரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆவியின் கனியாகிய விசுவாசத்தைப் போல் இல்லாமல் இந்த வரமாகிய விசுவாசம் ஒரு அத்தியாவசியமான சூழ்நிலையில் அல்லது ஒரு பயங்கரமான குழப்பத்தின் உச்சகட்டத்தில் திடீரென்று ஒரு மனிதனில் செயல்பட ஆரம்பிக்கும். அந்த நேரத்தில் அந்த மனிதன் முற்றிலுமாக தேவனுடைய வார்த்தையை நம்பி செயல்படுகிறான்.

பேதுரு கடலின் மேல் நடந்து வந்த நிகழ்ச்சியை யோசித்துப் பாருங்கள். இயேசு ஜலத்தின் மேல் நடந்து வருவதைக் கண்ட சீஷர்கள் ஏதோ ஒரு பிசாசு என்று பயந்து அலறுகிறார்கள். "இயேசு நான்தான், பயப்படாதிருங்கள்" (மத் 14:27) என்கிறார். ஒருவரும் செய்ய முடியாத ஜலத்தின் மேல் நடக்கும் அந்தச்செயலை, தான் செய்யவேண்டுமானால் அதை இயேசு ஆணையிட்டால்தான் முடியும். வேறு எந்த சக்தியாலும் தன்னைத் தண்ணீரில் நடக்க வைக்க முடியாது என்பதை அறிந்து பேதுரு அந்த ஆவேசத்தை (ஆவி) நோக்கி "நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்" (வ. 28) என்கிறார். இயேசு 'வா' என்றதும் விசுவாச வரம் பேதுருவில் செயல்படுகிறது. அவர் தண்ணீர்மேல் நடக்கிறார். நம்மால் இயற்கைக்கு மேற்பட்ட கிரியைகளை செய்ய முடியும் என்று விசுவாசிப்பதே இந்த வரத்தின் செயல்பாடு.

விசுவாச வரத்தின் மூலமாக மனிதர்கள் தங்களால் செய்ய முடியாத காரியத்தை எளிதாகச் செய்வார்கள். திக்குவாயும், மந்த நாவும் உள்ளவன் மகா திரளான ஜனத்தை வழிநடத்துவான். மீன்களைப் பிடிக்கவும் திறனற்றிருப்பவர்கள் மனிதர்களைப் பிடிப்பார்கள். "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி 4:13) என்றபடி பவுல் தேவன்பால் கொண்டிருந்த நம்பிக்கையே விசுவாச வரத்தின் அச்சாணி. விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய

(எபி 12:1) இயேசு கிறிஸ்துவை நோக்குவதே விசுவாசம். "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" (2 தீமோ 1:12) என்ற நிச்சயமே விசுவாச வரம்.

தேவன் நம்முன்பாக வைத்த ஒரு வேலையைச் செய்து முடிக்கத் தேவையான விசுவாசத்தை அவரே விசுவாச வரத்தின் மூலம் வழங்குகிறார். அந்த வேலை பெரிதாக இருக்கலாம். அல்லது சிறியதாக இருக்கலாம். ஆனால் தேவையான எல்லோருக்கும், தேவையான செயல்களைச் செய்யும்படியாக இந்த வரம் அருளப்படுகிறது. விசுவாசத்தின் வரம் ஒரு விசுவாசியினுள் நிலையாக தங்குவதல்ல. குறிப்பிட்ட நேரத்தில் இதன் மூலமாக தெய்வீக வல்லமை வெளிப்படுத்தப்படுகிறது.

எலியாவின் வாழ்க்கையில் அவர் யேசபேலுக்குப் பயந்து யூதாவை விட்டு ஓடிப்போய் சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, "கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்" என்று ஜெபித்தவர்தான் (1 இரா 19:3-5). இந்த பயந்த சுபாவமுள்ளவரிடம் விசுவாச வரம் செயல்படும்போது, துன்மார்க்க இராஜாவான ஆகாபிடம் நேரடியாகச் சொல்லுகிறார், "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும்" (17:1) சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்திருக்கும் போதோ விசுவாச வரம் அவருக்குத் தேவைப்படவில்லை. ஆனாலும் அங்கேயும் தேவன் மேல் விசுவாசமுள்ளவராய் இருந்தபடியால்தான் அவர் ஜெபிக்கிறார். விசுவாசம் வேறு, விசுவாச வரம் வேறு.

விசுவாச வரத்தின் விளைவாக அற்புதங்கள் நடக்கிறது என்றாலும் இது அற்புதங்கள் செய்யும் வரத்திலிருந்து வித்தியாசமானது. பல சந்தர்ப்பங்களில் இவை இணைந்து செயல்படுகின்றன. தரியு ராஜாவினால் சிங்கங்களின் கெபியிலே போடப்பட்ட தானியேல் (தானி 6:17-28) மறுவார்த்தை எதுவும் பேசவில்லை. தன்னைத் தப்பித்துக்கொள்ள எந்த முயற்சியும் செய்யவில்லை. அவர் பெற்றுக் கொண்ட விசுவாச வரத்தினால் இரவு முழுவதும் கெபியில் இருக்கிறார். அவரில் ஒரு சேதமும் காணப்படவில்லை (வ-23). சொல்லப்போனால் அந்த இரவு தூக்கமின்றி தத்தளித்துக் கொண்டிருந்தது தரியுதான் (வ-18). பசியாயிருந்த சிங்கங்களின் வாய் கட்டப்பட்டிருந்தது என்றால் அங்கே அற்புதமும் நடந்திருக்கிறது அல்லவா? விசுவாச வரம் செயல்பட்டதின் விளைவாகவே தாவீது இராட்சசன் கோலியாத்தை எதிர்த்து வருகிறார். (எபி 11:32,33).

விசுவாச வரம் ஒருவரில் செயல்படவேண்டும் என்றால் அவர் விசுவாச அறிக்கையிடவேண்டும் என்ற ஒரு உபதேசம் பரவலாகிக் கொண்டிருக்கிறது. எதிர்மறையாகப் பேசாமல் நன்மையான காரியங்களை மட்டும் பேசுவது... அதை வெளிப்படையாக அறிக்கையிடுவது நல்லதுதான். விசுவாச அறிக்கையாக கட்டளை கொடுக்கும் வார்த்தைகளை நாம் ஆவியினால் உந்தப்பட்டு பேசும்போது அவைகளை தேவன் தனது சொந்த வார்த்தையாக உறுதிப்படுத்துகிறார். இதன் விளைவுகள் உடனடியாக எப்போதும் காணப்படாவிட்டாலும், அவைகள் நிச்சயமானது.

ஆனால் ஏதோ ஒரு குறிப்பிட்ட முறையில், திறம்படப் பேசுவதினால் மட்டும் தேவனிடமிருந்து அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று நினைப்பது தவறு. நம்முடைய வெளிப்படையான பேச்சு அல்ல, சூழ்நிலைகள் எதிர்மறையாக இருந்தாலும் நம்முடைய இருதயத்திலிருந்து செயல்படும் விசுவாசமே தேவனை கிரியை நடத்தச் செய்யும். எப்போதுமே தேவன் நம்முடைய விசுவாசத்தைக் கனம்பண்ணுகிறார். இயேசுவை ஆச்சரியப்படுத்திய ஒரு காரியம் உண்டென்றால் அது மனிதனில் காணப்பட்ட விசுவாச குறைவுதான்.

## ஆவிகளைப் பகுத்தறிதல்

இனி தியானிக்கவிருக்கும் வெளிப்பாட்டின் வரங்கள் மூன்றுமே ஒரு காரியத்தைப் பற்றி ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய உலக அறிவினால் புரிந்து கொள்ள முடியாதிருக்கும் நிலைமையில் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து நேரடியான வெளிப்பாட்டைப் பெற்று அதை அறிந்துகொள்ளும் வல்லமையாகும். இவைகளின் உதவியால் அவன் தன்னை எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள முடிகிறது. தேவையுள்ளோருக்கு உதவ முடிகிறது. நன்றாக ஜெபிக்கமுடிகிறது.

ஒரு மனிதனில் செயல்படுவது பரிசுத்த ஆவியானவரா அல்லது அசுத்த ஆவிகளா அல்லது மனுஷ ஆவியா என்பதைக் கண்டு கொள்ளும் தெய்வீக திறமையே ஆவிகளைப் பகுத்தறியும் வரமாகும். மேலும் அசுத்த ஆவிகளில் பலவீனப்படுத்தும் ஆவி (லூக்கா 13:11), குறிசொல்ல ஏவுகிற ஆவி (அப் 16:16), ஊமையும் செவிடுமான ஆவி (மாற்கு 9:25), வஞ்சக ஆவி (1 யோவான் 4:6) என்று பல வகை உண்டு. ஆவிகளைப்பகுத்தறியும்போது எந்த ஆவி செயல்படுகிறது என்பதையும் கண்டு கொள்ளுகிறோம்.

இந்த வரத்தின் உதவியால் சில நடவடிக்கைகள், போதனைகள், பழக்கவழக்கங்கள் முதலானவற்றின் துவக்கத்தையும், அதைத் தூண்டிவிட்டது மனுஷ ஆவியா அல்லது பொல்லாத ஆவிகளா என்பதை கண்டு கொள்ள முடியும். ஆவிகளைப் பகுத்தறிதல் என்பது நாம் எண்ணுவதைவிட மிக முக்கியமான வரமாகும். பல பிரசங்கிமார்கள் இந்த நாட்களில் தங்கள் சொந்த ஆவியினாலும், வஞ்சிக்கும் ஆவிகளினாலும் வழிநடத்தப்பட்டு செயல்படுவதைப் பார்க்கிறோம்.

பொதுவாக பகுத்தறிதல் என்றால் நிதானித்து அறிதல், ஒரு காரியம் அல்லது வெளிப்பாட்டில் உள்ள நன்மை தீமைகளைக் கண்டுகொள்ளுதல் என்று பொருள். தீர்க்கதரிசனம் சொல்லப்படும்போது கூட நாம் அதை நிதானிக்கவேண்டும், (1 கொரி 14:29) என்று சொல்லப்பட்டிருப்பதினால் இந்த ஆவிகளைப் பகுத்தறியும் வரம் அந்த நிதானிக்கும் நேரத்தில் செயல்படவேண்டியதிருக்கிறது. எனவே இந்த வரம் ஆவிக்குரிய தீமையைத்தான் வெளிப்படுத்துகிறது என்று நாம் சொல்லாமல் ஆவிக்குரிய நன்மை என்ன என்பதையும் நமக்குச் சொல்லித்தரக் கூடும்.

பொதுவாக ஒரு மனிதனுக்குள் பிசாசு குடியிருந்து செயல்படுகிறதா என்பதைக் கண்டு கொள்ள பரலோகத்திலிருந்து வரம் அல்லது ஒத்தாசை தேவையில்லை. வெளிப்படையான கிரியைகளிலிருந்தும் அதை அறியலாம். பிசாசு பிடித்த மனிதன் கீழே விழுந்து புரண்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது (மாற்கு 9:20). பிசாசு பிடித்தவர்கள் கொடிய செயல்களைச் செய்கிறார்கள் (மத் 8:28). அசுத்த ஆவிகள் ஊழியர்களைக் கண்டு அஞ்சி நடுங்கும் (மாற்கு 1:24).

ஆனால் கடைசி நாட்களில் வஞ்சிக்கும் ஆவிகள் தங்கள் வேலைகளில் நூற்றுக்கு 99 சதவிகிதம் தங்களை வெளிப்படுத்தாமலே இரகசியமாக செயல்படுகின்றன. பிசாசு ஒளியின் தூதனாக தன்னைக் வெளிக் காட்டிக் கொண்டு செயல்படும்போது அவனைக் கண்டுகொள்வது எளிதானதல்ல. தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்குமளவு (மத் 24:24) பிசாசு தந்திரமாக வேலை செய்வான் என்ற இயேசுவின் எச்சரிக்கையை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கடைசி நாட்களில் சுவிசேஷத்துக்கடுத்த சத்தியங்களை திசை திருப்பி எத்தனை தவறான உபதேசங்களை பிசாசு சபைகளில் விதைத்திருக்கிறான் தெரியுமா?

ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தைப் பெற்றவன் மட்டுமே இந்த பிசாசின் வஞ்சகம், கள்ளப்போதகம் ஆகிய மோசடிகளிலிருந்து தன்னைத் தப்புவித்துக் கொள்ளமுடியும். ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செய்யும் போது எந்த உள்நோக்கத்தோடு செய்கிறான் என்பதை இந்த வரத்தையுடையவர் எளிதில் கண்டு கொள்ளமுடியும். ஒரு விசுவாசி அல்லது தீர்க்கதரிசி பரிசுத்த ஆவியின் உந்துதலினால் செயல்பட்டுக் கொண்டிருக்கலாம். அதே நேரத்தில் அவரிடமிருந்து வரும் வெளிப்பாட்டில் அவருடைய சொந்த யோசனைகள், எண்ணங்கள் விருப்பங்கள், ஆத்துமாவின் வாஞ்சைகள் எந்த அளவு கலந்திருக்கிறது என்பதை அவர் கண்டு கொள்வதில்லை. இந்த வரத்தைப் பெற்றவர் தன்னுடைய ஆவியில் இந்த கலப்படத்தை உடனடியாக உணர முடியும் (1 கொரி 14:29).

பரிசுத்த ஆவியின் அத்தனை வரங்களும் பரிசுத்தமானவைதான், ஆனால் அவைகளைக் கொண்டுவரும் கால்வாய்களான தீர்க்கதரிசிகள் வாழ்க்கையில் முழுமையான அர்ப்பணிப்பும் சுத்திகரிப்பும் இல்லை, எனவே எச்சரிக்கை தேவைப்படுகிறது.

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று அறிக்கையிட்ட பேதுருவை இயேசு பாராட்டுகிறார். ஆனால் தன்னுடைய பாடு மரணத்தை அவர் வெளிப்படுத்தும் போது பேதுரு "இது உமக்கு சம்பவிப்பதில்லை" என்கிறார், வெளிப்படையாக இயேசுவுக்கு நன்மையான காரியத்தை பேதுரு விரும்புவதாகக் காணப்பட்டாலும் அவருக்குள் இருந்து செயலாற்றிய பிசாசைப் பகுத்தறிந்த இயேசு "எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்," (மத் 16:15-23) என்கிறார்.

ஆவியைப் பகுத்தறியும் வரத்தினால்தான் முதல்முறையாக நாத்தான்வேல் தன்னிடம் வந்தபோது இயேசு அவரை "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்கிறார் (யோவன் 1:47).

"ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களில் மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்" (1 தீமோ 4:1) என்று எழுதப்பட்டிருக்கிறது. பிசாசின் வஞ்சனைகள் கடைசி நாட்களில் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அவன், "கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்"

(1 பேதுரு 5:8). சில இடங்களில் கரிஸ்மாட்டிக் அனுபவங்கள் என்ற போர்வையில் தன்னை மறைத்துக் கொண்டு, வேத வசனத்தில் தாகமாயிருக்கும் பலரை உண்மையான இரட்சிப்புக்குள் வரவிடாதபடி பிசாசு தடை செய்வதை இந்த நாட்களில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆவிகளைப் பகுத்தறியும் வரம் பலருக்கும் அருளப்பட்டு சத்தியத்தை எல்லோரும் கண்டுகொள்ள அதிக ஜெபம் தேவைப்படுகிறது.

சாத்தானுடைய ஆவியின் கிரியைகளை தேவனுடைய ஆவியின் கிரியைகளோடு பலவேளைகளில் குழப்பிக் கொள்கிறோம். தந்திரக்காரன், பொய்களின் தகப்பன், சர்ப்பம் என்று அழைக்கப்படும் பிசாசு வஞ்சகமாக, ஒளியின் தூதனாகச் செயல்படுகிறான். பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைப் போல தோன்றினாலும் அது செயல்படும் போது அவனுடைய போலித்தனம் வெளிப்படுகிறது. பிசாசின் ஆவியைப் பெற்ற மனிதர்கள் பாஷை பேசுகிறார்கள், தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள், அற்புதங்களை நடப்பிக்கிறார்கள், பேய்களின் நடவடிக்கை எப்போதுமே வெளிப்படையாகவும், கொடூரமாகவும், பொல்லாங்காயும் இருப்பதில்லை, ஆவிகளை பகுத்தறியும் வரத்தின் மூலம் அருளப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவு தெய்வீகத்துக்கும், சாத்தானுக்கும் மற்றும் மனுஷ ஆவிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை நாம் இனம் காண உதவுகிறது.

## ஞானத்தைப் போதிக்கும் வசனம்

1 கொரிந்தியரில் உள்ள வரங்களின் பட்டியலில் இந்த வரம் முதல் இடம் வகிக்கிறது. ''ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனமும் ... (12:8) எனப்படும் இந்த இரண்டு வரங்களும் வசனம் (logos) என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக இரண்டும் ஒன்றோடொன்று மிகவும் நெருக்கமான முறையில் இணைந்து செயல்படுகிறது.

வேறு எந்த வேதபகுதிகளிலும் இந்த வரங்களைக் குறித்து எதுவுமே சொல்லப்படவில்லை. பவுல் அப்போஸ்தலர் வெறுமனே வரத்தின் பெயரை மட்டும் குறிப்பிடுவதோடு நிறுத்திக்கொள்ளுகிறார் அதைக் குறித்து எந்த விளக்கத்தையும் கொடுக்கவில்லை. கொரிந்து சபையார் வேதத்தை நன்றாக அறிந்தவர்கள், ஆனபடியால்

ஞானத்தைக் குறித்து அவர்கள் அறிந்தவர்கள் என்று பவுல் நினைத்திருக்கலாம். ஞானத்தைப் போதிப்பது, புதிய விளக்கங்களை யாவரும் அறிந்து கொள்ளும்படியாக போதிக்கும் வசனமே இந்த வரமாகும்.

ஞானத்தைத் தன்னில் அடக்கிய புத்தகம் ஒன்று உண்டானால் அது வேதபுத்தகம்தான். ஞானம் என்ற எபிரேய வார்த்தை பழைய ஏற்பாட்டில் மட்டும் 146 தடவையும், புதிய ஏற்பாட்டில் அதற்கு இணையான கிரேக்க வார்த்தை 51 தடவையும் சொல்லப்பட்டிருக்கிறது. ஞானம் ஒரு வரமாகச் சொல்லப்படும்போது அது உலக ஞானம் அல்ல. ஏனென்றால் "ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன்" (1 கொரி 1:19) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இது அசுத்த ஆவிகளினால் செயல்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானமும் அல்ல, ஜோதிடர், குறிசொல்லுகிறவர்கள், அஞ்சனம் பார்க்கிறவர்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் ஞானம் அருவருப்பானது.

இது கல்வி அறிவின் மூலம் உண்டாகும் உலக ஞானமும் அல்ல, கல்வி ஞானம் நம் ஒவ்வொருவருக்கும் தேவைதான். இந்த ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் (யாக் 1:5) தேவனிடத்தில் கேட்கும்படியாக சொல்லப்பட்டிருக்கிறது. நாம் தியானிக்கும் ஆவிக்குரிய வரம் ஞானத்தின் வரமல்ல. ஞானத்தைப் போதிக்கும் வரம். இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு.

ஞானத்தைப் போதிக்கும் வரமோ ஒரு மனிதன் தெய்வீக ஞானத்தோடு பேசவும், செயல்படவும் உதவுகிறது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு மனிதன் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற ஞானம் திடீரென்று பரிசுத்த ஆவியானவரால் அற்புதமான முறையில் வழங்கப்படுகிறது. இது மனிதனுடைய கல்வி, அறிவுகூர்மை, விவேகம், திறமை அல்லது அனுபவத்தின் விளைவாக செயல்படுவதல்ல. நம்மை உருவாக்கியவரின் தெய்வீக ஞானத்தோடு, மனித ஞானம் இணையும்போதுதான் ஞானமாகிய வரம் செயல்படுகிறது. வேதம் சொல்லுகிறது "ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்து போகும்" (ஏசாயா 29:14). "உலகஞானமோ பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது" (யாக் 3:15).

உண்மையான ஞானம் எதில் அடங்கியிருக்கிறது? "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். பரிசுத்தரின் அறிவே அறிவு" (நீதி 9:10). ஞானத்தின் எதிர்பதம் மதிகேடு, ''தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்'' (சங் 14:1). மனிதனுடைய கிரியைகளிலுள்ள ஞானம் அது தேவனுடைய சித்தத்தோடு ஐக்கியம் கொள்ளும்போது மட்டுமே புலனாகிறது, சொல்லப்போனால் ஞானத்தின் உட்பொருள் கிறிஸ்துவே. அதனால்தான் நீதிமொழிகள் 8ல் ஞானமாக தேவன் உருவகப்படுத்தப்பட்டிருக்கிறார். ''அவருக்குள் (கிறிஸ்து) ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிற" (கொலோ 2:3). கிறிஸ்து தேவபெலனும், தேவ ஞானமுமாயிருக்கிறார், (1 கொரி 1:24).

இயேசுவின் ஒவ்வொரு வார்த்தையிலும் ஞானத்தைப் போதிக்கும் வசனமாகிய வரம் செயல்பட்டதைப் பார்க்கிறோம். கல்வி அறிவற்றவர்களும் விளங்கிக் கொள்ளும் படியாக பரலோக ராஜ்யத்துக்கடுத்த ஆழமான இரகசியங்களை அவர் போதித்தார், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அருளப்பட்ட மலைப்பிரசங்கத்தில் அடங்கியுள்ள தெய்வீக ஞானத்தின் ஆழத்தை இன்னும் முழுமையாக யாரும் அறிந்து கொள்ளவில்லை.

"சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களும்'' (தானி 1:3) மட்டுமே நேபுகாத்நேச்சாரால் அவனுக்கு ஊழியம் செய்ய தெரிந்து கொள்ளப்பட்டார்கள். இவ்விதமாக உலக கல்வி அறிவைப் பெற்றிருந்த மனிதனாகிய தானியேலின் சுய ஞானத்தால் ராஜாவினுடைய சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் கண்டுகொள்ள முடியவில்லை, இரவிலே ஒரு தரிசனத்தில் ஞானத்தைப் போதிக்கும் வசனம் மூலமாக மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது.

தானியேல் ஸ்தோத்தரித்துச் சொல்லுகிறார். ''ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது.... அவர் ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறார், அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்,,,, நீர் எனக்கு ஞானமும் வல்லமையையும் கொடுத்து நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால், உம்மைத் துதித்துப் புகழுகிறேன்" (தானி 2:20, 23).

இந்த வரத்தின் மூலமாகவே 4 வது அதிகாரத்தில் ராஜாங்கம் நேபுகாத்நேச்சாரை விட்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் அறிவிக்கிறார்.

எனவே, ஞானத்தைப் போதிக்கும் வசனம் ஒரு இயற்கையான ஞானமல்ல. அனுபவத்தினால் பெறும் ஞானமும் அல்ல. இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த கிருபையை பரிசுத்த ஆவியானவர் அவரது சித்தத்தின்படி ஒரு குறிப்பிட்ட தேவைக்கோ, நிலமைக்கோ ஏற்றபடி அளிக்கிறார்.

இவ்விதமாகத் தனக்கு அருளப்பட்ட ஞானத்தைப் போதிக்கும் வசனத்தின் மூலமாகவே பார்வோனுடைய கனவின் விளக்கத்தைக் கொடுத்ததோடு நிறுத்திக்கொள்ளாமல், பஞ்சத்தின் கொடுமையிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரு அதிகாரியை நியமித்து, பரிபூரண விளைச்சலின் நாட்களில் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை சேமிக்கும்படியான ஆலோசனையையும் யோசேப்பு தருகிறார்.

மோசே இந்த வரத்தை அதிகமாகப் பெற்றுக் கொண்டிருந்தபடியால்தான் முரட்டாட்டம் பிடித்த லட்சக்கணக்கான இஸ்ரவேலரை நாற்பது ஆண்டுகள் வழிநடத்த முடிந்தது. பல நேரங்களில் இயேசுவை ஆசாரியர்களும், பரிசேயர்களும் தந்திரத்தில் பிடிக்க முயற்சி செய்கிறார்கள். (மத் 21: 23-27, 22:15-22, 34-46). ஞானத்தைப் போதிக்கும் வரத்தை இந்த சூழ்நிலைகளில் இயேசு செயல்படுத்தினார் என்று பார்க்கிறோம்.

இந்த வரம் தன்னுடைய சீஷர்களுக்கும் அருளப்படும் என்பதை இயேசு இவ்விதமாகச் சொல்லுகிறார், ''ராஜாக்களுக்கு அதிகாரிகளுக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கப்படும் போது எப்படிப் பேசுவோம் என்றும் என்னத்தைப் பேசுவோம் என்றும், கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்'' (மத் 10: 19,20).

அப்போஸ்தலருடைய நடபடிகள் முழுவதிலும் இந்த வரம் கூடுதலாகச் செயல்பட்டது (அப் 4:7-21). பவுல் பிரயணம் செய்த கப்பல் புயல் காற்றினாலும் மழையினாலும் பாதிக்கப்பட்டபோது அவர் கப்பலாட்களுக்கும், நூற்றுக்கதிபதிக்கும் கொடுக்கும் ஆலோசனை (அப் 27:21-35) தெய்வீக ஞானத்தையே அடிப்படையாக கொண்டது.

ஞானத்தைப் போதிக்கும் வசனம் ஒரு மனிதன் மூலமாக, அல்லது ஊழியக்காரர் மூலமாகத்தான் வெளிப்படவேண்டும் என்பதில்லை. நாம் வேதத்தை வாசிக்கும்போது எதிர்பாராத முறையில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு வசனம் நமக்கு ஞானத்தைப் போதிக்கும் வசனமாக வெளிப்படலாம்.

அன்றாடக வாழ்க்கைக்கு பிரயோஜனமான முறையில் வேத புத்தகம் இவ்விதமாக நம்மை வழிநடத்தக்கூடும், அல்லது ஒரு கலந்துரையாடலின் போது ஒருவர் பேசும் வார்த்தை ஞானத்தைப் போதிக்கும் வசனமாக வெளிப்படலாம். தற்செயலாக நம்முடைய காதில் விழும் பேச்சிலிருந்தும் இந்த வசனம் வெளிப்படலாம். அதைப் பேசுபவர்கள் பொதுவாக அதன் முக்கியத்துவத்தை உணராமல் பேசினாலும் அதைப் பெற்றுக்கொள்பவர்கள் தேவ வழிநடத்துதலைப் பெறுவார்கள்.

## அறிவை உணர்த்தும் வசனம்

அறிவு என்று இங்கே சொல்லும்போது இயற்கையான மனித அறிவை நாம் குறிப்பிடுவதில்லை. இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சியின் மூலமாக மனிதனுடைய அறிவு படிப்படியாக வளர்ந்து ஒரு உச்ச கட்டத்தில் இருப்பதை நாம் அறிவோம்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை (ஆதி 2:17) புசித்த நாளிலேயே மனிதன் அறிவைப் பெற்றுக் கொண்டவனாகிறான். ஆனால் அவன் பெற்றுக்கொண்ட அறிவு நன்மையானதல்ல, தீமையானது. முதல் முறையாக அந்த நாளில் ஆதாம் வேதனையை அறிந்தான். பயத்தை அறிந்தான். குற்ற உணர்வை அறிந்தான். வெட்கத்தை அறிந்தான். இத்தகைய உலக அறிவு நம்முடைய மூளையை ஒருவேளை நிரப்பலாம். இருதயத்தை நிரப்ப முடியாது.

தேவனை அறிகிற அறிவே உண்மையான அறிவு. "ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம்; மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் (எரே 9:23,24).

இவ்விதமாக வேதத்தின் இரகசியங்களை அறிந்திருப்பவன், அந்த அறிவை மற்றவர்களும் விளங்கிக் கொள்ளும்படியாக, உணர்ந்து கொள்ளும்படியாக செயல்படுத்துவதே அறிவை உணர்த்தும் வசனம். வேத பாடங்களைக் கற்றுக்கொடுப்பவர்கள் இந்த வரத்தை உடையவர்களாயிருப்பது மிகவும் அவசியம்.

கொலை செய்வது, விபசாரம் செய்வது பாவம் என்ற அறிவை தாவீது ஏற்கெனவே உடையவராகத்தான் இருந்தார். ஆனாலும் அறிவை உணர்த்தும் வசனமாகிய வரத்தைப் பெற்றிருந்த நாத்தான் என்ற தீர்க்கதரிசி அவரிடம் வந்து ஒரு கதை மூலமாக அறிவை உணர்த்தின பிறகுதான் தன்னுடைய பாவம் என்ன என்பதை தாவீது அறிந்து மனந்திரும்புகிறார் (2 சாமு 12:1-9). இந்த வரத்தையுடையவர்கள் இந்த நாட்களில் சபைக்கு அதிகம் தேவைப்படுகிறார்கள்.

இந்த வரம் இயற்கைக்கு அப்பாற்பட்டது. மனித அறிவினால் அல்லது கண்டுபிடிப்பினால் பெற்றுக் கொள்ள முடியாத உண்மைகளை, உபதேசங்களை அல்லது வெளிப்பாட்டை ஆவியானவர் ஒரு மனிதனுக்கு அறிவிக்கும் போது இந்த வரம் செயல்படுகிறது. அறிவை உணர்த்தும் வசனம் என்பது தேவனுடைய பூரண அறிவில் ஒரு சிறு பகுதி மனிதனுக்கு, அவனுக்கு தேவைப்படும் நேரத்தில் வழங்கப்படுவதாகும்.

ஒருவருடைய பேச்சின் மூலம்தான் இந்த அறிவைப் பெற்றுக் கொள்ளுகிறோம் என்பதல்ல. அமைதியாக ஒருவர் தன் ஆவியில் இதை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். "தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது" (ரோமர் 11:33) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "கிறிஸ்துவுக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோ 2:3). இந்த ஞானத்தையும், அறிவையும் மனிதர்களாகிய நாம் பெற்றுக் கொள்ளுவது இந்த வரத்தின் மூலமாக மட்டுமே.

"என் ஜனங்கள் அறிவில்லாமையில் சங்காரமாகிறார்கள்," (ஓசியா 4:6) என்று தேவன் வேதனைப்படுவதைப் பார்க்கிறோம். எனவே அறிவை உணர்த்தும் வசனத்தை நாம் வேண்டும் போதெல்லாம் அவர் தந்து கொண்டிருக்கிறார். இந்த அறிவின் வார்த்தையை பரலோகத்திலிருந்து வரும் சத்தமான வார்த்தையிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளுவதில்லை. பொதுவாக நம்முடைய மனதில் ஏற்படும் சிந்தை மூலமாக வசனம் வெளிப்படுகிறது.

அதற்காக நம்முடைய எண்ணங்கள் எல்லாம் தெய்வீகமானவை என்று கருத முடியாது. தீர்க்கதரிசன வார்த்தைகளையே நிதானிக்கவேண்டும் என்று நாம் பார்த்தோம். அப்படியானால் மனதில் தோன்றும் வசனங்கள் இன்னும் கவனமாக நிதானிக்கப்படவேண்டும்.

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலையை வெற்றியாக செய்யும் படி, சபை பக்திவிருத்தியடையும்படி என்ற காரணங்களுக்காகவே வரங்கள் அருளப்படுகின்றன, (எபே 4:12). தனிப்பட்ட மனிதர்களை மகிமைப்படுத்தும்படியாகவோ, குறிப்பிட்ட ஊழியங்களை விளம்பரப்படுத்தவோ வரங்கள் உபயோகிக்கப்படுவதை தேவன் விரும்பமாட்டார்.

எல்லா விசுவாசிகளும் வரங்களைப் பெற்றவர்கள்தான். (ரோமர் 12:13, எபே 4:7, 1 கொரி 12:1) ஒருவனை தேவன் ஊழியத்துக்கு அழைக்கும்போது அவனுக்கு தேவையான வரங்களை தன் அழைப்பின் நோக்கத்தை நிறைவேற்றும்படியாக வழங்குகிறார். (1 கொரி 12:11, எபே 4:7). எனவே வரங்களில் வித்தியாசம் உண்டு. (ரோமர் 12:6, 1 கொரி 12:14) அதற்காக சில வரங்கள் முக்கியமானவை, சில முக்கியமானவை அல்ல என்று முடிவு செய்து விடக்கூடாது. (1 கொரி 12:14-26).

தேவன் அருளும் வரங்களை நாம் விசுவாசித்துப் பெற்றுக்கொள்ளவேண்டும். (கலா 3:2-5). தேவ ஊழியர்கள் நமக்காக ஜெபிப்பதின் மூலமாகவும் (1 தீமோ 4:14) வரங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

வரங்களை தேவன் அருளினாலும் அதை சரியானபடி பயன்படுத்துவது, அல்லது அதை வளர்த்துக் கொள்ளுவது நம்முடைய கடமையாகிறது. அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுல் "மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே" (1 தீமோ 4:14) என்றும் "நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல்முட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டிகிறேன்." (2 தீமோ 1:6) என்றும் ஆலோசனை தருகிறார்.

# 11

## ஆவியின் கனி

"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்." (கலா 5:22,23) வரங்களை எப்போதுமே பன்மையில் குறிப்பிடும் பவுல் ஆவியின் கனி 'அன்பு' என்று ஒருமையில் சொல்லுவதின் காரணம் அன்பு மற்ற எல்லா கனித் தன்மைகளையும் உள்ளடங்கியது.

இந்த ஒன்பது தன்மைகளையும் ஒட்டு மொத்தமாக ஒரு மனிதனில் உருவாக்குவதே அவனுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான பணி. சிலவற்றை மட்டும் உருவாக்கிவிட்டு மற்றவைகளை அவர் விலக்கிவைப்பதில்லை. பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப் படும்போது (ரோமர் 5:5). சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவைகளும் நம்முடையதாகிவிடும்.

தன்னுடைய பிள்ளைகள் கனிகொடாத மலட்டுத்தன்மையுடன் காணப்படுவதை தேவன் விரும்பமாட்டார். ஆவியின் கனியாகிய அன்பு ஒரு மனிதனில் காணப்படாத நிலைமையில் அவன் எத்தனை வரங்களைப் பெற்றவனாக இருந்தும் அதில் எந்த பிரயோஜனமும் கிடையாது.

ஒருவன் அந்நிய பாஷை பேசலாம். தீர்க்கதரிசனம் சொல்லலாம். சகல அறிவையும் உடையவனாக இருக்கலாம். பலத்த விசுவாசத்தை உடையவனாக இருக்கலாம். தான தர்மம் பண்ணுகிறவனாக இருக்கலாம். தன்னையே தியாகம் பண்ணுகிறவனாக இருக்கலாம். ஆனால் அவனிடம் அன்பு இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம் என்று பவுல் சொல்லுகிறார். (1 கொரி 13:1-3).

இந்த வசனத்திலிருந்து நாம் காணும் துக்கமான காரியம் என்னவென்றால் உண்மையான அன்பு இல்லாத முறையில் வல்லமை ஊழியங்களை வரங்களோடு செயல்படுத்த முடியும் என்பதுதான்.

ஒரு மனிதன் தன்னுடைய சுய முயற்சியால் இந்த நற்பண்புகளைத் தன்னில்தானே உருவாக்க முடியாது. கனி கொடுப்பது எப்படி என்று மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் அல்லது பயிற்சி கொடுக்கவும் முடியாது. தனக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் ஒருவன் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்போது அவன் கனி கொடுக்க ஆரம்பிக்கிறான்.

இயேசு சொல்லுகிறார் ''என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்'' (யோவான் 15:4,5). ''நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்'' (15:8).

கிறிஸ்துவுடன் இணைந்து, "இனி நானல்ல, கிறிஸ்துவே" (கலா 2:20) என்னும் ஆழமான ஆவிக்குரிய உன்னத அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவன் மட்டுமே கனி கொடுக்கிறான். கனிகளை உருவாக்கும்படியாக நாம் அழைக்கப்படவில்லை. ஏனென்றால் நம்மால் கனிகளை உற்பத்தி செய்யமுடியாது. ஆவியானவரின் அகத்தூண்டுதலினால் எழுதப்பட்ட வேதபுத்தகத்தை இரவும் பகலும் தியானிக்கிற மனிதன் நீர்க்கால்களாகிய பரிசுத்த ஆவியானவரில் நடப்பட்ட மனிதனாக தன் காலத்தில் தன் கனியைத் தருகிற மரத்துக்கு ஒப்பாயிருக்கிறான் என்பதை சங்கீதம் 1ல் பார்க்கிறோம். அவரில் நிலைத்திருக்கும் போது கனி உண்டாகிறது.

"ஆவியின் கனி சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்கும்'' (எபே 5:9). இது தானாக வருவதில்லை. அதனால்தான் பவுல் ஜெபிக்கிறார். ''இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும், இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்'' (பிலிப் 1:10,11). ''சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடையவேண்டும்'' (கொலோ 1:10) என்பதே ஒவ்வொரு விசுவாசிகளையும் குறித்த பவுலின் எதிர்பார்ப்பு.

கனி கொடாதவர்களின் நிலமை மிகவும் பரிதாபமானது என்பதை பல வேதவசனங்கள் நிரூபிக்கின்றன. "கோடரியானது மரங்களின் வேர்

அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்." (மத் 3:10). என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் (பிதா) அறுத்துப்போடுகிறார். கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்." (யோவான் 15:2).

சுத்தம் பண்ணுவது என்பது தேவனிடத்திலிருந்து அவருடைய பிள்ளைகள் பெறும் சிட்சையைக் குறிக்கிறது. "நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும், கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது, கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்" (மத் 7:17-19).

கெட்ட கனிகள் என்று இயேசு எவைகளைக் குறிப்பிடுகிறார் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஆவிக்குரிய உலகத்தில் பரிசுத்த ஆவியானவர் செயல்படுவதைப் போலவே, போலியான முறையில் அசுத்த ஆவிகளும் பலகிரியைகளை நடத்திக்கொண்டே இருக்கிறதைப் பார்க்கிறோம். நல்ல இனிப்பான ருசியான கனி கொடுக்கும் மரங்களும் உலகில் உண்டு. புளிப்பான, சுவையற்ற கனிகளைக் கொடுக்கும் மரங்களும் உண்டு.

கலாத்தியர் 5:19-21 கெட்ட கனிகளின் பட்டியல் தரப்பட்டிருக்கிறது, அவையாவன - விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், இவைகளை இனம் கண்டு கொள்வது கடினமல்லவே.

ஒருவனுடைய கனி நிறைந்த வாழ்க்கையிலிருந்துதான் அவன் தேவனோடு கொண்டிருக்கும் ஐக்கியம் வெளிப்படுகிறது. முதல் மூன்று கனித்தன்மைகளான அன்பு, சந்தோஷம், சமாதானம் ஆவிக்குரிய ரீதியில் தேவனுக்கும் அவனுக்குமிடையே உள்ள உறவை வெளிப்படுத்தும். நீடிய பொறுமை, தயவு, நற்குணம் ஆகிய மூன்றும் ஒருவன் தன்னுடைய அயலானுடன் வைத்திருக்கும் உறவின் அடிப்படையில் வெளிவருபவை. இறுதியாக விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய கனித்தன்மைகள் அவனுடைய உள்ளான ஆவிக்குரிய நிலை என்ன என்பதைக் காட்டுகிறது.

ஆவியின் கனி என்ற வார்த்தை இக்கனியை நாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில், நாம் விளங்கிக்கொள்ள முடியாத நிலையில் பரிசுத்த ஆவியானவரிடமிருந்துப் பெற்றுக்கொள்ளுகிறோம் என்பதை நிரூபிக்கிறது. இந்த தெய்வீகத் தன்மைகள் மாம்ச மனிதனில் காணப்படுவதில்லை. தேவ சாயலில் உருவாக்கப்பட்ட மனிதன் பாவத்தின் விளைவாக அந்த தேவ சாயலை இழந்ததுபோல் காணப்படுகிறான். ஆவியானவர் மறுபடியும் பிறந்த மனிதனுக்குள் வாசம் செய்து, கனிகளை உருவாக்கி, அந்த தேவ சாயலை மீண்டும் அவனுக்குள் உறுதிப்படுத்துகிறார்.

ஒரு மரத்தில் கனி திடீரென்று, ஒரே நாளில் உருவாகுவதில்லை. இயற்கையான முறையில் மரம் வளர்ந்து, மொட்டு, பூ, காய், கனி என்று படிப்படியாக அது உண்டாகவேண்டியதிருக்கிறது. கனி உருவான பிறகும் அது ருசியுள்ளதாக கனிந்த நிலையை அடைவதற்கு பல நாட்களாகிறது. இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனுக்குள் உடனடியாக ஆவியானவர் ஒரு நல்ல கனிதரும் மரத்தின் விதையை ஊன்றிவிடுகிறார் என்றாலும், அது வளர்ச்சியடைய பல வருடங்கள் ஆகிறது. எனவே நம்மில் நற்கனி உண்டாக பொறுமையோடு காத்திருக்கவேண்டியது அவசியம்.

## அன்பு

கிறிஸ்துவில் நிலைத்திருப்பவனே கனி கொடுக்க முடியும் என்பதைப் பார்த்தோம். "தேவன் அன்பாகவே இருக்கிறார், அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" (1 யோவான் 4:16). தேவன் அன்புடையவராய் இருக்கிறார். அன்பு செலுத்துகிறார் என்று மட்டும் வேதம் சொல்லவில்லை. தேவன் அன்பாகவே இருக்கிறார்.

"தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்தில் அனுப்பிவைத்ததினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது." (4:8,9) தேவன் அன்பாயிருக்கிறார் என்பது உண்மையானால் அன்பைவிட விலையேறப்பெற்றது எதுவும் உலகத்தில் இருக்கமுடியாது. எனவே நம்மிடமிருந்து வெளிப்படும் அன்பு மட்டுமே நம்மை தேவனோடு இணைக்கிறது என்று சொல்லமுடியும். அதுவே நம்முடைய தேவசாயலை உறுதிப்படுத்துகிறது.

அன்பு என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும் என்றால், நம் கண்களுக்கு முன் கல்வாரியைக் கொண்டுவர வேண்டும். "நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

கல்வாரியில் நம்முடைய பாவங்கள் இயேசுவின் மேல் சுமத்தப்பட்டன, அவருடைய நீதி நமக்கு வழங்கப்பட்டது. தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூரக்கடனாளிகளாயிருக்கிறோம்" (வ.10,11). "அன்பில்லாதவன் தேவனை அறியான்" (வ.8).

அன்பின் ஊற்று தேவன். நாம் தேவனையோ அல்லது நம்முடைய அயலாரையோ நேசிக்கிறோம் என்றால் தேவ அன்பு நம்மில் செயல்படுகிறது என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது" (ரோமர் 5:5). தேவனால் கொடுக்கப்படும் எல்லா கிருபைகளிலும் அன்பே பிரதானமானது (1 கொரி 13:13). "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (ரோமர் 13:10) என்று பவுல் சொல்லுவதினால் சீனாய் மலையில் வழங்கப்பட்ட 613 கற்பனைகளுமே அன்பை அடிப்படையாகக் கொண்டது என்பதை அறிந்துகொள்ளலாம்.

புதிய ஏற்பாட்டு நாட்களிலும் அன்புதான் புதிய கட்டளையாக இயேசுவால் வழங்கப்பட்டது. "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" (யோவான் 13:34,35). நாம் ஜெபிப்பதைப் பார்த்து, உபவாசிப்பதைப் பார்த்து, ஊழியங்கள் செய்வதைப் பார்த்து நம்மை உலகம் இயேசுவின் சீஷர்களாக அறிந்துகொள்ளாது. நம்மிடமிருந்து கிறிஸ்துவின் அன்பு வெளிப்படுகிறதா என்பதை உலகம் கவனிக்கும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நித்திய ஜீவனை உடையவர்களாக இருக்கிறோம் என்பதற்கு சான்றாக விளங்குவது நம்முடைய

அன்புதான். "நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான்" (1 யோவன் 3:14).

நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்ற கேள்விக்கு இயேசு இவ்விதமாக பதில் சொல்லுகிறார். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும், தீர்க்கத்தரிசனங்களும் அடங்கியிருக்கிறது" (மத் 22:37-39).

இரண்டாவது பிரதான கற்பனையில் "உன்னிடத்தில் அன்பு கூரு என்ற மூன்றாவது கற்பனை உள்ளடங்கியிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். ஏனென்றால் தன்னைத்தானே நேசிக்காத ஒருவன் மற்றவர்களை நேசிக்க மாட்டான். நாம் பிதாவின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். நமக்காகவே இயேசு கல்வாரியில் மரித்தார். நமக்குள் ஆவியானவர் வாசமாயிருக்கிறார். எனவே நம்மேல் நாம் அன்பு செலுத்துவது தவறில்லை.

## சந்தோஷம்

ஆவியின் கனியான சந்தோஷம் உலகம் கொடுக்கும் சந்தோஷத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. ஏனென்றால் இங்கே தேவ அன்பில் நிலைத்திருக்கும் ஒரு மனிதன் பரிசுத்த ஆவியானவரின் சந்தோஷத்தை தன்னிலிருந்து வெளிப்படுத்துகிறான்.

இயேசு சொல்லுகிறார் "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 15:10,11). இதுவே ஆவியின் கனியாகிய சந்தோஷம். நெகேமியா சொல்லுகிறார், "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்" (8:10).

“கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்” (பிலிப் 4:4). “எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்” (1 தெச5:16). “கர்த்தருக்குள் மகிழ்ந்து களி கூருங்கள்” (யோவேல் 2:23). “இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும், சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங்கடவர்கள்” (சங் 149:2).

“கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன், என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது” (ஏசா 61:10) என்று யாரும் சொல்லக்கூடுமானால் அது எதைக் காட்டுகிறது? தன்னுடைய வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது (ரோமர் 8:28) என்ற நம்பிக்கை அவர்களிடம் இருக்கிறது என்பதைக்காட்டுகிறது. இந்த நம்பிக்கையும் கிறிஸ்துவுக்குள் மன மகிழ்ச்சியும் இல்லாத நிலமையில், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று ஒருவன் சொல்லுவது ஒரு பெரிய மாய்மாலமாகும்.

## சமாதானம்

இயேசுவே “நம்முடைய சமாதான காரணர்” (எபே 2:14). அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார் (வ.17). எனவேதான் அவர் தன்னுடைய சீஷர்களிடம் “சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்.” (யோவான் 14:27) என்று அறிவித்தார்.

உலகம் கொடுக்காத, உலகத்தால் எடுத்துக்கொள்ள முடியாத (யோ 14:27) தெய்வீக சமாதானம் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. “எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” என்று பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார் (பிலிப் 4:7). கிறிஸ்து பிறக்கும்போதே பூமியிலே சமாதானம் (லூக்கா 2:14) வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய சமாதானம் தேவன்மேல் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. “கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். நான் தாழ்ச்சியடையேன்” (சங் 23:1) என்ற நம்பிக்கை இருக்குமானால், எந்த சூழ்நிலையிலும் நாம் சமாதானத்தை இழக்கமாட்டோம். காகங்களையும் போஷித்து பிழைப்பூட்டும் தேவனை நாம் நம்பும்போது தாவீதோடு சேர்ந்து நாமும் இவ்விதமாகச்

சொல்லமுடியும். "சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன். கர்த்தாவே, நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்" (சங் 4:8).

## நீடிய பொறுமை

பிதாவாகிய தேவன் நீடிய பொறுமையுள்ளவர் (லூக்கா 18:7). அவர் "இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர், அக்கிரமத்தையும், மீறுதலையும், பாவத்தையும் மன்னிக்கிறவர்" (யாத் 3:6,7) என்று தன்னை மோசேக்கு அறிமுகப்படுத்துகிறார். தாவீது சொல்லுகிறார், "ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுள்ள தேவன்" (சங் 86:15). அவருடைய நீடிய பொறுமையினிமித்தமே நாம் பிழைத்திருக்கிறோம் (2 பேதுரு 3:9). அதனால் பேதுரு அறிவிக்கிறார், "கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்" (3:15). நீடிய பொறுமையினிமித்தமே தேவன் நம்மேல் நீதியின்படி காட்டவேண்டிய கோபத்தை நிறுத்திவைக்கிறார்.

தேவ சுபாவமாகிய நீடிய பொறுமை கிறிஸ்தவர்கள் எல்லோருக்குமே அருளப்பட்டிருக்கிறது (கொலோ 1:11). பொறுமை அன்போடு இணைக்கப்பட்டிருப்பதினால் பவுல் சொல்லுகிறார் "உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கெள்ளுங்கள்" (3:12-14). "மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (எபே 4:2,3). ஆபிரகாம் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றது போல (எபி 6:15) நாமும் "கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருக்க" (யாக் 5:7) அழைக்கப்பட்டிருக்கிறோம்.

யோபு நீடிய பொறுமையுடையவர் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய வாழ்க்கையிலிருந்து மற்றவர்கள் நமக்கு எரிச்சலூட்டுவதையும், நம்மைத் துன்புறுத்துவதையும், அவர்களின் குறைகளையும் பொறுமையோடு நீண்ட காலம் சகித்தலே நீடிய பொறுமை என்று சொல்லமுடியும்.

## தயவு

''கிறிஸ்துவின் சாந்தத்தையும், தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்'' (2 கொரி 10:1) என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். இயேசு எவ்வளவு தயவு நிறைந்தவர் என்றால் அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போல சத்தமிடாமல், வாயைத் திறவாமல் (ஏசா 53:7) பாடுகளை அனுபவித்தார். தயவு என்ற கனியை நாம் பெறும்போது "ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய், எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக் (தீத்து 3:2) காட்டுகிறவர்களாக தேவன் நம்மை மாற்றுகிறார். இதினிமித்தம் இயேசுவை பிரதிபலிக்கிறவர்களாக மாறுகிறோம். தயவு நிறைந்த ஊழியக்காரர் எப்படி இருப்பார். ''அவர் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்'' (2 தீமோ 2:24).

## நற்குணம்

தேவனுடைய நற்குணத்தினிமித்தம் மனிதன் பெற்றுக்கொள்ளும் நன்மைகளைக் குறித்த ஆயிரக்கணக்கான சாட்சிகளை வேதத்தில் பார்க்கிறோம். "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்" (சங் 23:6). நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்'' (27:13) என்ற தாவீதினுடைய அறிக்கைகளைக் கவனியுங்கள்.

தேவன் நீதியுள்ளவர் என்பது மட்டுமல்ல, அவர் நல்லவராயும் இருக்கிறார். தன்னுடைய நீதியினிமித்தம் அவர் நம்மைத் தண்டிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தாலும், தன்னுடைய நற்குணத்தினிமித்தம் தயை உள்ளவராக இருக்கிறார். ''சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் நல்லவராகவே

இருக்கிறார்'' (சங் 73:1). ''அவர் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது'' என்று (106:1) சங்கீதக்காரன் சொல்லுகிறார். "ஆண்டவரே நீர் நல்லவரும் மன்னிக்கிறவரும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்" (சங் 86:5) நாமும் "நற்குணத்தினால் நிறைந்தவர்களாகும்படி" (ரோமர் 15:14) பவுல் ஆலோசனை தருகிறார்.

வேதத்தில் நற்குணங்கள் நிறைந்த மனிதன் ஒருவர் உண்டென்றால் அது யோசேப்பு. தனக்குக் கெடுதல் செய்தவர்களுக்கும் ஒரு ஆசீர்வாதமான பாத்திரமாக அவர் செயல்பட்டார் அல்லவா. அடுத்ததாக தானியேல். அவருடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால், நான்கு புறஜாதி ராஜக்களிடம் பொறுப்பான பெரும் பதவி வகித்தும் எந்த குறையும் அவரிடம் காணமுடியவில்லை.

## விசுவாசம்

"நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோ 1:12) என்ற பவுலின் அறிக்கை தேவனைக் குறித்து அவர் கொண்டிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. தேவனுடைய வார்த்தையை ஒரு சிறு குழந்தையைப் போல் நம்பி ஏற்றுக்கொள்வதே விசுவாசமாகிய கனி, ஏனென்றால் தேவனும் தேவனுடைய வார்த்தையும் ஒன்றுதான். (யோவன் 1:1).

விசுவாசம் ஒரு கனியாகச் சொல்லப்படும்போது பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனுக்குள் வாசம் செய்வதின் விளைவாக வெளிப்படுவதாக இருப்பதினால் இது நம் இரட்சிப்புக்கு மூலகாரணமாக விளங்கும் விசுவாசம் அல்ல. அல்லது வல்லமையான கிரியைகளை விசுவாசிகள் செய்ய உதவி செய்யும் விசுவாச வரமும் அல்ல,

மறுபடியும் பிறந்த பின்பும் நமக்கு விசுவாசம் - தேவன் மேல் நம்பிக்கை அனுதினமும் தேவைப்படுகிறது. "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோ 5:4). இந்த விசுவாசம் நமக்குள் இருந்து உருவாகிறது.

இவர்கள் கிறிஸ்தவர்கள். எனவே இவர்களை நம்பலாம். இவர்கள் சொல்லுவதைச் செய்வார்கள். மாய்மாலமாக இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையை உலக மக்கள் பெறவேண்டும் என்பதற்காகவே இந்த கனி வழங்கப்படுகிறது. நமக்கு ஒப்புவிக்கப்பட்ட பொறுப்புகளையும் கடமைகளையும் உண்மையுள்ளவர்களாய் நடப்பிக்கும் போது இந்த கனியை புறஜாதியினரும் நம்மில் காண்பார்கள். சபைகளை நடத்தும்போதும், ஊழியங்கள் செய்யும்போதும் அதின் கணக்குகளில் உண்மை தேவை. வெளியரங்கம் தேவை.

விசுவாசத்தினாலே நாம் கிறிஸ்துவ வாழ்க்கையில் நிலைநிற்கிறோம். (2 கொரி 1:24). நடக்கிறோம் (2 கொரி 5:6). நல்ல போரட்டத்தை போராடுகிறோம் (1 தீமோ 6:2). அதே விசுவாசத்தினாலே நாம் பிழைக்கிறோம் (ரோமர் 1:17).

## சாந்தம்

சாந்தகுணம் என்பது மனத்தாழ்மையையும் பழிவாங்காத தன்மையையும், எதிர்ப்பற்ற அமரிக்கையையும் குறிக்கிறது. செப்பனியா சொல்லுகிறார் ''அவரைத் தேடுங்கள், நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்'' (2:3).

''துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும், ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய், எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு.'' (தீத்து 3:1,2) என்று பவுல் எழுதியிருக்கிறார். ''உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக் கடவன்'' என்று யாக்கோபு (3:13) ஆலோசனை தருகிறார்.

கிறிஸ்து தன்னை ''சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்'' (மத் 11:29) என்று குறிப்பிடுகிறார். ''சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது'' (1 பேதுரு 3:4) என்று பேதுரு ஆலோசனை தருகிறார். சாந்த குணத்துக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு மோசே (எண் 12:3). தனக்கு விரோதமாகப் பேசிய

மிரியாமை தேவன் வாதிக்கும் போது "என் தேவனே, அவளைக் குணமாக்கும்'' (வ.13) என்று வேண்டுமளவுக்கு அவர் சாந்தகுணமுள்ளவர்.

## இச்சையடக்கம்

"பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்'' (1 கொரி 9:25) என்று இந்தக் கனியின் முக்கியத்துவத்தை பவுல் வெளிப்படுத்துகிறார், இச்சையடக்கமுள்ளவர்களே சபையின் மூப்பர்களாக பணிசெய்ய முடியும் (தீத்து 1:7-9).

பத்துக்கற்பனை நாட்களிலேயே இச்சிப்பது தேவனுக்கு விரோதமான பாவமாக அறிவிக்கப்பட்டது (யாத் 20:17) என்றால் கிருபையின் நாட்களில் வாழும் நாம் எவ்வளவு இச்சையடக்கம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். பிறனுக்குச் சொந்தமான பொருளைத் திருடி எடுத்து கொள்வதுதான் பாவம் என்பது அல்ல, அதை இச்சிப்பதும், அதாவது அதன் மேல் ஆசை வைப்பதும் பாவமாகிறது,

கனிகள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை என்பதை 2 பேதுரு 1:5-7ல் பார்க்கிறோம். "அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்." கனிகளின் பட்டியல் அன்பில் பூரணப்படுவதைக் கவனியுங்கள்.

பரிசுத்தமான தேவன் தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஜனங்கள் நீதியும் பரிசுத்தமும் நிறைந்த வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்புவது மாத்திரமல்ல, அப்படி அவர்கள் வாழும்படியாக அவர்களுக்கு வேண்டிய தெய்வீக பெலனை ஆவியின் கனி ரூபத்தில் பரிசுத்த ஆவியானவர் மூலம் வழங்குகிறார். பிதாவாகிய தேவன் தன்னுடைய பிள்ளைகளும் அவருடைய சுபாவத்தைக் கொண்டவர்களாய், அவரைத் தங்களுடைய அன்றாடக வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டுமென்று

விரும்புகிறார். இந்த சாயலை ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் உருவாக்கும்படியாகவே பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வாசம் செய்கிறார்.

## கனிகளும் வரங்களும்

இயேசு "அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற் போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது என்றார்; உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று" (மத் 21:19).

"நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்'' என்று யோவான் ஸ்நானன் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார் (மத் 7:19).

இயேசு தேடிப்போன அத்திமரத்தில் "இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை'' (மாற்கு 11:13). எனவே அவர் சபித்ததின் விளைவாக மறுநாளே அது பட்டுப்போயிற்று (வ. 20).

ஒரு மனிதன் எத்தனை ஆவிக்குரிய வரங்களை உடையவனாக இருந்தாலும், அவனில் ஆவியின் கனியாகிய அன்பு காணப்படவில்லை என்றால் அவன் சபிக்கப்பட்டவனாகிறான்.

பரிசுத்த ஆவியானவராகிய நீர்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்டிருக்கும் கிறிஸ்தவன், அந்த போஷிப்பின் நிமித்தமாக இலையுதிராயிருக்கிற மரத்தைப் போலிருக்கிறான். ஆவியின் வரங்களாகிய செழிப்பான, பசுமையான இலைகள் அவனில் தோன்றி, நிலைத்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

வெளி அலங்காரமான தோற்றத்தில் செழிப்பான இலைகள் மட்டுமே மரத்துக்கு இருந்தால் அதனால் என்ன பிரயோஜனம்? இலைகளுக்காக மரங்கள் நடப்படுவதில்லை, கனிகளுக்காகவே தோட்டக்காரன் மரங்களைப் பராமரிக்கிறான்.

இலைகள் தேவைதான். பொதுவாக செழிப்பான மரமே அதிகமான கனிகளைக் கொடுக்கும். ஆனால் மரம் இலைகள் மூலமாக கனிகளையும் கொடுக்கவேண்டுமே! இயேசு எருசலேமுக்குப் போகும் பாதையில் அதிக இலைகள் இல்லாத பல அத்திமரங்கள் இருந்திருக்க கூடும், அவற்றைத் தேடி இயேசு போகவில்லை, அவற்றில் கனிகளையும் தேடவில்லை.

நல்ல செழிப்பான இலைகள் உள்ள மரத்தில் கனி இல்லையென்றால் அது சபிக்கப்படவேண்டியதாகிறது. இவ்விதமாக பரிசுத்த ஆவியானவரின் வரங்களினால் அலங்கரிக்கப்பட்ட மனிதனில் அன்பு என்ற கனி வெளிப்படாவிட்டால் அவனுக்கு ஐயோ!

மத்தேயு 7:22-23ல் செழிப்பான வரங்களையுடையவர்களைப் பற்றியும் மத்தேயு 25:34-40 கனிகளை உடையவர்களையும் இயேசு வித்தியாசப்படுத்திப் பேசுகிறார்.

முதல் பிரிவினர் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை திட்டவட்டமாக அறிந்திருந்தார்கள். நாங்கள் தீர்க்கதரிசனம் சொன்னோம், பிசாசுகளைத் துரத்தினோம், அற்புதங்களைச் செய்தோம் என்று அவற்றை தைரியமாக அறிக்கையிடுகிறார்கள்.

தாங்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதையோ அவர்கள் அறியவில்லை, தாங்கள் பிதாவின் சித்தத்தில் இல்லை என்பதை அவர்கள் அறியார்கள் (வ, 21).

தேவன், நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பார்ப்பதில்லை. எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்பதில் கூடுதல் கரிசனை உடையவராக இருக்கிறார். முகத்தை அல்ல, இருதயத்தையே அவர் பார்க்கிறார் (1 சாமு 16:7).

இரண்டாம் பிரிவினர் பசித்தவர்களுக்கு போஜனம் கொடுக்கிறார்கள். தாகமுள்ளவர்களின் தாகத்தைத் தீர்க்கிறார்கள். அந்நியரைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுக்கிறார்கள். வியாதியஸ்தரை விசாரிக்கிறார்கள், காவலில் இருப்பவர்களைப் போய் பார்க்கிறார்கள்.

மொத்தத்தில் அவர்கள் கனியை உடையவர்களாக இருந்தார்கள், அதே நேரத்தில் தங்கள் கனித்தன்மைகளை எப்போது வெளிப்படுத்தினோம் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள் (மத் 25:37-40). அவர்கள் வலது கை செய்வதை இடது கை அறியவில்லை (மத் 6:3).

அந்தரங்கத்தில் பார்க்கிற தேவனோ அவர்கள் இருதயத்திலிருந்து அன்பைப் பார்க்கிறார், ஆசிர்வதிக்கிறார், முதல் பிரிவினரையோ சபிக்கிறார்.

வரங்கள் மற்றும் கனியைக் குறித்த ஒரு முக்கியமான சத்தியத்தை நாம் கவனிக்க வேண்டும்.

1 கொரிந்தியர் 12 மற்றும் 14-வது அதிகாரங்கள் முழுவதும் வரங்களைக் குறித்தும், வரங்களின் செயல்பாடுகளைக் குறித்தும் அப்போஸ்தலனாகிய பவுல் விளக்குவதைப் பார்க்கிறோம்.

அந்த இரண்டு அதிகாரங்களுக்கும் இடைப்பட்ட 13-வது அதிகாரத்தில் ஆவியின் கனியாகிய அன்பு எத்தன்மையானது என்பதை பவுல் அறிவிக்கிறார்.

கனி எவ்வளவு முக்கியம் என்பதை இதிலிருந்து காண முடிகிறது. அன்பில்லாத நிலமையிலும் வரம் செயல்படக் கூடும். ஆனால் அதனால் எந்த நன்மையும் எவருக்குமே இல்லை என்பதை இவ்விதமாக பவுல் தெளிவுபடுத்துகிறார்.

1. நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.

2. நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாச முள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.

3. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

4. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.

5. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது.

6. அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.

7. சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.

8. அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்.

9. நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது.

10. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.

11. நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.

12. இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.

13. இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; **இவைகளில் அன்பே பெரியது.**





'பரிசுத்த ஆவியானவர்' என்னும் இப்புத்தகத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனின் வாழ்வில் கிரியை செய்யும்போது பெலன் கொடுக்கிறார். தனிப்பட்ட வாழ்வில் அவனைப் பரிசுத்தப்படுத்துகிறார். ஊழியம் செய்யத் திறமை வழங்குகிறார். அவனுடைய வாழ்வில் ஒரு புதுமையைக் கொடுக்கிறார்.

இந்த மேலான சத்தியத்தை சத்துருவானவன் கிறிஸ்தவ வட்டாரத்தில் சர்ச்சைக்குரிய உபதேசமாக மாற்றி, சிலர் இதை நம்பாதபடி மாற்றிவிட்டான். இன்னும் சிலர் இந்த உபதேசத்தை மட்டுமே அதிகமாக வலியுறுத்தி மற்ற சத்தியங்களை மறந்துவிட்டார்கள்.

சகோதரர் பி.வி.தியாகராஜ் அவர்கள் கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவராக இருந்தாலும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட நாள் துவங்கி, வேதத்தையும், பல ஆவிக்குரிய புத்தகங்களையும் கருத்தாய் ஆராய்ந்து அறிந்து, தேவனுடைய கிருபை பெற்றவராய், பல ஆவிக்குரிய புத்தகங்களை எழுதியுள்ளார். புதுவாழ்வு சபைக் கல்வித் திட்டத்தில் ஆசிரியராகச் செயல்படுகிறார். வேதபாடங்கள் எடுக்கிறார்.

இந்தப் புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அவர் வேதாகமத்தில் எப்படிக் கிரியை செய்து வருகிறார் என்பதைப் பல கோணத்தில் அவரைப்பற்றி விவரித்து, அவருடைய எல்லாச் செயல்பாடுகளையும் எழுதியுள்ளார். பரிசுத்த ஆவியானவரைக் குறித்த எல்லாச் சத்தியங்களும் மற்றும் உபதேசங்களும் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. இதைப் படிப்பவர்கள் பரிசுத்த ஆவியானவர் எப்படி மனித வாழ்வில், சபையில், உலகில் கிரியை செய்கிறார் என்று அறிந்து, அவர் கொடுக்கும் வரங்களையும் கனிகளையும் பெற்று, மேலும் அவரால் வல்லமையாக உபயோகப்படுத்தப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இப்புத்தகத்தைப் படித்து, மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்து இந்த கிறிஸ்தவ இலக்கிய வேத ஆராய்ச்சி ஊழியத்தை ஊக்கப்படுத்துங்கள்.

புதுவாழ்வு ஏ.ஜி.சபை
சென்னை 600 015.

Rev.D. மோகன்,
தலைமைப் போதகர்.